உ

கடவுள் துணை.

சித்தூர் ஜில்லா

# அதாலத்துக்கோர்ட்டு தீர்ப்பு.

பண்டிதர்

## மார்க்கசகாய ஆசாரியருக்கும்,

பஞ்சாங்கம் குண்ணையருக்கும்,

பஞ்சாயத்தார் முன்னிலையில்

விஸ்வபிராமணீகத்தைக் குறித்து

நடந்த வாதமும்,

பஞ்சாயத்தார் தீர்மானமும்.

மேஜல்லோட் துரையவர்கள் கொடுத்த

டைரியும்,

சித்தூர் ஜில்லா அதாலத்துக்கோர்ட்டு

மாட்சிமைபொருந்திய கவர்ன்மெண்டு

## டேக்கர் துரையவர்கள்

கொடுத்த தீர்ப்பும்,

பூவிருந்தவல்லி,

சுந்தரமுதலியாரது,

சுந்தரவிலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது.

1880.

உ

கடவுள் துணை,

4618

# விளம்பரம்.

இதனால் சகலருக்கும் தெரிவிப்பது யாதெனில், மதுரை புதுமண்டபத்தில் புஸ்தகஷாப்புக்கடைவியாபாரஞ்செய்யும் ம-ள-ள-ஸ்ரீ, ச-பீருகாதறுவி ராவுத்தரவர்கள் கடையிலும், திருநெல்வேலி பொஸ்தகஷாப்பு வியாபாரஞ்செய்யும் ச-பீ-சேகு அப்துல்காதிரு ராவுத்தரவர்கள் கடையிலும், தமிழ், துலுக்கு, கிரந்தம், தெலுங்கு, கையெழுத்தான புஸ்தகங்களும், யாழ்ப்பாணம் புதியபதிப்பு அகராதியும், ஆரியப்புலவரால் செய்த பாகவதகவியும், ஷாப்புவியாபாரமும்வேண்டியவர்கள் விலைசரசமாய்ப் பெற்றுக்கொள்ளலாம்.

இப்படிக்கு ஷெ குமாஸ்தா

ச-பீ-சேகு அப்துல்காதிரு ராவுத்தர்.

கடவுள் துணை.

# முகவுரை.

ஆதியில் அண்டபுவன சராசரங்களை யாவையும் படைத்த ஸ்வயம்பு விஸ்வப்பிரம்மம் தர்மார்த்தகாமிய மோக்ஷமென்னும் சதுர்வித பல புருஷார்த்தங்களை யாவரும் அடையும்படி இருக்கு யஜுர் சாம அதர்வணம் பிரணவமென்னும் ஐந்துவேதங்களை அளித்தார்.

அந்த வேதங்கள் நான்கு வர்ணாச்சிரமங்களுக்கும் பொதுவாகையால் வியாசன்முதலிய ரிஷிகள் விஸ்வப்பிரம்மகுலத்தாரிடத்தில் கற்றுணர்ந்த ஐந்துவேதங்களை நான்கு வேதங்களாகவும் பஞ்சமுகப் பிரம்மாவை நான்முகப்பிரம்மாவாகவும் புரட்டி பஞ்சமூர்த்திகளில் திரிமூர்த்திகளை பதினெண்புராணங்களில் புகழ்ந்தும் இகழ்ந்தும் அநாதியான வேதாகமபுராணங்களை தங்கள் பரம்பரைக்கே பாத்தியமென்றும் மற்றவர்கட்கு பாத்தியமில்லையென்றும் தங்களிஷ்டப்படிக்கே அந்தவேதாகமங்களைத் தொகுத்து அதில் தங்களையே மேலான சாதியென்றும் மற்றவர்கள் கீழானசாதியென்றும் ஸ்தாபித்து இத்தேசத்தில் நான்கு வர்ணாச்சிரமத்தாரும் ஜாதிபேதமென்பதில்லாமல் ஒருமையாயிருந்தவர்களை இப்படி செய்துவந்ததையன்றியும் பின்பு ஒருவர்க்கொருவர் கூடாமல் செய்திருக்கிறார்கள் எப்படியெனில் பலசாதியென்றும் பலமதமென்றும் பலதெய்வமென்றும் பிரதிமாபேதப் படுத்தினதை சில போதகர்கள் என்சாதிமேல் உன்சாதிகீழென்றும் என்தெய்வம் பெரிது உன்தெய்வம் சிறிதென்றும் இப்படியாக அபிமானத்தை வளர்த்து ஒற்றுமையையும் நீதியையும் உண்மையையும் கைவிடும்படி செய்துபோட்டார்கள் இதைச்சென்னப்பட்டணம் விஸ்வப்பிரம்ம சபையார் யோசிக்கும்படியாகி இவ்வருமதியை அச்சிட்டார்.

ஆதியில் சித்தூர்ஜில்லாவில் பஞ்சகர்த்தராகிய மார்க்கசகாய ஆசாரியாரும் பஞ்சாங்கம் குன்னையருக்கும் நடந்த விவாதங்களைக்குறித்து மகாகனம்பொருந்திய சித்தூர்ஜில்லா அதாலத்துக்கோர்ட்டு ஜட்ஜி டேக்கர்துரையவர்கள் கொடுத்த தீர்ப்பினால் தர்மார்த்தகாமியமோக்ஷமென்னும் சதுர்வித புருஷார்த்தங்களும் நீதிகளும் இத்தேசத்தில்வந்து குடிகொண்டிருக்கும்படி அழுக்காறுமுதலிய துர்க்குணங்களை அறத்தொலைத்து ஓட்டி நன்மார்க்கருக்கு ஆதாரமாகவிளங்குகின்ற அந்த ஜட்ஜியவர்களின் தீர்ப்பு யாவருக்கும் நன்றாய்த் தெரிந்திருக்க

# அந்தாலத்துக்கோட்டுதிப்பு.

மா - ஆ - ருக்வேதம் மூன்றாவது உபநிஷத்தின் சுத்தார்த்தவாக்கியத்தில்.

தஸ்யாத்தியேவக்ஷிகா அணியோர்த்வாவ்யவஸ்தி

ஓம்த்ர த்யேகாக்ஷரம் ப்ரம்மஹவியாஹரத்,

తస్మాద్యేవ ... యోర్ధ్వావ్యవస్థితః।
ఓంకారం ... ప్రజ్ఞానం బ్రహ్మ వ్యాహరేత్।

என்று சொல்லியபடி அந்த விராட்விஸ்வப்ரம்மமாகியபரப்ரம்மம் ஆதியந்தமும் அருவ உருவங்களும் குணகுறிகளும் இல்லாதவனாய் நிர்மல நிஷ்கள வஸ்துவாயிருக்கின்றனர்.

(௧) ப - கு - அந்தப்பரம்மம் அருவ உருவங்களற்றவனென்றீரே அப்படிக்கிருக்க விஸ்வப்ரம்மமென்று சொல்லும் விதியென்ன

மா - ஆ - அந்தவிராட் விஸ்வப்ரம்மத்தை அந்தர்முகமாய் நோக்குகையில் அருவ உருவங்களற்றவனென்றும் பகிர்முகமாய் நோக்குகையில் ரூபமுடையவனென்றும் சொல்லவேண்டியதாயிருக்கின்றது அதனெப்படியென்றால் உலகத்திலகாணும் சிருஷ்டிகள்யாவும் அவரல்லாமல் இல்லாமையால் அதுகள் அவரேயென்றும் அந்த சிருஷ்டிக்கர்த்தாவை ரூபமுள்ள காரணமக்குதிட்டமில்லையாகையால் அரூபமென்றுஞ்சொல்லலாயிற்று,

(௨) ப - கு - ப்ரம்மத்திற்கு பகிர்முகத்தில் ரூபமுண்டென்றீரே அதைவிபரமாய்த் தெரிவிக்கக்கோருகிறேன்.

மா - ஆ - விராட்விஸ்வப்ரம்மத்திற்கு அண்டாண்டபிரம்மாண்டங்களே சரீரம்அதுவெப்படியென்றால் பிரமனென்றுசொல்லும்பிருதிவு அந்த விராட்விஸ்வப்ரம்மத்திற்குப் பாதமென்றும் விஷ்ணுவென்னும் அப்பு தொப்புளென்றும் உருத்திரனென்னுந் தேயு மார்பென்றும மகேஸ்வரனென்றும் வாயுமார்புமுகல் புருவமத்தியமென்றும்சதாசிவமெனச்சொல்லும் ஆகாயசிரசென்றுஞ் சொல்லப்படும்

அந்தப்பிரம்மத்திற்குச் சந்திரன்மனது திக்குக்களே காது விஷ்ணு தோள்கள் அக்கினியே வாக்கு மிருத்யுவே குதம்வாயுவே தொக்கு சூரியனே கண்ணன் வருணனேநாவு பூமிதேவியே மூக்கு அக்கினியாமியே புருஷன் இவைகளே அப்பிரமத்திற்கு தேகம் அந்த விஸ்

# சித்தார்சில்லர்..

ப்பிரம்மமானது சிற்றுருவாகிய ஜீவன்களில் ஸ்தூலம் சூக்ஷமம் காரணம் குடஸ்தம்பம் பிரமனெப் பஞ்ச அங்கங்களைப்பெற்று இருப்பதால் பஞ்சேந்திரியத்தில் மனதைச் செல்லவொட்டாமல் நிறுத்திப் பிரணவவேதத்தில் கூறியிருக்கும் விதிப்படி பழக்கப்படுத்தால் அந்தப்பிரம்மத்தை தெரிசிக்கலாம.

(ரு) ப - கு - பிர்மாண்ட பிண்டமாகிய அப்ரம்மம் வேறுசிலர்களாகிய நாம் வேறாயிருக்க நம்மில் அவர்சிற்றுருவாய் நிறைந்திருக்கின்றீரே அதுவெப்படி.

மா - ஆ - சுருதிப்பிரமாணம்.

இருஷிகேசவிபுநாஜோ பாதகடாதத்தபேதாத்
ஆகாச பாதநாத்பின்னதத்தநாநாசேஷு நிர்வாலயதி

హృషీకేశవిభుఃనానా ఘటాదిభేదాత్ ।
ఆకాశ ఇవ భిన్నస్తన్నానా తేషు కేవలో భవతి ।

என்கிற இதிலேமனதிபிந்திரியங்கள் அனைத்துக்கும் அதிபதியாய்ச்சர்வவியாபகனாகிய விஸ்வப்ரம்மமானது நானாவிதமானஸ்தூலசூட்சம் காரண கூடஸ்தகமாகிய உபாதிகளிலே பிரமமாக பிரதிபலித்தவனாகி அந்த உபாதிபேதத்தினாலே கடாதிகளால் வேறுபட்ட ஆகாயமானது எப்படியிருக்கின்றதோ அப்படியே வேறுபட்டவனைப் போல அந்த விஸ்வப்ரம்ம சீவர்களில் பிரகாசிக்கின்றது அந்த உபாதிகளுக்கு நாம்வந்தபோது வஸ்துவேயாகின்றார் இவர் அனாதிவஸ்துவென்பதற்கு மூலஸ்தம்பம்பிரமாணம.

நபூமிர்ஜலஞ்சைவா நதேஜோ நசவாயவ
நசாகாசமநசித்தஞ்சா நபுத்தியாக்ருணகோசரம்
நசப்ரம்மநவிஷ்ணுச்ச நசருத்ரச தாரகா
சர்வசூன்யநிராலம்பஸ்வயம்பூவிஸ்வகாரண

నభూమిఃచలం నైవ నతేజో నచ వాయవః
నచాకాశమనఃచిత్తంచ నబుద్ధిర్ఘ్రాణగోచరః ॥
నచబ్రహ్మా నవిష్ణుశ్చ నచరుద్రశ్చ తారకాః ।
సర్వశూన్యనిరాలంబస్వయంభూ విశ్వకారణః ॥

என்னும் இதிலே பூமியும் சலமும்அக்கினியும் வாயுவும்பிரகாசமும் ஆகாசமும் புத்தியும் நக்ஷத்திரமும் பிரம்மாவும் விஷ்ணுவும்ருத்திரனும இவைமுதலானவை ஒன்றுமில்லாத சர்வசூன்யமாயிருந்தகாலத்தில் ஸ்வயம்புவிராட்விஸ்வப்ரம்மாவானவர் சுயரூபமாயிருந்தார்

அந்த ஸ்வரூபத்தில் நின்றும் பஞ்சமுக சம்ராட்டாகிய விஸ்வப்பிரம் மாவுண்டாயினர் அவருடைய சுயரூபதியானமோவென்றால் சத்தி யோசாதம் வாமதேவம் அகோரம் தற்புருடம் ஈசானியமென்னும்பஞ்ச முகதியானத்தால் சானககளுதன அபுவனுசு பிரத்தனச்சுபானசன என் னும் நாமதேயமுடைய மயத்துவஷ்டச்சில்பி விஸ்வக்ஞ என்னும் ப ஞ்சரிஷிகள் உற்பவமானார்கள் இந்தபஞ்சபிரம்மாக்களாலும் ப ஞ்சசக்திகளாலும் சிருஷ்டி திதிசங்காரம் திரோபவம் அநுக்கிரகமெ ன்னும் பஞ்சகிருத்தியங்கள் நடந்தேறிவருகின்றன.

(க) ப-கு-பஞ்சகிருத்தியத்தில் சிருஷ்டிஎவ்வாறு,

மா-ஆ-பூமிசார பூதவிபரீதகையால தேவர் மக்கள் விலங்கு புள் ஊர்வன நீர்வாழ்வன தாவரமென்னும் எழுவகை எண்பத்துநான்குநூறாயிரமாகி அ லைகளில் ஆணெண் இரண்டுஜாதியாய் ஜீவாத்துமாக்கள் பிரதி யவிருத்தி வாழையடிவாழையாய் உற்பவித்துவருதலே சிருஷ்டி பிருதி வியின் செய்கையாகிய இதுதான்பிரம்மாவென்று சொல்லப்படும்,

(உ) ப-கு-திதிகிருத்தியம்செய்பவர்யாவர்

மா-ஆ-அப்புவியின் அம்சம்பிருதிவியின் செய்கையை அதிகரிக்க வொட்டாமல் தங்கதாமே வியாபித்து பிருதிவியினால் உற்பவிக்கு ஜீவாத்துமாக்களுக்கு காலத்தை விலக்கிக் காப்பாற்றுவதுதான்திதி யென்பது இதுதான அப்பு இதைஅப்புதத்துவ விஷ்ணுவென்றுசொ ல்லப்படும்,

(ங) ப-கு-சங்காரகிருத்தியஞ் செய்பவரார்

மா-ஆ-தேயுவின் அம்சம் அப்புவின் செய்கையை அதிகரிக்க வொட்டாமல் அடக்கிப்பிருதிவியின் செய்கைபாலுற்பவித்த ஜீவாத் மாக்கள் கலந்து விருத்தியாகும்போது வாதபித்தமென்ற வியாதி கள் ... அழிப்பதுவே சங்காரம் இதுதான் தேயுவாகையால ருத்திரனென்று சொல்லப்படும்.

(ச) ப-கு-திரோபவமாவதென்ன

மா-ஆ-திரோபவமாவது வாயுவின் அம்சம் எங்குந்தானாயுலா வி தேயுவின் அம்சத்தை அதிகரிக்கவொட்டாமல் உலகத்தைப்பா துகாத்து ஜீவாத்துமாக்களின் பரிசவேதியிற்கலந்து விருத்தி செய்கு கும்போது சத்துவகுண பிரதானமாய் அந்தக்கரணங்கள் அடங்கியி ருப்பது திரோபவமாகையால இதுதான மயேஸ்வரனென்று சொல லப்படும்.

. சித்தார்த்திலே; ;

(௰) ப்ர. கு. அநுக்கிரகமாவதென்ன

ம-ஆ-அநுக்கிரகமாவது ஆகாயத்தின் செய்கை விராட் விஸ்வ பிரம்ம ஜோதிசொரூபமாகிய பரவெளியில் உதயமாகிவாயுவின்செய்கையை அதிகரிக்கவொட்டாமல் தனக் குட்படுத்திக்கொண்டு அவ்வாயுவின் அம்சம் விஜ்ரும்பிக்கும்போது அதிதீவிர பக்குவமுள்ள சத்தஜீவாத்மாக்களுக்கு ஒளியாக வெளிப்பட்டு விஸ்வப்பிரம்மத்தின் சிதம்பர தேசகத்தால் பாலொடுநெய்போல பரிபூரணத்தையும் தருவது ஆகாயத்தின் செய்கையாகிய அநுக்கிரகமென்றறிக இந்த அநுக்கிரகந்தான் சதாசிவமென்று சொல்லப்படும்.

(௧௧) ப்ர. கு. பிரமம் வம்மிசத்தின் விதியாவதென்ன

ம. ஆ. பிரம்ம வம்மிசத்தில் மநுவாசாரியென்பவர் அயிருக்கிடையும் ருக்குவேதபாராயணமும் அத்தியாபனமும் ஹோமகுண்டங்களில் சிருஷ்டித்தொழிற்குதவிய சாமானசொரூபமென்கிற ருத்திரசிருஷ்டியென்று சொல்லப்படும். அதனைச்செய்கை வேதம்

அயாமனுருக்சாதம் యామనుఋగ్జాతం

என்னும் வேதவாக்கியப்படி ருத்திரரூபமாகிய சத்தியிற் சமஸ்த வர்ணாச்சிரமங்களும் சிருஷ்டிபரிபாலனமாகும்படி. செயப்பட்டு ருபவித்த அக்கினி உத்திகொடியை தாயவேறு பிள்ளைவேறாக்கண்டு சுற்றின தாமமோக்ஷ காரியமோகமென்கிற சதுர்வித புருஷார்த்தங்களும் விளங்கும்படி காமுகி கந்திமுகி ஜ்வாலாமுகி எழுதநாளி முகி இவையெல்லாம் உலகசம்பாஷணை செய்துவருவது ருத்திரனென்று யஜுர்வேதத்திலேசொல்லியிருக்கிறது இவர்தான் மநுவாசாரியார்.

(௧௨) ப்ர. கு. மயாசாரி கிரணமாவதென்ன

ம. ஆ. மயாசாரி கிரணமாவது

மயாசாமஜாயத మయాసాయయుః స్తథా

என்னும் வேதவாக்கியப்படி யஜுர்வேதபாராயணமும் சகலசிவாத்துமாக்களும் உயிர்வாழும்படி தாருசிருஷ்டியும் தேவாலய கோபுரங்கள் சகலவித சாமான்களும் விசித்திரமாய் செய்து சொல்லுகிறபடியும் விசிஷ்டமனையுடையவர்தான் மயாசாரியார்.

௧௩. ப்ர. கு. துவஷ்டாசாரி கிரணமாவதென்ன

ம. ஆ. துவஷ்டாசாரி கிரணமாவது வேதம்.

தவ்யுரேதுவஷ்டாஜாயத

త్రష్టారజాసాయంశీలా

என்னும் வேதவாக்கியப்படி தாம்பிர சிருஷ்டியும் சாமவேதபாராயணமும் கருக்கட்டி யுருக்காட்டிய ஷண்மகஸ்தாபன விக்கிரகங்களும் பாகசாலையில் கல்சாவாகம் தூபதீபமுதலிய கருவிகளும் பிர்மாவினுடைய தொழிலென்று யசர்வேதத்திற் சொல்லுகின்றமையால் அந்தப்பிர்மாதான் துவஷ்டாசாரியார்

கச-ப-கு சிற்பியாசாரி நிர்ணயமாவதென்ன

. மா-ஆ சிற்பியாசாரி நிர்ணயமாவதுவேதம்

சிலாசில்பி, அதர்வணவஹா శిల్పిధర్వాణః త్వష్టః

என்னும் வேதவாக்கியப்படி அதர்வணவேதபாராயணமும் முப்பத்திரண்டு சில்பமும் சண்மதஸ்பானமும் கோபுரஸ்தூபமுதலிய சதுகோடி தேவதா நிர்மிதோத்தாரணமும் வேதமந்திரபீஜஆவாய பிரம்மஞ்ஞானங்களுக்கு நியமநிஷ்டா நிஷ்டா அஷ்டாங்கயோக சமாதிநிரியாலம்பாத அத்வைதப் பிரம்மசொரூபமென்கிற விராட் விஸ்வபிர்மத்தை வணங்குவதற் கேதுவாகியும் தேவர்களுக்கு ஸ்தபதியாசாரியார் இருந்து சமஸ்தாந்திர அம்சையினால் சர்வதாரதவதைகளும் அஷ்டாங்கசர்வமும் மோக்ஷமடைவதென்று சிற்பவாசாரியினுடைய சிருஷ்டியே தேவேந்திரனுடைய சிருஷ்டி யென்றும் யசுர்வேதத்திற் சொல்லியிருக்கின்றது அந்த இந்திரன்தான் சிறபாசாரியார்.

கஇ-ப-கு விஸ்வக்ஞஆசாரி நிர்ணயமாவதென்ன

. மா-ஆ-விஸ்வக்ஞஆசாரி நிர்ணயமாவது வேதம்

ரஷ்டபியஸ்வாரா த்ருபிரணவம் రాష్ట్రస్య గోచ ప్రణవంపం

பத்ரசப்பிரம்ம விதியயதே చబ్రహ్మవిధీయతే

என்னும் வாக்கியப்படி பிரணவவேத பாராயணமும் தியபத்திரிக்சகோடி தேவதைகளும சமஸ்த வர்ணாசிரமத்தாரனும பிரகாசமபொருந்தின சுவர்ணங்களினால் சத்திருபாணுதிகளை சிருஷ்டித்ததும் அஷ்டபலவர்ணங்களும் அஷ்டவிவாகத்திற்குட்பட்ட வர்ணாசிரமங்களின் அனமையாபாகளால் உற்பத்தியான அநுலோமன் பிரதிலோமன் அம்பாபான் கன்னான் குண்டன் கோளன் முதலானவர்கசபீஜ நீஷிதமில்லாமல் மாங்கல்யமென்கிற முத்திரியை சிருஷ்டித்து மேற்சொல்லியவர்களை குளபுத்திரர்களாக்கி சதுர்வித புருஷர் தங்களுடையுடபடி அநுக்கிரகஞ்செய்வது சூரியசிருஷ்டியென்று எசுர்வேதத்தில் சொல்லுகின்றது அந்த சூரியன்தான் விஸ்வக்ஞஆசாரியார் இந்த லிங்குவித பிரம்மகர்மங்களை யனுஷ்டித்துவருவதினால் உலகசம்ரட்சணையென இருக்கு யசுர் சாமம் அதர்வணம் பிரணவம் மூலமந்மபம் ஷட்சாஸ்திரம் அஷ்டாதசபுராணங்கள் ஆகமசித்தாந்த இதிகா

சித்தார் ஷில்லர்,

சங்கள். வச்சிரசூசி ஈசகண்டம் சிற்பநூல் முப்பத்தாறடியில் விச்சுவ கருமம் விச்சுவேசம் விச்சுவசாரம் விருத்தம் நாலட்டம் ஸாம்கியம் அநுமான் பானு கற்பாரியம் சிருட்டம் மானசாரம் வத்துவித்தியாப தி, பாராசாரியம், அரிடிகம், சயித்தகம் வாத்துபோதம் விச்சாரம் இ ந்திரம், வச்சரம், சௌமம், விச்சுவகர்மம், மகத்திரம், விசாலம் சித்தி ரம், காசிபகாலயூபம், காமசங்கிதை, சாத்திகம் விச்சுவபேதகம் ஆதி சாரம் வெகுச்சுருதம் மானபோதம் முதலிய பல நூல்களிலுஞ் சொல் லியிருக்கிறது மேலும் இந்த ஐந்து சிருஷ்டிக்கும் பிரிஞ்சி உலகமில்லை யென்றும் அதுவே பஞ்சகர்த்தாக்கள அவதார சொருபமென்றும் ய சுர்வேதத்திற் சொல்லியிருக்கிறது.

மனுப்பிரம்மணே உமாஹேஸ்வராப்யாம்நம:
மயப்பிரமணே லட்சுமிநாராயணாப்யாம்நம:
துவஷ்டப்பிரம்மணே வாணிஹிரண்ணியகர்ப்பாப்யாம்நம:
சில்பிப்பிரம்மணே சசிபுரந்தராப்யாம்நம.
விஸ்வஜ்ஞப்பிரம்மணே ஸவிதபாஸ்கராப்யாம்நம

మనుబ్రహ్మణే ఉమామహేశ్వరాభ్యాంనమ
మయబ్రహ్మణే లక్ష్మీనారాయణాభ్యాంనమః
త్వష్టబ్రహ్మణే వాణీహిరణ్యగర్భాభ్యాంనమః
శిల్పిబ్రహ్మణే శచీపురందరాభ్యాంనమః
విశ్వజ్ఞబ్రహ్మణే సవితాభాస్కరాభ్యాంనమః

என்றும் வேதவாக்கியத்தின் பொருள் மனுப்பிரம்மாவுடைய சிரு ஷ்டியே உமாமகேஸ்வராகிய ருத்திரன்தொழிலென்றும்,

மயப்பிரம்மாவினுடைய சிருஷ்டியே லட்சுமிநாராயணஸ்வரூபமா கிய விஷ்ணுதொழிலென்றும்,

துவஷ்டபிரம்மாவுடைய சிருஷ்டியே வாணிஹிரண்ணியகர்ப்பரா கிய பிரம்மாவினுடைய தொழிலென்றும்,

சில்பிரம்மாவினுடைய சிருஷ்டியே சசிபுரந்தராகிய தேவேந்தி ரன்தொழிலென்றும்,

விஸ்வஜ்ஞபிரம்மாவுடைய சிருஷ்டியே சவிதாபாஸ்கராகிய சூரியன் தொழிலென்றும்,

விராட்விஸ்வ கர்மணேநம
ஸ்விராட்விஸ்வ கர்மணேநம.
ஸம்ராட்விஸ்வ கர்மணேநம,

## அநாலத்துக்கோட்டுதீர்ப்பு.

విరాడ్విశ్వకర్మణే
స్వరాట్ విశ్వకర్మణే
సంమ్రాడ్విశ్వకర్మణే

என்றும் விராட்பிரம்மமே விஸ்வப்ரம்மா ஸ்வரூபமென்றுஞ் சுவராட்பிரம்மமே விஸ்வப்பிரம்மா ஸ்வரூபமென்றும் சம்மராட்பிரம்மமே விஸ்வப்பிரம்மா ஸ்வரூபமென்றும் பிரம்மமென்பதும் பிரம்ம கர்மமென்பதும்

(௧௬) ப-கு க்ஷத்திரியருடைய விதியாவதென்ன

மா-ஆ க்ஷத்திரியர்களில் சூரியவம்சம் சந்திரவம்சம் அக்கினி வம்சமுதலான அம்சம் க்ஷத்திரியர் ஐம்பத்தாறுதேசமுதலான திவ்விய ஸிம்மாசனத்தின்றவர்கள் முடி கொடைமுதலிய தசாங்கத்துடனே வேதமோதுதல் யாகஞ்செய்தலும் இரப்பவர்க்கீதலும் ஆயுதவித்தையிற் பழகுதலும் பகைவரை யழித்தலும் ஆகிய ஷட்கர்மமுடையவராய் வீரமுள்ள சேனைகளும் செல்வமுள்ள குடிகளும் மாறாத பொருள்களும் மதிநுட்பமுள்ள மந்திரியும் அன்புள்ள நட்பும் பகைவராமல் அழிக்கப்படாத கோட்டைகளும் பதினெண்வகை வழக்குகளை மனுநீதியின்படி தீர்க்கின்றவர்களே க்ஷத்திரியர்கள்.

(௧௭) ப-கு வைசியர்கள் மார்க்கமென்ன

மா-ஆ வைசியர்களின் மார்க்கமாவது தராசுநிறையும் தர்மதானநிதானமும் உபகாரநன்பமும் தேவா பத்தியும் காரியசித்தியும் சந்தியாவந்தனமும் புத்திபுத்தியும் வேதவித்தையும் பெற்றவர்களே வைசியராவென்னலாயபடும்.

(௧௮) ப-கு சூத்திரர்களுடைய விதியாவதென்ன,

மா-ஆ சூத்திரர்களுடைய விதியாவது ஆதியில் விஸ்வபிரம்ம வம்சத்தார் இந்தப் பூச்சக்கரத்தை குறிஞ்சி பாலை முல்லைநெய்தல் மருதமென்னும் பஞ்சநிலமாக பகுத்ததில் இன்னகாலத்தில் இன்னபொருள் விளையுமென்றும் அதனை இன்னவிதமாய் பயிரிடவேண்டுமென்றும் கற்பித்தபடியே உயிர்களைக் காப்பாற்றுவது சூத்திரனுடைய பெருமையானதால் அந்த சூத்திரன் தேவர்கள் முதலாகிய பிதுர்களெல்லாவருக்கும் திருப்தியடையச் செய்ய உணவுகளைத் தருபவன் வேதாகமங்களுக்கு மாறாக விதி வழுவாதவனே சூத்திரனென்று சொல்லப்படும்

(௧௯) ப-கு பிரமசாரிவிதியாவதென்ன.

மா-ஆ குருபக்தியில் தொண்டுபூண்டிருப்பதும் வேதம் வாசித்தலும் நிலத்திற்படுக்கலும் நித்திய ஸ்நான விரதமும் உத்தமர்சே

சமும் தேவலாயதரிசன பணிவிடைகளும் செய்பவர்க்கும் பெற்றிருப்பவன் பிரமசாரி.

ப - கு - இந்தப்பிரமசாரிக்குப் பதவியென்ன,

மா - ஆ - சாலோகபதவி.

ப - கு - சாலோகபதவியாவதென்ன.

மா - ஆ - விராட்டுவிஸ்வபிரம் மம்உலகத்தில்வாழ்வதுவே சாலோகபதவி.

உய. ப - கு கிரகஸ்தன் விதியாவதென்ன

மா - ஆ - தருமமாகத் தேடியபொருளை பிரமசாரி முதலிய பதின்மருக்கும் பிரித்துக்கொடுத்து தேவாலயபணிவிடை திருவிழா செய்து வேதவிதிவழுவாது விரதோபவாசமிருந்து அசுத்தியம்மாறாமல் ஆசாரியரைவாழ்த்தி சொல்தவறாதவருடன்கூடி வாழ்வது இல்லற தர்மமாம்.

ப - கு - இந்தகிரகஸ்தனுக்குப பதவியென்ன

மா - ஆ சாமீபமென்னபபட்ட பதவி

ப - கு - சாமீபமென்பதென்ன

மா - ஆ - விராட்டுவிஸ்வபிரம்மத்தின் அருகில்வாழ்வது சாமீபதவியாம்.

(உக) ப - கு - வானபிரஸ்தன் விதியாவதென்ன

மா - ஆ - கற்புடையமனைவியுடனாவது தனித்தாவது மெய்யான் அன்பில் உழலாமல் தன்வசத்தாகிய விரதமுதலியதவம் புரிந்துவபுததிரனாக இருப்பதுதான் வானபிரஸ்தன்விதி,

ப - கு - இவர்களுக்குப்பதவியென்ன.

மா - ஆ - சாரூபமென்பது,

ப - கு - சாரூபபதவியாவதென்ன.

மா - ஆ - விராட்டு விஸ்வபிரம்ம போல ரூபித்திருப்பது சாரூபபதவியாம,

(உஉ) ப - கு - சந்நியாசிவிதியாவதென்ன,

மா - ஆ - பிரணவவேத விதிவழுவாமல் தத்துவபேதாபேதம் தறிந்து இருவினை மும்மலம அகற்றி பாசபந்தத்தோடக களைந்து காமிமானம் வெறுத்துப் பற்றசசுதக சைதன்னிய பரமானந்தயோகி விதியாம்.

ப - கு - இவர்களுக்குப பதவியென்ன,

மா - ஆ - சாயுச்யபதவியாம.

ப - கு - சாயுச்யபதவியாவதென்ன

## அதாலத்துகோட்டுதீர்ப்பு.

மா - ஆ - ஆ, குண்டையனே நானுமில்லை நீயுமில்லை நானென்று பத்தாலுமில்லை நானுந்தானுமிருக்கும் சாயுச்சியம் அந்தசாயுச்சிய மாவது விராட்டுவிஸ்வப்பிரமத்தில் ஐக்கியமாம்.

## சி வ சி ரு ஷ் டி.

(௨௩) ப - கு - ஆண்பெண் உற்பத்தி பேதமாவதென்ன

மா - ஆ - ஆண்பெண் உற்பத்திபேதமாவது மாதவிடாய் ஆன பின்பு ௪ - ௮ - ௰ - ௧௨ - ௧௪ - ௧௬ - இவ்விரட்டித்த நாள்களில் கற்பந்தரித்தால் ஆணாகவும் ஐந்துமுதல ஒற்றைப்பட்ட நாள்களில தரிப்பது பெண்ணாகவும் உற்பவமாம் இதன்றியில் இடகலை பாயுமாகில் பெண் பிங்கலைபாயுமாகில் ஆண் சுழிமுனைசொக்குமாகில் அலி அல்லது ஆணியம மேலும்புணர்ந்தவுடன் இடதுபாகம் படுப்பாளாகில் பெண் வலதுபாகம்படுப்பாளாகில ஆண் மல்லாந்துபடும்பாளாகில் இரட்டைபிள்ளைகள அல்லது பூர்ணியமென்று மனுஸ்மிருதியிற் சொல்லுகின்றது.

(௨௪) ப - கு - விஸ்வப்பிரமத்தின் நிலையாவதென்ன,

மா - ஆ - அளவிடப்படாத சமுத்திரத்தினிடத்து அலைநுரை நிவலை குமிழிகளைத்தோன்றச்செய்து மறுபடியும் அந்தச்சமுத்திரத்தில்தானே யொடுக்கிக்கொளவதெவ்வாறோ அவ்வாறே அண்டபுவனசராசரங்களையும் படைத்து மாயாசொரூபதேக ஆன்மகோடிகள்காலம் ஒருமென்றும் நிலைபெறாநிற்கும் உணர்வே விராட்டுவிஸ்வப்பிரம்ம நிலை யென்னப்படும்,

## வி யா ச ர் உ ற் ப த் தி.

௨௫ ப - கு ஓ - மார்க்கசகாய ஆசாரி வியாசோ நாராயணோ ஹரி என்னும வாசகப்பிரகாரம் நாராயணனே ஜான்குருசாமியாகிய வியாசபகவானாய் அவதரித்து நான்கு வேதங்களைச் சிக்கறுத்துப் பதினெண்புராணங்களை உற்பனஞ்செய்தன னென்பது மெய்மையல்லவோ.

மா - ஆ - பஞ்சாங்கக்குண்டையனே உமக்குறியகுலகுருவாகிய அந்த வேதவியாசரில் உற்பவம் அறிந்ததில்லையோ அதை நான் சுருதிப் பிரமாணமாக அறிவிக்கின்றேன் அஃதாவது ஊர்வசியென்னும் தாசி வயற்றில் பிறந்தவன் வசிஷ்டமுநி வசிஷ்டமுநிக்கும் சக்கிலிச்சிக்கும பிறந்தவன் சத்திமுனி சத்திமுனிக்கும் புலைச்சிக்கும்பிறந்தவன் பராசர்முனி பராசரமுனிக்கும் மீன்வாணிச்சிக்கும் பிறந்தவன் வியாசமுநி இந்தவியாசமுநிவர் அக்கியானத்தைக் கியானமாகவும் கியானத்தை அக்கியானமாகவும் அமுர்தத்தைவிஷமாகவும் விஷத்தை அமிர்தமாகவும் செய்யத்தக்க தந்திர இந்திர ஜாலமுடையவன் அந்த வியாசன் ஆதியில் விஸ்வப்பிரம்மகுலத்தாரை அடுத்து வேதாகமபுராணங்களைப்

படித்து குப்பை உயர்ந்து கோபுரத்தாழ்ந்தென்றும பழமொழிக்கிணங்க விப்பிரசிவியாசனென்னுஞ் சிறப்புப்பெயர்பெற்று வேதம புராணங்களைத் தன்னுடைய குலத்தாருக்குப்போதித்து வியவகாரம பேசியவர்களை வாதித்து தன்னிலுந் தன்னைக்காக்கும் வேலி பயிரைக் காக்கும என்பதுபோ லாக்கிவிட்டதுமல்லாமல தனக்கு வேதம் ஓதவைத்த விஸ்வபிரம்மகுலத்தாரைப்பார்த்து சகலருக்குந் தன்னோதைத்த குருத்துரோகி யென்றுசொல்லும பெயரையிட்டு ஆதிபூர்வீகதுவேதங்களாகு நாலுவேதங்களாயும பஞ்சமுகப்பிரமமாகிய நான்குமுகப் பிரம்மாவெனறும பஞ்சமூர்த்திகளை திரிமூர்த்திகளும பழமையாகிய பதினெண்புராண கருத்துக்களையும மாற்றி திரிமூர்த்திகளை யிகழ்ந்தும் சில இடங்களிற்புகழ்ந்தும தன்மதங்கோட்டென மதிமூத்தும சவைபாலம பண்ணிவிட்டதுமல்லாமல ஞானகாண்டம கிரமத்தையும நான்குவர்ண ஒழுக்கத்தையும் சமயபேதமில்லாத மார்க்கத்தையும் சாதிபேதமில்லாத ஐக்கியத்தையும் கல்விபோத உத்தம நோக்கத்தையும் கெடுத்து பலவித மித்திரபேதங்களினால அயோக்கியாட்டி விஸ்வபிரமத்தைத் தொடவொட்டாமல தடுத்து உலகெங்கும மகிழ்ந்து தன்னுடையமதிப்பினால இவ்வாறு உலகமாகத் துசெய்யப்பட்டுத்திக்கெட்டுத்து ஒருவாகத்தெரியாத போஜராஜ பிரதாபனால லாமலும் கொள்வன கொடுப்பன இல்லாமலும் செய்து விபரீதப்படுத்திக் தாமும தனனினத்தாரும வாழ்ந்துவந்தார்கள்.

இந்த வியாசன்றாயாகிய மச்சகெந்தியென்னும பரிமளகெந்தியை இரண்டாவது சந்தனுராஜன் கலியாணமபண்ணிக்கொண்டு அவளிடத்தில சித்திராங்கதன விசித்திரவீரியன் என்றும இரண்டுபேரைப் பெற்று சிலநாளைக்குப்பின்பு சந்ததியில்லாமல் இறந்துபோகவே விசித்திரவீரியன பெண்சாதிகளான அம்பிகை அம்பாலிகையாகிய இரண்டுபேர்களை வியாசன்புணர்ந்து திருதராட்டிரன் பாண்டு யென்பவர்களைப பெற்றானென்று பாரதத்தில சொல்லியிருக்கின்றது இந்தவியாசன கைம்பெண்களைப புணருவதற்கென்னவோ பதினெண்புராண முதலிய நூல்களிலும கொடாதானென்று சொல்லியிருக்கின்றது.

இந்த வியாசன் வம்மிசமுதலானதும கலியுகம்பிறந்து வெகுகாலத்திற்குப்பிறகு பலவிதமாதருக்கும் பிறந்திருக்க இவனைப்பற்றி அவயோபாபுத்தில இருந்ததாகவும தான பாண்டுவமிச கைம்பெண்களைசேர்ந்து தலவுருத்திசெய்ததாகவும கூறியிருக்கிற பொய்களை மனோ ஒருபோதும நம்பமாட்டார்கள் காலப்புரட்டன கட்டுப்பாட்டுக் கதைகளை அவன்குலமாயிருக்கிற குண்டையனே கவனமாயக்கோது

ந்தவியாசன், அக்காலத்தில் இருந்தஅசுரர்களை ஜாலவித்தையினாலே ஏ
மாற்றி தன்வசப்படுத் தந்திரமியற்றி சதுர் யுகங்களிலும் தானே யி
ருந்து வர்ணாச்சிரமதர்மங்களை வகுத்த மஹா ரிஷியென்று போற்றி வ
ணங்கி வாழ்ந்தும்படி செய்துகொண்டு ஆதியாயிருந்த மனு, மய, து
வஷ்ட, சில்ப்பி, விஸ்வக்கிய என்னும் இவ்வைந்து பிரம்மாக்களையும
மாற்றிபபோடவேணுமென்று தாஙகளே மகாரிஷிகளாயிருநதுகாலக
கியானரணிதங்களைச்சொலலுங்காரியஸ்தாரிகளென்று கலங்காவுலக
த்தைக் கலக்கிவிட்டார்களையும்உண்டாக்கினனென்றுஞ சொல்லியிரு
க்கின்றது

மேற்சொன்ன லிஙகபுராணததில் மற்றொருபக்கத்தில் பிரம்மா சிருஷ்டிகிரியை முடிக்கச் சக்தியில்லாமல் கண்ணீர் விட்டழுதாரென்றும அந்தக் கண்ணீர்களில் ருத்திரன்தோன்றி அந்த சிருஷ்டிகிரியை தானும் முடிக்கக்கூடாமல் வருந்துவதை அவன் தகப்பனாகியபிரம்மா கண்டு அவனுககுத்துணைசெய்ததாகவுஞ் சொல்லியிருககினறது.

மார்க்கண்டபுராணததில லட்சுமியிலிருந்து விஷ்ணுவும காளியிலிருந்து சிவனும் சரஸ்வதியிலிருந்து பிரம்மாவும் தோன்றினார்களென்றுஞ் சொலலியிருக்கின்றது.

வராகபுராணத்தில் திரிமூர்த்திகளி லிருந்து சக்திதோன்றி அந்தசக்தியிலிருநது லட்சுமி காளி சரஸ்வதி யெனமூவராகளென்றும இபபடி பலவிதமாகசசொல்லிய பலபுராணஙகளில எதைமெய்யென்றுசொலலககூடும் இவ்விதமாறுபாடுகள் அனேகம்வியாசன்முதலான ரிஷிகள தஙகள் புராணஙகளிற கறபனைசெயதிருககிறபடியால் இதை மெய்யென்று நம்புகிறவர்களைப் பேதைகளென்றேசொலலபபடும,

பாரத்துவம்.

சாவியாபீகபகவான் தஸமாத்ஸர்வகதசிவஹா
సర్వవ్యాపీశ భగవాన్ తస్మాత్సర్వగతశ్శివః

இதற்கருத்து அந்தபகவானென்னப்பட்ட சிவன் சர்வ வியாபியாகி எவ்விடததிலும நிறைநதிருக்கினறான் என்பதுபாகவததததில் இதறகுமுழுவிரோதமா யிருக்கின்ற சுலோகத்தைக்கேளும,

பவவிறததருயேசா வசதாம்சமநோவிறத்:
பாஷாண்டினதேவபநது சஸ்சாஸ்திர பரிபந்தன.
முமுக்ஷவோகோரருபாநதவ பூதபதிாந்ததா
நாராயணகளாசாதாந்தா பஜந்திணிநிருயுவ:

భవవ్రతధరాయేచాయేచతాంసమనువ్రతః
పాషండినః తేభవంతుసచ్ఛాస్త్రపరిబంధినః.
ముముక్షవోఘోరరూపాన్హిత్వాభూతపతీనథ
నారాయణకళాశ్శాంతా భజంతిహ్యనసూయవః

யபூரண தன்மைக்கும் பின்னதும் ஆகிறதல்லவே ஏனென்றால் ஒருசாஸ்திரம் நிர்க்குணமென்றும் மற்றொருசாஸ்திரம் முக்குணமென்றும் சொன்னால் மகாபேதமல்லவா ஆகையால் இதையோசித்தால் தெரியலாம்.

மச்சபுராணம் இந்த ஆதிமூர்த்திக்குரிய திரிகுணாத்துமாவின் உற்பத்திகாரணங்களைக்குறித்துச் சொல்லியிருக்கிறசுலோகங்களை உமக்கு விரிக்கவேண்டுமாகில் அவைகள்அனேகமாயிருப்பதால் மற்றப்புராணங்களில் இருக்கிறவழுக்களிற் சிலதைமாத்திரம் இங்கேசுருக்கிக் காட்டுவேன் அவைகளில் ஒருபுராணத்திலே ஆதிசக்தியினின்று இந்தத்திரிமூர்த்திகள் தோன்றினார்களென்றும் அந்த ஆதிசக்தி இவர்களைமோகித்துத் தனக்கே யிவர்களைப்புருஷர்களாகப் பாவித்துக் கொண்டாளென்றும் பாகவதத்திலும் இன்னுஞ்சிலபுராணங்களிலும் விஷ்ணுவினுடைய நாபியிலே ஒருதாமரைதோன்றி அதிலிருந்துபிர்மாஉற்பத்தியானாரென்றும் சொல்லப்பட்டிருக்கிறதுஅது எப்படியென்றால் ஆதியிலே பிரஹமமூர்த்தி தண்ணீரை சிருஷ்டித்து தன்னுடையவிந்தை அந்தத்தண்ணீரில்விட்டார் அது முட்டையாகி மிதந்தது அந்தமுட்டையில் முக்கண்ணனாகிய சிவன்தோன்றி உடைத்தான் அந்தக்ஷணமே குற்றமில்லாதபஞ்சபூதங்களும் உண்டாயினவாம்.

மற்றொருபுராணத்திலே ஆதிசக்தியிலிருந்து ஒரு வித்துஉண்டாகி அதிலிருந்து சிவன்தோன்றினானென்றும் மச்சபுராணத்திலே பிர்மாவிலிருந்து சிவன்தோன்றினானென்றும்இன்னம் இப்படிப்பலவிதஞ்சொல்லியிருப்பதால் எதுமெய்எதுபொய்யென்பதை யார்நிச்சயிக்கக்கூடும்இதினால்சகலமும்பொய்யென்றே தெளிவாய்விளங்குகின்றது

சுலோகம்.

ததோ சிருஜத்வாமதேவம் திரிபுண்டரவரதாரிணம்

இதன கருத்தாவது பிரம்மம்திரிபுண்டரதாரியென்கிற வாமதேவனை உண்டாக்கினானென்பதே.

நாரதபுராணத்தில் நாராயணனுடைய வலதுபக்கத்திலிருந்து பிரம்மா தோன்றினானென்றும்இடதுபக்கத்திலிருந்து விஷ்ணுதோன்றி

னுமொன்றும் நடுவிலிருந்து சிவன்தோன்றினனென்றும்சொல்லியிருக்கின்றது.

இலிங்கபுராணத்தில் இவ்வுலகஅண்டத்திலிருந்து சிவனானவன் ரூபீகரித்துப் பிறகு தனது இடதுபக்கத்தி லிருந்து விஷ்ணுலக்ஷுமியென்பவர்களையும் தனது வலதுபக்கத்திலிருந்துபிரம்மா சரஸ்வதியென்பவர்.

## தேவர்களுற்பத்தி

(உசு) ப - கு - ஓமார்க்கசஹாயஆசாரி எமதுவியாசபகவான்திரிமூர்த்திகளையு மெந்தப்புராணத்தி லிகழ்ந்திருக்கின்றார்.

மா - ஆ - ஒ - பஞ்சாங்கங்குண்டையனே சிவபுராணத்தில்

ஆதிசக்திமயம்பீஜம் பீசஜக்திமயம்சிவா
சிவசக்திமயம்விஷ்ணு சர்வவிஷ்ணுமயம்ஜகத்

இதன்கருத்து ஆதிசக்தியினிடத்திலிருந்து ஒருபீஜம் பிறந்தது அதனுடைய வல்லமையினாலே சிவன்பிறந்தான் சிவனிடத்திலே விஷ்ணுபிறந்தான் அந்தவிஷ்ணுமயம் சர்வலோகமுழுதுமென்றிருப்பதினால் சிவன்விஷ்ணுவுக்கு தகப்பனல்லவோ.

மமயோனிர் மஹத்பிரம்மதஸ்மின்கற்பேததாம்யஹம்

இதன்கருத்து என்யோனில் மஹாபிரமம் அதிலிருந்து நான் உருவாக்கிவிடுகிறேனென்பதாம்.

மச்சபுராணம்.

குணேபியக்ஷோபிய மாணேபிய திரயோதேவாபீஜக்ரே
ஏகமூர்த்திதிரயோபாகா பிரம்மாவிஷ்ணுமஹேஸ்வரா.

இதன்கருத்து ராஜஸ-தாமஸ- சாத்விககுணங்களினால் ஆதிமூர்த்தியீயும் அந்த ஏகமூர்த்திகளும் தோன்றியதென்பது,

கேளும் ப - குண்டையனே இவ்விரண்டுசாஸ்திரங்களில் ஒன்றில் ஏகமூர்த்தியானவர் ஆதியிலே யாதொருகுணமும் இல்லாமல் ஏக

மாயிருந்தாரென்றும் மற்றொருசாஸ்திரத்திலே முக்குணங்களுள்ளவரானுமென்றுஞ் சொல்லியிருப்பதினாலே அநேகவாக்ஷேபனைகளுக்கிடமாயிருக்கின்றதே அஃதெப்படியென்பீரோ இந்தமூர்த்தி ஒருகுணமில்லாதவரென்றால் அவருடைய பரத்துவமகத்துவத்திற்குக் குறைவும் அவருடைப்புகழ்ந்துபேசியிருக்கின்றது பதுமபுராணத்தில் சிவனை இகழ்ந்திருக்கின்றது,

விஷ்ணுதர்சனமாத்திரேண சிவத்துரோகபிரஜாயதே
சிவத்துரோஹநசாதேவோ நாகம்யாந்த்திதாருணம்
தஸ்மாத்விஷ்ணுநாமாபி நவக்தவ்யம்கதாச்சந.

இதன்கருத்து சிவத்துரோகஞ்செய்து விஷ்ணுவைதரிசித்தால் சிவன் உக்கிரங்கொண்டு நரகத்துக்குள்ளாக்குவான் ஆதலால விஷ்ணுவினுடையபெயரை உச்சரிக்கலாகாதென்பதாம்,

இதிலே சிவனைப்புகழ்ந்தும்விஷ்ணுவைஇகழ்ந்தும்இருக்கின்றதல்லவா மேற்படி புராணத்தில நிந்தையாகிய தந்திரவிந்தை சுலோகத்தைக்கேளும்,

யஸ்துநாராயணம்தேவம் பிரம்ஹருத்ராதிதேவதா
சமமந்வைர்நிரோக்ஷேதர் ஸபாஷாண்டிபவேத்பதா
திரிமந்திரபகுமோக்தேந பிரம்ஹணய்யோபியவைஷ்ணவா
நஸ்பஷ்ல்வியாநவக்தவியா நதிருஷ்டவியாகதாசன

இதன்கருத்து எவனொருவன் பிர்மா உருத்திரனுக்கு நாராயணனைச் சமமென்று சொல்லுகின்றானோ அவன் என்றைக்கும்பதிதபாஷாண்டனாவானென்றும் லட்சுமி மந்திரஞ்செபிக்கின்றவிஷ்ணுபக்தாளாகியவேதியர்களை தூஷிக்காமல் பிரமக்கியானமுள்ளவரொன்றுபோற்றிவாழ்த்திப் பணியவேண்டியது கேட்டீரோ பஞ்சாங்கங்குண்டையரே சிவனைநீக்கி விஷ்ணுவைப்போற்றிப் புகழவேண்டுமென்றும் விஷ்ணுவை நீக்கி சிவனை துதிக்கவேண்டுமென்றும் விஷ்ணுபக்தர்களைக் கண்ணாலேபார்க்கவும் தொடவும்படாதென்றும் பேசவுங்கூடாதென்றும் அவரவர்களுக்கேற்றபடி புராணங்களைக்கற்பித்த உங்கள்முன்னோர்களின் புத்தியீனத்தை [illegible].

அதாலத்துக்கோட்டுக்கேர்ப்பு,

அச்யுதேவம்பரந்தேவோ வதந்தியஜ்ஞானமோஹிதா
நாராயணஜகந்நாதா தேவபாண்டிநஸ்மிருதா

இதன்கருத்து ஜகநாதனுயிருக்கிற நாராயணனைப்பார்க்கிலும் முக்கியமாயிருக்கிற அந்நியதெய்வமும் உண்டென்று சொல்லுகிறவர்கள் அறிவீனரும் வஞ்சகரும் பதிதபாஷாண்டரும் பாவிகளுமாவார்கள்

சமேதவோமஹாதேவோ விஜ்ஞேயஸ்துமஹேஸ்வர
நதஸ்மாத்பர மஞ்சித்பதம் சமதிகம்யதே,

இதன்கருத்து மஹேஸ்வரனுக்கு மேலானவஸ்து ஒன்றுமில்லையென்பதாம் இதிலே சிவனை புகழ்ந்திருக்கின்றது.

வாசுதேவம்பரித்தியஜ்ஞ யோன்யதேவமுபாசதே
த்ருஷிதோஜாஹ்னவீதீரே கூபங்குநந்திதுர்மதி

இதன்கருத்து வாசுதேவனென்னப்பட்ட விஷ்ணுவை விட்டுவிட்டு அந்நியதேவனை வணங்குகிறவன் தாகமடைந்த மதியீனனானவன் அவன் கங்கைநதியின் கரையில உட்காந்துகிணத்தைவெட்டுகிறவனுக்குச் சமானமாக எண்ணப்படுவானென்பதாம் இதிலேவிஷ்ணுவை புகழ்ந்திருக்கின்றது,

இவ்விதமாகவே உங்கள் புராணங்களெல்லாம் சிவனை புகழ்ந்தும்விஷ்ணுவைப் புகழ்ந்தும் இருப்பதால் ஒன்றுக்கொன்று ஒவ்வாமல் மாறுபாடாயிருப்பதென்பதற்கு மேற்சொல்லிய சில திருஷ்டாந்தமே போதுமென்றெண்ணுகிறேன்,

ஆனால் பாகவதமுதலிய புராணங்களில் விஷ்ணுவின்நாபிகமலத்தில் பிரமமா உற்பத்தியானானென்றும் வேறு சிலநூல்களிலஆதிசந்திஉண்டாகிய ஒருவிதத்தில் விஷ்ணுவின் பிதாவாகிய சிவன் உற்பத்தியானானென்றும் மச்சபுராணத்தில் ருத்திரன்பிரமாவால் சிருஷ்டிக்கப்பட்டானென்றும் நாரதீய புராணத்தில் நாராயணனுடைய வலதுபு

ரத்தில் பிரம்மாவும் இடப்புறத்தில் விஷ்ணுவும் மத்தியத்தில் சிவனு ந்தோன்றினார்களென்றும் லிங்கபுராணத்தில் பிரமாண்டத்திலே ருத் திரன் ரூபிகரமாய்த்தோன்றி தனது இடதுபுறத்தில விஷ்ணுவையும் இலக்குமியையும் தனது வலப்புறத்தில் பிரமாவையும் சரஸ்வதியையு ந்தோன்றப்பண்ணினாரென்றும் கூர்ம புராணத்திற்றானே வேறொரு யிடத்திலே பிரமா தனது சிருஷ்டிகீர்த்தியும் மந்தப்பட்டதினிமி த்தியம்விட்ட பெருமூச்சிலே பிறந்த ருத்திரன் அந்தத்தொழிலை நட ப்பித்தும் அதுமீளவும் மந்தப்பட்டதுகண்டு பிரமா அந்தத்தொழிலை மீண்டு தானேநடப்பித்தாரென்றும் மார்க்கண்டேய புராணத்தில் ம காலக்குமியிலிருந்து பிரமாவும் மகாகாளியிலிருந்து ருத்திரனும் மகா சரஸ்வதியிலிருந்து விஷ்ணுவும் தோன்றினார்களென்றும் வராக புரா ணத்தில் பிரமா விஷ்ணு ருத்திரனென்ற மூவர்களிலும் ஒரு சத்தியு ண்டாகி மூன்றுபகுதிப்பட்டு லட்சுமி சரஸ்வதிகாளியென்பவர்களுண் டானார்களென்றுஞ் சொல்லப்பட்டிருக்கின்றது மெய்யல்லவோ,

ஆமென்றாற்கேளுங் குண்டையரே பாகவதம் மார்க்கண்டேயர் புராணம் வராகபுராணம் நாரதியபுராணம் லிங்கபுராணமுதலான்புராண ங்களிலுள்ள பேதாபேதமான கட்டுக்கதை புராணங்களை யெல்லாம் பொய்யென்று உமக்கு மற்றவர்களுக்கும் விசதமாய் விளங்குகிறத ற்கு யாதொரு சந்தேக மில்லையல்லவா.

## திரிமூர்த்திமுதலான தேவர்கள்

## நடபடிக்கை.

(உஎ) தத்தாத்திரி மெய்ச்சகத்தில் அத்திரிமகாமுனியினுடையஸ் திரீ அநசூயையென்பவளை கற்பழிக்க திரிமூர்த்திகள் பிராமணவேட மாகவந்து அவளை பிச்சைகேட்டதாயும் அவள் பிச்சையிடவந்தபோ து இவர்கள் அந்த பிச்சைவேண்டாமென்று நிர்வாணத்தோடேவந்து

யின்றால் அதுவே யெங்களுக்கு இச்சையானபிச்சையென்று சொன்னார்களென்றும் அந்த அநசூயையு மிகவும்வெட்கி இவர்களைக் குழந்தைகளாகச் சபித்தாளென்றும் அப்போது நாரதமகாமுனி அந்தஅநசூயையை மிகவும் வேண்டிக்கொண்டு சாபத்தைத் தீர்த்துத் திரிமூர்த்திகளைப் போகச்சொன்னாளென்றும்,

இந்த திரிமூர்த்திகள் பிருகுரிஷி பெண்சாதி நாகவல்லியை கற்பழிக்க எத்தனித்ததால் அவள் திரிமூர்த்திகளை குழந்தைகளாகச் சபித்து உருட்டிப்புரட்டி ஓர்மூலையில் தள்ளிவிட்டாளென்றும்,

ஆதியில் தேவர்களுக்கு அமுதளிக்க மோகினிரூபமெடுத்தவிஷ்ணுவை சிவன்கண்டு விரகங்கொண்டுமோகிக்க அரிஹரபுத்திரன் ஐயனார் பிறந்தாரென்றும்,

தாருகாவனத்து ரிஷிபத்தினிகளை கற்பழிக்க சிவன் புருடரூபமும் விஷ்ணு ஸ்திரீரூபமுமாகி ரிஷிகள் தபசைக்கெடுத்து ரிஷிபத்தினிகளின் கற்பையழிக்க இருவரில் ரிஷிசாபத்தால் சிவனுடைய சிசினமற்றுப்போயிற்றென்றும்.

கண்டகியென்னும் வேசியின்பேரிலே சொல்லியிருக்கிற

சுலோகமாவது,

வேசியாதரிசனம்புண்யம் பரிசனம்பாபநாசனம
சுடபநம்சர்வதீர்த்தானும் மைதுனம்மோக்ஷசாதனம்.

இதன்கருத்தாவது வேசிகளைதரிசிக்கிறது புண்ணியம் அவர்களைத்தொடுகிறது பாபவிமோசனம் அதரபானஞ்செய்கிறதாவது சகலதீர்த்தத்துக்குஞ் சமானம் மைதுனம்பண்ணுகிறதே மோக்ஷத்தை அடையலாமென்பதாம் ஓய்பஞ்சாங்கக்குண்டையனே. இவ்விதஅசத்தமானவார்த்தைகளை ஜெபிக்கும்படி சிலரை செய்கிறீரல்லவா,

## தேவேந்திரன் நடபடிக்கை.

(உஅ) தேவேந்திரன்கௌதமரிஷிபெண்சாதி அகலிகையைக்கற்பழித்தானென்றும் கௌதமர் தேவேந்திரன் சிசினமற்றிடவும் அவன் தேகம் ஆயிரங்கண்ணாகவும்அகலிகையை கல்லாகவும்சபித்தாரென்றும் பின்புதேவர்கள் ஆட்டின்சிசினத்தை அறுத்துவொட்டிவைத்தார்களென்றும் அதிஞல் இந்திரனுக்கு மேஷாண்டனென்கிற பெயருண்டாயிற்றென்றுசொல்லி இருக்கின்றதல்லவா,

அகலிகை தேவேந்திரனோடு விபசாரஞ்செய்தாளென்றும் துரௌபதி பஞ்சபாண்டவாளுக்கு பாரியாயிருந்துகர்ணனையும்இச்சித்தாளென்றும் சீதையை ராவணன் எடுத்துக்கோண்டுபோனஅபகீர்த்தியும்பிரகஸ்பதிபெண்சாதியான தாரை சந்திரனைச்சேர்ந்தாளென்றும் வண்டோதரி ராாவணன்பெண்சாதியென்றும்இப்படியாக கற்பழிந்த இவ்வைந்துஸ்திரீகளேயும் பஞ்சகன்னிகைகளென்று அந்திசந்தியி லிவர்களை ஜெபித்துவரும்படிசெய்த தந்திரம் பாமராளுக்குத் தெரியாமற்போனுலும் பண்டிதாளுக்குதெரியாதா.

அகலியாதுரோபதிசீதா தாராமண்டோதரீஸ்ததா
பஞ்சகந்யாஸ்மரேநித்தியம் மஹாபாதகநாசனம்.

இதன்கருத்தாவது, அகலிகை துரோபதை சீதை தாரை வண்டோதரி இந்தஐந்துஸ்திரீகளேயும் நித்தியகாலமும் ஸ்துதித்துவருகிறவர்களுக்குசகலபாவங்களும்விமோசனமாகிவிடுமென்பதாம் இவர்களால் இகபாசாதகமடைவார்களா.

## பிர்மாவின் நடபடிக்கை.

(உ௯) பிரம்மாவானவர் தான்சிருஷ்டித்த ஊர்வசியையிச்சித்துகலைமான்ரூபமெடுத்து காட்டிற்சம்போகஞ்செய்தகுற்றத்திற்கு பிரம்மாவின் ஐந்துசிரசில் ஒருசிரசை ஈஸ்வரன் துண்டித்தாரென்றும் அந்தசி

ஈசுதான் குருநாதனுக் கிரிகின்றதென்றும் அதுதான் மிருகசீரிடமெ
ன்றும் பிரம்மா திலோத்தமையை சிருஷ்டித்து அவள்ரூபத்தைக்க
ண்டு மோகித்தபோது அவள் தேவேந்திரன் கோட்டையிற் புகுந்தி
ட-காவற்காரர் கோட்டைக்கதவைசாத்த அந்தகதவிலே பிரம்மாவு
டைய விந்துஸ்லிதமாகிவிழஅதில் அகஸ்தியன் பிறந்தானென்றும்.

## சுப்பிரமணியர் உற்பத்தி,

(௯௰) சிவன் சப்தரிஷிகளுடைய பெண்டுகளை கற்பழித்ததிலஅரு
ந்ததிதவிர மற்ற ஆறுபேர்சிவனுக்குப்பெற்ற பிள்ளைகளை தங்கள் பு
ருடருக்குப்பயந்து சிவனையே யிட்டுகொண்டுபோகச் சொன்னார்க
ளென்றுஞ் சிவன்இட்டுவந்ததை உமாமஹேஸ்வரிநோக்கி இந்தப்பி
ள்ளைகள ஆரென்றுகேட்க உன்மக்களென்றுசொல்ல உமையவள் ஆ
றுபிள்ளைகளையும் அன்புடனே சேர்த்தெடுக்க அந்த ஆறுபிள்ளைகள்
உடலுங்காலும் ஒன்றாய்பொருந்தி தலையுங்கையும் பொருந்தாததனா
ல் ஆறுமுகமெனறுசொல்லப்பட்டிருக்கின்றது.

## கிருஷ்ணன் நடபடிக்கை.

(௯௧) ஆயர்பாடியில் அசோதையென்பவள் கிருஷ்ணனை வளர்த்தா
ளென்றும் அவன் பத்துவயதிற்றானே பால தயிர் வெண்ணை திருடி
னதைக்கண்டு மாடுமேய்க்கக் காட்டில் துரத்திவிட்டாளென்றும்.

அவன் மாடுகளை மலையடிவாரத்தில் மேய்க்கையில் காளிங்கனெ
ன்கிற சர்ப்பம் காளிந்தி நதிக்கரையில் நாககன்னிகைகளை வைத்து
க்கொண்டிருந்தது அதைக்கொன்று இந்தக் கன்னிகைகளின் க[illegible]டை
யழித்தபினபு கலியாணஞ்செய்து கொண்டானென்றும்.

கிருஷ்ணன் தன்மாமன் கம்சனுடைய மந்திரிமார்பெண்கள்ஒன்ப
துபேர் குளத்திலே ஸ்நானம்பண்ணும்போது அவாளுடைய வஸ்தி
ரத்தையெடுத்து புன்னைமரத்தில் கட்டிவைத்துக்கொண்டதை அவா
ள்கேட்க தன்னிஷ்டப்படி நடந்தபின் கொடுத்தானென்றும்.

சித்தாங்கிலை;

கிருஷ்ணன் ஆயர்பாடியில் பதினாயிரம் ஸ்திரிகள் தங்கள் புருடர்களை தங்களை அனுபவிக்கிறார்களென்றெண்ணும்படி மாய லீலைகள்செய்தானென்றும்.

கிருஷ்ணன் துரியோதனனிடத்தில் தூது போனபோது விதுரன்வில்லையொடித்து குந்தியம்மாளுக்குக் கர்ணன் முதற்பிள்ளையென்றும் துரியோதனனுக்கு அசுவத்தாமாபேரில் சந்தேகம்வரும்படிசெய்தானென்றும்,

• கிருஷ்ணன் ஒரு வேடன் அம்பினாலிறந்து ஆற்றங்கரையில் தகனஞ் செய்யப்பட்டபோது வெள்ள மடித்துக்கொண்டுபோன முண்டசொரூபத்தை ஜெகந்நாதத்தில் வணங்குகிறார்களென்றும் சொல்லியிருக்கின்றது.

(௩௨) விஷ்ணு பத்தவதாரமெடுத்த சுலோகம்,

மஸ்ச: கூர்மவராகஸ்ச்சு நாரஸிம்மஸ்ச்சவாமநஹ
ராமோராமச்சராமச்ச பௌத்தகல்க்கியேவசா,

మత్స్యఃకూర్మోవరాహశ్చనారసింహశ్చవామనః।
రామోరామశ్చరామశ్చబౌద్ధఃకల్కిరేవచ॥

விஷ்ணு பத்தவதாரத்தில் மச்சவதாரம் வேதத்தை யெடுத்துக்கொண்டுபோன சோமுகாசூரனைவென்று வேதத்தைக் கொண்டுவந்தாரென்றும்,

கூர்மவதாரமெடுத்து அமுர்தங் கடையும்போது தான்மோகினி அவதாரமாய் அரக்கரை மோகஞ்செய்தபோது சிவன அந்தமோகினியைக்கண்டு மோகித்ததினால் ஜன்னவதேவன் வைரவதேவனும் பிறந்தார்களென்றும்,

வராக அவதாரத்தில் கனகாக்ஷனென்கிற அரசன் பூமியை பாயாய்சுருட்டி பாதாளத்திற் கொண்டுபோனபோது அவனை யழித்து பூமியை மேலாகக் கொண்டுவந்தாரென்றும்,

நரசிங்க அவதாரத்தில் இரணியனை யழித்து பிரகலாதனை ரட்சித்தாரென்றும்.

வாமன அவதாரத்தில் மாபலி சக்கிரவர்த்தியை மூன்றடி மண் கேட்டு அவன் சிரசின்மீதில் தன்பாதத்தைவைத்து பாதாளத்திலழுந்தச்செய்தாரென்றும்,

பரசுராம அவதாரத்தில் க்ஷத்திரியரான ஜெமதக்கினிமுதலானவாகளைக்கொன்று தன்னைப்பெற்ற ரேணுகையையும் சகோதரர்களையுஞ் சம்கரித்தானென்றும்.

இராமாவதாரத்தில் ராவணனைக்கொன்று சீதையைசிறையொழித்தானென்றும்.

பலராம அவதாரத்தில் கலப்பை ஆயுதத்தால் அரக்கரை அழித்தாரென்றும,

பௌத்தவதாரத்தில் காசியில் சைவசமயத்தை விட்டு பௌத்த சமயத்தையுடைய முன் காசியையாண்டிருந்த திவோதாஸனை நீக்கி சிவனையாளும்படிசெய்து பூலோகத்தை யுண்டாக்கின கடவுளு மில்லை சிருஷ்டிகர்த்தாவுமில்லை யென்று போதித்தாரென்றும்

இனி கலிக்கி அவதாரம் எடுக்கப்போறாரென்றும் பதினெண்புராணங்களில வியாசன் முதலானவாள்செய்த கட்டுக்கதைகள ஒருவிதமல்ல பலவிதமாகையால் அதுகளை ஆதியோடந்தமாய் பதினெண் புராணங்களில் பார்வையிட்டால் யாவருக்கும் நன்றாய்த்தெரியலாம்.

## காந்தக்கற்கோட்டை.

ப-கு-ஆ-மாற்கசஹாய ஆசாரி வியாசபகவான் காந்தக்கற்கோட்டையை அழித்தகாரணமென்ன,

மா-ஆ-மாங்கையென் றொருபட்டணத்தில் காந்தகற்கோட்டையொன்று கட்டிக்கொண்டு அதில விஸ்வப்பிரம்ம வம்மிசத்தார் ஐம்பத்தாறு தேசத்தரசர்களுக்கும் பஞ்சகிருத்தியத்தினால் அவாளவாளுக்கு வேண்டியதை சம்ரட்சணை செய்துவரும்நாளில்.

வியாசனென்பவன் பாதஸலஹரி ராஜனுக்கும் விஸ்வப்ரம்மவம்மிசத்தாருக்கும் மித்திரபேதஞ்செய்து காந்தகற் கோட்டையை பிடிக்கும்படிசெய்தான்.

## சித்தூர் ஜில்லா:

பர்த்துலஹரிராஜன் ரதகெஜதுரக பதாதிகளுடன் வந்து யுத்த
ஞ்செய்வதைக்கண்டு விஸ்வப்ரம்ம வம்மிசத்தார் பகற்காலத்தில் சூரி
யர்காந்தத்தைக் காட்டியும் இராக்காலத்தில் சந்திரகாந்தத்தைக் காட்டி
யும் வந்த ரதகெஜதுரகபதாதிகளை அநேகநியாக்குவதைக்கண்டு அ
ரசன் துயரப்படும்போது வியாசன் ஸ்ரீவிஷயநதூல அந்த நகற்கோட்
டையைப் பிடிக்கவேணுமென்று சில வியாபாரிகளை ஆடையர்பாண
அலங்கிரதர்களாய அந்தக்கோட்டைக்கருகில வாசம் பண்ணும்படியா
யும் கோட்டையின மாமததை யறியும்படியாயும் விஸ்வபரம்ம வம்மி
சததாரை தஙகள் கைவசபபடுதநி வருமபடி செயதான்.

அதிலொருநாயகி தன்னருகில் நித்திரைசெய்யும் நாயகனையெழு
ப்பி கோட்டைபறறிக்கொண்டதென்று கூககுரலிட்டாள் புருஷன்றி
டுக்கிட்டு விநாசகாலே விபரீதபுத்தியென்கிற சுலோகப்படிக்கு வாகு
வைக்கோலைபபோட்டு கொளுத்திவிட்டார்களோ வென்றசததத்துட
னே யெழுந்திருக்க அந்த நாயகி தன்னெண்ணம் கைவல்லிய மாச்சு
தென்று நகைத்து உமது நித்திரையினுடைய மிருதுவைப்பார்க்க ப
ரியாசஞ்செய்தேனென்று உடனு முயிரும்போலஆலிங்கனஞ்செய்து
கொண்டாள் அந்த நாயகன் நமதுகோட்டைக்கு நாசகாலம்வந்துசம்
பவிததெனறு யோசிததுக்கொண்டு பிராதகாலத்தில் கோட்டைக்
குட்சென்று அங்குள்ளபெரியவாளை நமஸ்கரித்து நமதுகோட்டைப
றறிக்கொளளக கனவுகண்டேனென்றான.

அந்தப்பெரியவாள காலக்கியான முதலானசாஸ்திரங்களை ஆரா
ய்ந்து கேட்டபோகிற காரணம் இனனதென் றறிந்து கனவுகண்டே
னென்று வந்துசொன்ன துன்மார்க்கரை நீங்கள் பாஸ்திரிகளை நேசி
த்து நமதுகோட்டைக்குத் தீங்குவருமபடி செய்தீர்கள் உஙகளுககு
இன்றுமுதலாக சுவர்ணஉற்பத்தி சூக்ஷ்மமுதலானதும் விருத்தியின்
றாய் போககடவதென்று சபித்து அவாளையும் அவர்களுடன் நேசி
த்தவர்கள அதற்குச் சம்மதித்தவர்கள் எண்ணங்கொண்டவர்கள் மு
தலானவர்கள் யாவரையும் பிதுர்ககள் சகோதரர்கள் புத்திரர்கள் முத
லியவர்களோடு குடும்பசமேதராய் அவ்விடத்தில்தானேவிட்டு அதற்
கருகே சிறுவென் றொருபட்டணமுண்டுபண்ணி அதிற் சத்துருக்கள்
பிரவேசிக்கவொட்டாமல் விசாலமாக மதிற்சுவர் நிருமிதது குடும்ப
சமேதராய அதிற்போய்ச் சேர்ந்தார்கள்.

பர்த்துலஹரிராசன் வாகு வைக்கோலைக்கொண்டுவந்து கோட்
டையைச்சுற்றிப் போட்டுக்கொளுத்தக் கோட்டை குலைந்துபோன

ந்தக்கண்டு அதற்குள்ளிருந்தவர்கள் குடும்பசமேதராய்ச் சாங்கத்தின் வழியாய்க் காட்டில்வந்துபார்த்து லஹரிராசன் பட்டணமுழுதும் அழிந்துபோகும்படி ஆயத்திற்காதாரமாகிய அதர்வணவேதத்தில் விளங்காநின்ற மாரணபீஜாக்ஷரத்தை யுச்சரித்து அவன்பட்டணமுழுதும் பாழாகச்செய்தார்கள்.

அந்தக் காந்தகநகற்கோட்டை யழிந்தபின்பு வேதசாஸ்திரமரியாதைகளெல்லாம் நசிச்சது வர்ணாச்சிரமதர்மங்களும் யாகாதிகர்மங்களும் முழுகிப்போச்சுது ஸ்திரீகளுடைய பதிவிரதாதருமங்களும் பாழாய்ப்போச்சுது சத்தியம்பறந்தது அசத்தியம்நிறைந்தது இயம நியமாதிகளும மைத்திரியாதிகளும் சமதமாதிகளும் ஆத்துமவிசாரணை முதல்களும் அழிந்தது மாதமும்மாரிபொழிவது மறைந்தது தேவலோகமும் பூலோகமும்கலங்கி பெரியோர்களுடைய சித்தம் பம்பரம்போல் சுழன்று லோகமெல்லாம தோஷகர்மங்கள் வர்த்திச்சுது வேதசாஸ்த்ரபுராணாதி சிரவணங்களும் இல்லாமல் தானதர்மம பட்சாத்தாபம இரக்கமுதலான நற்குணங்களில்லாமற் புலைகொலை களவுகள் காமமுதலான துற்குணமுடையவர்க ளானார்கள்.

வில்வப்பிரம்ம வம்மிசத்தார் தங்களுடைய சுயரூபங்களை மாற்றிக்கொண்டு அந்தந்த தேசசாரப்படி வேஷங்களைப் போட்டுக்கொண்டு அறிவுடையோர்களும் அறிந்துகொள்வதற் கருமையாகவும் மாசுபடிந்த மாணிக்கம்போலவும் நீறுபூத்த நெருப்புப்போலவும தர்மராசாமுதலான பஞ்சபாண்டவர்கள் அக்கியாதவாசஞ் செய்தபோது எப்படி உருமறைந்திருந்தார்களோ அப்படி உருமறைந்து பெருமையும் ஒழுக்கமும் இயற்கையும் மறைந்துக்கொண்டு ஐம்பத்தாறு தேசங்கள்முதலான பலதீவுகளினும் அந்தந்த தேசபாஷையும் அந்தந்த தேசாசாரமும் உடையவராய் உலகசம்ரக்ஷணை செய்துக்கொண்டு வருகிறார்கள்.

## தரணிமகாராசன்.

ப-கு-ஒ மார்க்கசகாய ஆச்சாரி தரணிமகாராஜனுக்கும் வில்வப்பிரம்ம வம்மிசத்தாருக்கும் நடந்தவிரோதமென்ன.

மா-ஆ-ஐம்பத்தாறு தேசத்தரசர்கள் முதலானவர்களுக்கு வில்வப்பிரம்ம வம்சம் பஞ்சகிருத்தியத்தால் நிர்மித்த சாமான்களை தேசா செட்டிகள்மூலமாய் வியாபாரஞ்செய்து வரும்நாளில்

## சித்திரா ர்ஷில்லா.

வயிரசன் தாணிமகாராசனை விஸ்வப்பிரம்ம வம்மிசத்தாரிடத்தில் தீர்வைகேட்கும்படி யித்திரபோதஞ்செய்தான் விஸ்வப்பிரம்ம வம்மிசத்தார் இந்த ஐம்பத்தாறுதேசத ராசர்களுக்கும் நாங்கள் தீர்வை கொடுக்கிற தில்லையென்றார்கள்.

அரசன் நீங்கள் தீர்வைகொடாதிருக்கிறது என்னகாரணமென்றான் இந்த ஐம்பத்தாறு தேசத் ராசர்களும் விஸ்வப்பிரம்ம வம்மிசத்தாராலே பஞ்சகிர்த்தியமும் நடத்திக்கொள்ளுகிறபடியால் அந்தபஞ்சகிர்த்தியத்தால் அரசர்கள் அரசாளுவதினாலும் அந்தந்தராஜசபையில் ஆசாரிபீடமாயிருந்து மனுநீதிவழுவாமல் அரசுசெலுத்தவும் காலக்கியானப்படி திரிகாலவர்த்தமானங்களும் சொல்லுகிறபடியால் எங்களிடத்தில் தீர்வைவாங்க நீதியில்லை ஆகையால் தாங்கள் நூதனமாய் தீர்வைகேட்கிறது மனுநீதிக்கு விரோதமென்று சொன்னார்கள் அரசன் அவாளையும் அவாளுடைய சாமான்களையும் சிறைச்சாலையில் வைத்தான்.

---

## தேசாயி பெத்தண்ணராஜுகாரு,

தாணிமகாராசன் விஸ்வப்ரம்ம வம்மிசத்தாரையும் அவாளுடைய பஞ்சகிர்த்திய சாமான்களையும் சிறைச்சாலையில் வைத்ததை கேள்விப்பட்ட தேசாதிபதிகளில் பெத்தண்ணராஜுகாரு தங்களுடைய ரதகஜதுரக பதாதிமுதலான சேனைகளுடன்வந்து தாணிமகாராசன் சேனைகளை எதிர்த்து யுத்தஞ்செய்யும்போது நொக்குமுக்கிட்டு திடுக்கிட்டோடுவதை தாணிமகாராஜன்கண்டு உக்கிரங்கொண்டு சிறைச்சாலையிலிருக்கும் துவஷ்டாசாரியை நீங்கள் தீர்வை கொடாவிட்டால் உங்களை சிரசசேதஞ்செய்வேனென்றான் அதற்குதுவஷ்டாசாரி எங்களை சிரசசேதஞ்செய்தால் உன்சிரசு அநேகதுண்டுகளாகுமென்றுசொல்ல அரசன் தன்கையிலிருந்த உடைவாளால் துவஷ்டாசாரிசிரசைத் துண்டித்தான்.

அந்தசிரமானது கஞ்சுகிக்கு அங்கம் வேதென்றுகாமாட்சியம்மைபாதத்தில்முறையிட அந்தகாமாக்ஷியம்மை மாகாளிரூபமாய் உக்கிரங்கொண்டு தாணிமகாராசன் குடலைப்பிடுங்கி அருகில் வாழ்த்துநின்ற தேசாதிசெட்டிகழுத்தில் மல்சாரமென்று மாலையாய்ப்போட்டு அந்தஅரசன்தோலையரிக்க கம்பளியாகக் கொடுத்து விஸ்வப்பிரம்ம

வம்மிசத்தாரை நோக்கி உங்களிருவரும் உன்னைதியானித்துவந்தால் உங்களிஷ்டசித்தி நிறைவேறுமென்று அனுக்கிரகஞ்செய்தாள்.

அந்தக்குடல்தான் தேசாதிசெட்டிகழுத்தில் மலாரமென்று வளையல்கோர்த்து மாலையாய்விளங்குகின்றது அந்த அரசன் கர்மமானது கம்பிளியாகவும் அந்தக்கம்பிளி சந்திருவின்தோலாகையால் நாளையும் தேசாதிசெட்டிகள் தங்களிடதுகால் பெருவிரலால் எடுப்பார்களேயொழிய வலதுகால்பெருவிரலினாலாவது அல்லது கையினாலாவது கீழேயிருக்கிற கம்பளியை எடுக்கிறதில்லை யென்று யாவருக்கும் நன்றாய்த் தெரியுமல்லவா.

---

## காளிங்கராஜன்,

(கூசு) ப-கு, ஓய் மார்க்கசகாயஆசாரி உங்களை இடங்கையென்றும் மற்ற ஜாதிகளெல்லாம் வலங்கை யென்றுஞ் சொல்லவேண்டிய காரணமென்ன.

மா-ஆ, பரிமளச்சோழனென்னும் அரசனிடத்தில் வியாசன் தங்கள்வம்மிசத்தாரை அரசர்சபையில் ஆசாரிபீடமாய்வைத்தால் காலக்கியானப்படி திரிகால வர்த்தமானங்களும் சொல்லுவார்களென்றான் அரசன் திரிகாலவர்த்தமானங்களும் பஞ்ச கிருத்தியங்களும் அறிந்திருக்கிற விஸ்வப்பிரம்ம வம்மிசம் இருக்குதென்று வியாசனை அனுப்பிவிட்டார்.

அந்தவியாசன் மேற்சொல்லிய பரிமளச்சோழன் பாகதியடைந்தபின்பு அவர்சகோதரன் பண்புரிச் சோழனுக்குப் பட்டமாகி அரசு செலுத்தும் நாளில் தன்னினத்தை ஆசாரி பீடமாய் வைக்க யெத்தனித்தான்.

பண்புரிச்சோழன் விஸ்வப்பிரம்ம வம்மிசத்தாராலே பஞ்ச கிருத்தியமும் நடப்பதினால் உலகசம்ரக்ஷணை நடந்து வருகின்றது அப்படிக்கிருக்க ஜோகிசங்கமரைப்போல் யாசகஞ்செய்யும் கிராம பாச்சகாளாகிய உங்களினத்தை ஆசாரிபீடமாய்வைப்பது உங்கத்தாருக்குயாதொரு பிரயோசனமுமில்லை.

ஆதியில் விஸ்வப்பிரம்மவம்மிசத்தாரை ஜனனமடுத்து வேதாகமங்களைக்கற்று அவர்களாலே மந்திரஉபதேசங்களைப்பெற்றுஅவர்களுக்

கு துரோகஞ்செய்ய நினைக்கிறபடியால் உங்களைத்தான் குருத்துரோ
கியென்று சொல்லப்படுமென்றனுப்பிவிட்டார்.

இந்தவியாசன் பரிமளச்சோழனுக்குப் பிறந்த வைப்பாட்டி கு
மாரன் காளிங்கனுக்கும் பண்புரிச்சோழனுக்கும் செய்த மித்திரபே
தமாவது இந்தபட்டம் நியாயமாய் உன்தகப்பன் உனக்குக்கட்டவே
ண்டியது அப்படியிருக்க தன்சகோதரனாகிய பண்புரிச்சோழனுக்கு
ப் பட்டங்கட்டினான் ஆனால் நம்முடைய தமயன் நமக்குப்பட்டங்க
ட்டினபடியால் நாம் காளிங்கனுக்கு இளவரசுபட்டங் கட்டவேண்டு
மெனறெண்ணாமல் தன்பிள்ளை பாலனைச் சோழனுக்குப்பட்டங்கட்ட
யோசித்தான் நான் காளிங்கராசனுக்குபட்டங் கட்டவேண்டியது உ
ன்பிள்ளைக்குக்கட்டுவது மனுநீதியல்லவென்றேன.

உன்சிறியதகப்பன் விஸ்வப்ரம்ம வம்மிசத்தில் ஆசாரிபீடமாயிரு
க்கிறவனுடன் நான் உனக்கு இளவரசுபட்டங்கட்டசொல்லுகிறே
னென்றார்

அதற்கவன் விபசாரிபிள்ளைக்கு இளவரசுபட்டங்கட்டச்சொன்
னீரே இவர்தான் பிரம்மரிஷியென்றேளிதஞ்செய்தான்.

ஆகையால் அந்தப்பட்டம் உனக்கு வருகிறவாரத்துக்குள்பான்
கட்டுவதற்கு யாதொரு சந்தேகமில்லை ஆனால் இந்தக்கம்மாளன உன்
னை வைப்பாட்டி பிள்ளையென்று இழிவாய் சொன்னபடியால் இந்தக்க
ம்மாளனை இவ்வுலகமிகழும்படி நான்செய்வதறகு யாதொருசந்தேக
மில்லையென்றான்,

கல்வியறிவில்லாத காளிங்கன் இந்ததுன்மார்க்கனான வியாசனை
நோக்கி எனக்கே ராஜபட்டாபிஷேகம் ஆகத்தக்க தந்திரஞ்செய்வா
யாகில் அப்போது இந்தகம்மாளனைச் சபையைவிட்டு நீக்கி நமதுமர
பில் உற்பத்தியான ரிஷிகளை ஆசாரிபீடமாக வைத்துக்கொள்வதறகு
யாதொருதடையிராதென்றான்.

வியாசனானவன் பண்புரிச்சோழன் வேட்டையாடப் போகும்
போது நீயுங்கூடப்போய் தருணம்பார்த்து தனித்திருக்குங் காலத்தி
ல ஒரேவெட்டாய் வெட்டிப்போட்டுவந்தால் அப்போது நானேமுன்
னின்று உனக்குப் பட்டங்கட்டிவைபபேனென்றான் காளிங்கன் யாக
ன்சொற்படி பண்புரிசசோழன் வேட்டையாடப்போய் சேனைகளைவி
டுத் தனியாய் அர்சன் தீர்க்கசாந்திசெய்யத் தடாகத்தைக்கொண்டுதா

க்காரத்திசெய்யும்போது காளிங்கன் அரசனை ஒரேவெட்டாய் வெட்டிக் குளத்தில் தள்ளிவிட்டுச் சேனைகளிடம்வந்து அரசனைப் புலியடித்துக் கொன்றுவிட்டதென்று ஓலமிட்டழுதான் சேனைகள்மெய்யென்றுநம்பி மிகவுந்துயரமாக பட்டணம்வந்து சேர்ந்தார்கள்.

வியாசன் பண்புரிச்சோழன் இறந்ததைக்கேட்டு காட்டிலிருந்த தன்வம்மிசத்தாராகிய ரிஷிக்கூட்டங்களை நாட்டில்வரவழைத்து மங்களவாத்தியமுழங்கக் காளிங்கனுக்கு ராஜபட்டங்கட்டிவைத்தான்,

காளிங்கன் அரசானநாளில் வியாசனுக்குச்சொன்ன வாக்குத் தப்பாமல் விஸ்வப்பிரம்ம வம்மிசத்தாரை இன்றுமுதல் பஞ்சகிர்த்தியமாத்திரம் நீங்கள் செய்யவேண்டியது பஞ்சாங்கம் புரோகிதம் சுபசோபனம் அபரவிஷயகர்மாதிகள் தேவாலயபூசைமுதலானதும் எங்கள்ரிஷிகளைக்கொண்டே நாங்கள்செய்துகொள்வோமென்றான்.

விஸ்வப்பிரம்ம வம்மிசத்தார்நாங்கள்செய்யும் பஞ்சகிர்த்தியமும் அந்தரிஷிகளைக்கொண்டே தாங்கள்செய்துகொள்ளலாமென்றார்கள்.

உழுதுபயிரிடும் உழவர்முதலான தொழிலாளிகள் ஒருவாரம்வரையில் பஞ்சகிர்த்தியம் நடவாதிருந்ததினால் சீவனஞ்செய்வதற் கில்லாமல் மிகவும் வருத்தப்படும்போது வியாசனென்பவன் குடிகளை தன்வசப்படுத்தி அரசனைச்சார்ந்தவர்களெல்லாம் வலங்கையென்றும்விஸ்வப்பிரம்ம வம்மிசத்தாரை இடங்கையென்றும் ஏற்படுத்தி விஸ்வபிரம்ம வம்மிசத்தார்வீட்டில் இராநின்ற வேதாகமங்களைக் கொள்ளையிடுவதுங் கொலைசெய்வதுமானார்கள்.

## தேசாதிபதி ஜெயவீரராஜுகாரு.

(௧௭) அக்காலத்தில் அடுத்ததேசத்தில் அரசுசெலுத்தும் தேசாதிபதியாகிய செயவீரராசுகாரு தன்சேனையுடன் வந்து கொள்ளையடிக்கும் துன்மார்க்கரைக் கண்டதுண்டமாய்வெட்டிராசபட்டங்கட்டிக்கொண்ட காளிங்கனென்னுங் கயவனைக் கைப்பிடியாய்ப் பிடித்து நீ அந்தத்துன்மார்க்கரான வியாசனுடைய [illegible] தகப்பனைக் கொலைசெய்தாய் இரண்டாவது விஸ்வப்பிரம்ம வம்மிசத்தார்செய்யும் பஞ்சகிருத்தியத்தால் சகல உயிரும் உயிர்வாழ்வதும் நன்றாய்த் தெரியும் அப்படியிருக்க நீயெப்படி அவர்களை நீக்கி ஜோதிசங்கமர்களான வியாசன்முதலானவர்களை ஆசாரிபீடமாய் வைத்துக்கொள்ளலாம் அப்படி

வைத்துக்கொண்டபடியால் அந்த துன்மார்க்கனான வியாசன் விஸ்வப்பிரம்ம வம்மிசத்தாரை இடங்கையென்றும் மற்ற சகல்சாதிகளும்வலங்கையென்றும்பிரித்து விஸ்வப்பிரம்ம வம்மிசத்தார்வீட்டில்கொள்ளையிடவும் கொலைசெய்யவு மானீர்கள்.

இந்ததுன்மார்க்கனான வியாசன் சொற்படிநடந்த உன்னைக் கண்டிக்கவேண்டியது ராசநீதி அந்தராசநீதி நான் உனக்குச்செய்யவேண்டிய கடமையென்று காளிங்கனைத் தன்வாளால்வெட்டிவியாசன்முதலானவர்களைத் தேடும்போது வியாசன் முதலானவர்கள் விஸ்வப்பிரம்ம வம்மிசத்தார்வீட்டில் அகப்பட்டவரையில் வேதாகமசாஸ்திரங்களைசுற்றிக்கொண்டு தலைமறைவாய் ஓடிப்போய்விட்டார்கள்,

மேற்சொல்லிய பண்புரிச்சோழன்குமாரன் பாலனைச்சோழனுக்கு மங்களவாத்தியமுழங்க ராஜபட்டங்கட்டி முன்போலவே விஸ்வப்பிரம்மவம்மிசத்தை ஆசாரிபீடமாய்வைத்து மனுநீதிவழுவாமல் அரசுசெலுத்தும்படி ஜெயவீராசன்செய்து தான் பட்டணம்போய்ச சேர்ந்தான்.

விஸ்வப்பிரம்ம வம்மிசத்தார் மனுநீதிவழுவாமல் வேதசாஸ்திர விதிகளும் வர்ணாச்சிரமங்களும்நடத்திவருவதினால்ஆஸ்திகாளென்றும் விப்பிராள் மாறுபாடாய் நடக்கிறபடியினாலே நாஸ்திகாளென்றும் சாஸ்திரசித்தாந்தமானபடியினால் விப்பிராளுக்கு துன்மார்க்காள் உதவியால் விஸ்வப்பிரம்மவம்மிசத்தாரை வஞ்சித்தபடியால உலகத்திலே வேதசாஸ்திரவிதிகளும் யாகாதிகர்மங்களும் இயமம் நியமாதி ஆசாரங்களும்சமதமாதி சற்குணங்களும் மைத்திரியாதி சுகுணங்களும்தீர்த்தஸ்தலமான விரத உபவாசாதிதர்மங்களும் நஷ்டப்படுத்திப்போட்டபடியினாலே லோகத்தில் அவாளவாளிஷ்டப்படி வர்ணாசிரதர்மமில்லாமல் வேதாகமங்கள் சூத்திராள் வாசிக்கக்கூடாதென்று விப்பிராள்சொன்னதை மெய்யென்றுநம்பினார்கள்.

## வியாசன்மித்திரபேதஞ்செய்தது.

(௧௮) விஸ்வப்பிரம்ம வம்மிசத்தாருக்கும் அரசர்கள் முதலானவாளுக்கும் உள்ள ஒருமையை வியாசன்கண்டு தன்மரபில்வந்த விப்பிரர்களும் விப்பிரிஷிகளும் மேன்மையடையும்படி எண்ணியும்முடியா

றல் கடைசியில் அவர்களுக்கு வசியம், பேதனம், மோகனம், தம்பன
ம், ஆக்ருஷணம், உச்சாடனம், வித்துவேஷணம், மாரணம், என்னும்
அஷ்டகர்மங்களில் வசியமாவது ஸ்திரீ புருஷர்களையாவது அரசரையா
வது விலங்குமுதலிய பிராணிகளையாவது மந்திரசித்தியால் வசிக
ம்படுத்துகையாம் பேதனம் இருவருக்குமுண்டாகயிருக்குஞ் சிநேகத்
தை இயந்திரங்களாற் பிரித்தலாம் மோகனம் மந்திரவலிமையால் ப
யங்கச்செய்தலாம் தம்பனம் மந்திரஜெபத்தினால் ஆணைசெய்துத்தடு
த்தலாம் ஆக்ருஷணம் மந்திரோச்சாரணையினால் அழைத்தலாம் உச
்சாடனம் தேவதையை உருவேற்றலாம் வித்துவேஷணம் மந்திரவலி
யால்படைவெல்லுகையாம் மாரணம் யந்திரயேந்திரமூலமாகயில்லிது
னியபியமறிக் கொலைபுரிதலாம் இவைகளால் ஒருவர்க்கொருவரொற்
மையில்லாமல் விரோதப்படும்படி சாஸ்திரபுராண கற்பனை களாலும்
கலகமேசெய்துவிட்டான்.

## வியாசன் கரமற்றது.

(௫௯) இந்தவியாசன் உடலுமுயிருமாயிருந்த விஸ்வம்பிரம்மவ
ம்மிசத்தாருக்கும் மற்ற அரசர்கள் முதலானவாளுக்குங்கலகஞ்செய்
துவிட்டுத் தான்தலைமறைவாய் ஓடுவதைநக்காசியில் பிரம்மரிஷிகள் க
ண்டு ஆதியில் அண்டபுவன சராசரங்களையும்படைத்த பஞ்சமுக சா
மராட் விஸ்வப்பிரம்மாவாலே யாவரும் இகபரசாதனமடையும்படி அ
ளித்த ஐந்துவேதத்தை நான்கு வேதமென்றும் பஞ்சமுகப்பிரம்மா
வை நான்முகப் பிரம்மாவென்றும் பஞ்சமூர்த்திகளை திருமூர்த்திக
ளென்றும் ஜாதிபேதஞ் சமையபேதமில்லாதிருந்ததை பலஜாதியெ
ன்றும் பலசமயமென்றும் ஒருவர்க்கொருவர் ஒருமையில்லாமல் பதி
னெண்புராணக் கட்டுக்கதைகளைச்செய்துஇவ்வுலகத்தைக் கெடுத்தா
யே இதனால் உனக்கு இகபரசாதக முண்டாவென்று இகழ்ந்தார்கள்.

வியாசன் பிரம்மரிஷிகளைநோக்கி என்விதி அனுகூலமான கா
லத்தில் யான்செய்தபதினென்புராணம் பயன்படும்பிரதிகூலமானகா
லத்தில் இகழப்படும் ஆகையால்இந்தநாட்டில் அவமானப்படுவதைவி
ட இனி வனவாசத்தைப்பார்க்கிலும் சுகமில்லையென்றான்.

பிரம்மரிஷிகள் நீர்பேசுவதிற் சமர்த்தரென் றெங்களுக்கு தெ
ரியும் வேதாகமபுராணங்கள் விராட்டு விஸ்வப்பிரம்மமே பரத்துவம
ன்றி மற்றொருபரத்துவமில்லையென்றுசொல்லியிருக்க அதைமறைத்

றுமனேம்போனபடி துன்மார்க்கத்தால் பலவிதமாய் உளறியிருக்கிற படியால் எவ்விதத்திலும் நீ துன்பத்துகளாவாயென்பதற்கு யாதொருசந்தேகமில்லை ஆனால் சாதுக்கள் எங்கே போனாலும் மரியாதைகிடைக்கும் நீயோவென்றால் திரிபுரங்களை யெரிந்த தீயைப்போலவும் அநேகவிதமான அவிஷதங்களாலேயும் தீராக்கொடிய ரோகம்போலவும் திரிமூர்த்தி முதலான தேவர்களை தூஷித்தபழியான துர்ள்தோஷம் வளர்ந்துவருவதற்கு யாதொருசந்தேகமில்லை உம்முடைய சாமபேத தானதண்டமென்று மாதுர்வித உபாயத்தால் விஸ்வப்பிரம்மவம்மிசத்தாரை ஒருவரும் மதியாமல் உங்கள்வம்மிசத்தை மதிக்கும்படி நீசெய்த மந்திர எந்திரமானது ஒருக்காலும் பயன்படமாட்டாது.

ஒருவேளை இவ்வுலகத்தின மாயையற்று தேவரீர் காட்டுக்குப் போனாலும் அவ்விடத்தில்வாசமாயிராநின்ற வேடர் வில்லியர் கள்ளர் மறவர் குறவர் இருளர் முதலானவாள் உங்களினங்களாகையால் அவ்விடத்திலும் பேதாபேதங்களை ஏற்படுத்தி ஒருவர்க்கொருவர் மித்திரபேதஞ்செய்தால் பிராணசங்கடம் நேரிடும் ஆகையால் தாங்கள் பாரதமுதலான பதினெண்புராண கட்டுக்கதைகள் செய்த பண்டிதராகையால் தங்களுக்குத்தெரியாத ஆலோசனை நாங்களென்னசொல்லப்போகிறோம்.

அந்தப் பிரம்மா சபையில் விளங்காநின்ற ஒரு வீரமுஷ்டியானவர் எழுந்து ஐயா வியாசபகவானே எனக்கு மற்றொன்றும் தாங்கள் போதிக்கவேண்டியதில்லை திரிமூர்த்திகளில் எந்தமூர்த்தியை நானறியவேண்டுமென்றான்.

வியாசன் ஸ்ரீ விஷ்ணுவே தெய்வமன்றி மற்றொருதெய்வமில்லையென்றான்.

வீரமுஷ்டி விஷ்ணுவே தெய்வமென்றீர் மற்றொரு தெய்வமில்லையென்றீர் அப்படிக்கிருக்க நீங்களெப்படி அந்த விஷ்ணுவைகூட பற்பலவிதமாய் உமது பதினெண் புராணங்களில் தூஷித்த காரணமென்ன.

வியாசன் அந்த வீரமுஷ்டியைநோக்கி வலதுகாத்தை ஆகாயத்தில்தூக்கி அந்த விஷ்ணுவே தெய்வமென்று சத்தியமாய்ச் சொன்னேனென்றான் அந்த வீரமுஷ்டி நீ சத்தியமாய்ச் சொல்லியிருந்தால் அந்த விஷ்ணுவை நீயேன் தூஷித்தாயென்று தன் காற்றிற் பற்றியி

ருந்த உடைவாளால் வியாசன் வலதுகரத்தை மணிக்கட்டுவரையிற் கண்டித்தான் அந்த வலதுகரந்தான் வீரமுடிகளின் விருதுக் கொடிகள் அடையாளமாக விளங்குகின்றது

## கலியுகாதி அதர்மம்,

(௩௰) ப - கு - ஓமார்க்கசஹாய ஆசாரி எங்கள் முனோர்கள் பூதபவிஷ்யத் வர்த்தமானங்களைப்பற்றி முன்னமே எழுதியிருக்கிறார்கள் அந்த உண்மை கமலாலயபுராணத்தில் சதுர்த்தராகிய சூத்திரர் கலியுகத்திலே வேதமோதி வேதபோதகராவார்கள் வைசியர்கள்வேதநூல்களின்விதிப்படி நடவாமல் அதிகலாபஞ்சம்பாதிக்கப் பொருளாசைகொண்டு திரிவார்கள்,

க்ஷத்திரியரும் வேதமுதலிய நூல்நெறிவழுவி நாடுந்நிறைவாங்குவார்கள் தயாளசிந்தை யுடையோராய் உலகத்தை யாசாளமாட்டார்கள் குருவை சிஷன்பகைப்பான் அரசனை அமைச்சர்கள் விரோதிப்பார்கள் அடிமை எஜமானுடனே கடுஞ்சொற்பேசி பகைசாதிப்பான் மனைவி தன் கணவனை வெறுப்பாள் குலத்திற்பிறந்த பெண்ணும்பிள்ளைகளும் மாதா பிதாவின் சொற்கேளார்கள் சூத்திரர்கள் பிராமணர்முதலிய மேற்குலத்தோருக்கு எழுந்து தண்டஞ்செய்யாதிருப்பார்கள் இராஜ அதிகாரம்பெற்று அரசாட்சி செய்வார்கள் சிலர் சிவமுத்திரையைத் தரித்துக்கொண்டு பிர்ம்மாவையும் விஷ்ணுவையும் நிந்தனைசெய்வார்கள் சிலர் விஷ்ணுமுத்திரையைத் தரித்துக்கொண்டு சிவனைதூஷிப்பார்கள்சிலர்அருகசமயிகளாகிவேத விதிகளை அப்மென்றிகழ்ச்சி செய்வார்கள் மேகம் அரிதாகமழைபெய்யும் பூமி விளைவு குன்றிப்போம் குறைவாகவிளையும் நீசஜாதியார் முறைமை தவறி மற்றவர்களுக்குத் துன்பமேசெய்வார்கள்.

மா - ஆ - ஓ - பஞ்சாங்கம் குண்டையனே கலியுகத்தில நடக்கப்போகிற அதர்மங்களைப்பற்றித் தெரிபலானேன் ஆறு விதற்குமுன் மூன்றுயுக தர்மத்தையும் விளம்பும்படி கோருகின்றேன்,

## திரேதாயுகதர்மம்,

(௩௧) ப - கு - ஓ மார்க்கசஹாய ஆசாரி திரேதாயுகத்திலேயுள்ளவர்கள் ஆசையுங்கேடு மற்றவர்கள் சிவபூசை வேதவொழுக்கம்இவைகளில் வழுவார்கள் மோக்ஷத்தையே நாடுவார்களே யன்றி நரகத்தை

நாடழிவதில்லை ஸ்திரீ மலடியாவதில்லை அவள்பெற்றபிள்ளைமரணத்தைக் காண்பதில்லை வயோதிகத்தில் மரணமடைவதன்றி மத்தியில் மரிப்பதில்லை மாதமும்மாரிபெய்து செல்வம் விருத்தியாகும் பூமியிலெங்கும் தரித்திரரில்லை அரசர்கள் ஆறிலொன்று கடமைவாங்கி குடிகளை ரட்சிப்பார்கள் போர்த்தொழில் புரிவதில்லை ஒருவரும் தண்டனையடைவதில்லை நால்வகைவருணத்தாரும் தங்கள் குலாச்சாரம் தவறாமல் நடப்பார்கள் கலியுகத்தில் தர்மமில்லாமையாலும் பகைசாதித்தல்முதலிய விரோதமுண்டாமென்று எங்கள் முன்னோர்கள் சொல்லியபடி நீங்கள் புராணவிதிகளை விலக்கி வேதவிதிப்படிவிவாகஞ்செய்ய எத்தனித்து உங்களிலேயே வாத்திமார்களை நியமகஞ்செய்து இருக்கிறீர்கள் இந்த உண்மைக் கென்னசொல்லுகிறாய்,

---

## யுகதர்ம வித்தியாசம்.

(சஉ) மா - ஆ: ஓ குண்டையனே இதுகளை உண்மையென்று சொல்வதெப்படி. உங்கள் சீவன் விர்த்திக்காக உங்கள் முன்னோர்கள் கற்பித்த கட்டுக்கதைகளேயல்லாமல் வேறல்ல அது எப்படியென்றால் பாரதங் கலியுகத்திற் பாடியதாயிருக்க மேலிடுங் கலிகாலமேயென்று விசேஷிப்பதென்ன பாரதத்திற்குக் காரணரா யிருந்தவர்களும் அந்தயுத்தத்தை நடாத்தின கிருஷ்ணனுமே புன்மை நிகழ்த்தும் வஞ்சநெஞ்சராயிருக்க கலியுகத்தார் அப்படிப் பட்டவர்களாய் இருப்பார்களென்பது என்ன விபரீதம் கௌதமன்முதலிய ரிஷிகள் தவநெறியிற்பிறந்ததில்லையா பாராசர் வலைமகளைப்புணர்ந்ததும் வீமன் இடும்பியை மணந்ததும் கிருஷ்ணன் கோபிகாஸ்திரீகளை வரைவின்றிப் புணர்ந்ததும் ஜாதிவரம்பழிந்து நீதி தவறியதல்லவா சந்திரன் தனது குருபத்தினியைக் கவர்ந்ததும் இந்திரன் கௌதமரிஷிபத்தினியைக் கூடினதும் நீதிதவறல்லவா. விஷ்ணு பலகாலஞ்செய்த மித்திரபேதங்களும் சூரன் ராவணன் துரியோதனன் முதலியோர் தேவருக்கும் மனிதருக்கும் செய்த அநியாயங்களெல்லாம் வஞ்சகமல்லவா அகலிகையும் ஏழைப் பாள்திரிகளும் அவர்களுடனே போகம்பண்ணின தூர்த்தர்களும் ஸ்திரீபுருஷர்கள் கற்புநெறி தவறினவர்களல்லவா விஷ்ணு பக்தனாகவும் வியாசராகவும் காசிபராகவும் அவதரித்து சமையபேதங்களியற்றினது வேதவிரோதமல்லவா சூத்திரரும் வேதத்தை கற்பார்களென்பது அதிசயமா இருக்கு வேதசாரமாகிய ஸ்தோத்திரப் பிரகரணங்கள் முன்னுகங்களிலே சூத்திரருக்கு வெளியாயிறதென்று சொ

ல்லியிருக்கவில்லையா எசுர்வேத உபதேசங்கள் பரம்பியிருக்கவில்லையா சாமவேதசாரமாகிய கூடஸ்தப் பிரம்மமென்பதைக் குறிக்கும் மகாவாக்கியப்பொருள் வெளிவந்ததில்லையா அதர்வணவேத மந்திரங்களைச் சூத்திரர் கற்றிருக்கவில்லையா இவ்விதமாக கிரேதாயுகம் திரேதாயுகம் துவாபரயுகம் என்றுசொல்லும்முன்னுகங்களிலே வேதம்நாலுவர்ணத்தவர்களுக்கும் வெளிவந்து கற்று அனுஷ்டிக்கபபட்டதாயிருக்க நான்காம் யுகமாகிய கலியுகத்தில் சூத்திரரும் அதைக் கற்பார்களென்று சொல்லும் உங்கள் தந்திரம் எப்பேர்கொத்தது,

அந்தணர்முதலிய மூற்குலத்தோர் மூவரும் தத்தமது குலதருமங்களையும் நீதிநெறிகளையும் ஆசாரங்களையும் வழுவிப்போவார்களென்றுசொல்லில் அம் முக்குலத்தவர்களுக்குள் அநேகர் முன்னுகங்களிலேயே வழுவி நடந்தார்களென்று உங்கள் விப்பிரகுலபுராண இதிஹாசங்களில் வேண்டிய சாட்சிகளிருக்க நான்காம் யுகத்திலே மாத்திரம் வழுவி நடப்பார்களென்று கூறுவது மோசமல்லவா இத்தனை தந்திரங்களும் நீங்கள் வயிறுவளர்க்கும்பொருட்டேயாம் என்றறிக,

தேவேந்திரன் தன்குருவாகிய பிரகஸ்பதியை அவமதித்தானென்றும் பிரமகற்பனைப்படி குருவாகக் கைக்கொண்ட விச்சுவுருவனை யாகமுகத்திலே சூலாயுதத்தால் வதைத்தானென்றும் சந்திரன் தன் குருவின் மனைவியைக் கவர்ந்துகொண்டு அக் குருவுக்கு விரோதமாக யுத்தஞ்செய்தானென்றும் இரண்டாம் யுகமாகிய திரேதாயுகத்திலேக்ஷத்திரியகுலத்தரசனாகிய திரிசங்குமகாராசன் தன் குருவாகிய வசிஷ்டமுனியுடனே எதிர்த்து வார்த்தையாடினனென்றும் மூன்றாம்யுகமாகிய துவாபரயுகத்திலே வீட்டுமாச்சாரியர் தனது குருவாகிய பரசுராமருடனே எதிர்த்துப் பத்துநாள் யுத்தஞ்செய்து அவரைமுறியஅடித்தானென்றும் பஞ்சபாண்டவர்கள் தங்கள் குருமாராகிய துரோணாச்சாரியரைக் கொலைசெய்தானென்றும் கிருபாசாரியர்களுடன் பகைத்துயுத்தஞ்செய்தார்களென்றும் திருஷ்டத்துய்மனான தன் குருவாகிய துரோணாச்சாரியரைக் கொலை செய்தானென்றும் ஜனமேஜய மகாராசன் வேதவியாசர்மேல் கோபங்கொண்டு அவரை யேகதேசமாய்ப் பேசினனென்றும் நீங்கள் செய்த புராணகாவியங்கள் முறையிட நான்காம்யுகத்திலேமாத்திரம் சீஷர் குருமாரைப் பகைப்பார்களென்றுபேசுவது என்னவிவேகம்,

பிரகஸ்பதியின் மனைவியாகிய தாரையென்பவள் சந்திரனுடனே விபசாரஞ்செய்துபுதனைப்பெற்றாளென்றும்கௌதமமுனியின்மனைவி

யாகிய அகலிகை இந்திரனுடனே களவுபுணர்ச்சிசெய்து கல்லாகச்
சமைக்கப்பட்டாளென்றும் ஊர்வசியென்னும்தேவரம்பை அர்ச்சுனனு
டனேகளவிற்கூடவருந்திக்கேட்டும் அவன் அதற்கு உடன்படாததி
னால் அவனைபேடியாக சபித்தாளென்றும் இன்னும் இப்படி அனேக
ம் ஸ்திரீ முன்னுகங்களிலே பலருடைய ஸ்திரீகளா யிருந்தார்களென்
று சொல்லப்பட்டிருக்க கலியுகத்தில்மாத்திரம் பெண்கள் கற்புநெறி
தவறி நடப்பார்களென்பதுவிபரீதம்.

பிறகு ரிஷி தன்னைப்பெற்ற மாதாவைவாளினாற்கொலைசெய்தா
ரென்றும்பரசுராமர்தாயைச சிரச்சேதம்பண்ணினாரென்றும் பப்புரு
வாகன் தன்பிதாவாகிய அர்சுனனைக்கொன்றானென்றும் அருச்சுன
ன்பிதாவாகிய இந்திரனுடனே எதிர்த்து யுத்தம்பண்ணினானென்று
ம் விஷ்ணு தான்பெற்ற பிள்ளைகளை அருச்சுனனைகொண்டுகொல்லு
வித்தாரென்றும்-

பிரம்மதேவர் தன் மகனாகிய நாரதமுனியைச் சபித்தாரென்றும்
வசிஷ்டமுனிவர் தான்பெற்ற பிள்ளைகள் நூறுபேரையும் சண்டாள
ராய்ப்போகும்படி சபித்தாரென்றும் இப்படியே முன்னுகங்களில் பி
ள்ளைகள் பிதாமாதாக்களுக்குக் கீழ்மையாதிருந்த கொலைபுரிந்தனரெ
ன்றும் சாபங் கொடுத்தனரென்றும் புராணங்களிற கூறியிருக்க கலியு
கத்திலேமாத்திரம் அப்படி நடக்குமென்பது உண்மையெனப் போ
மா இவ்வாறாக உங்கள் விப்பிரகுல ரிஷிகள் பதினெண் புராணங்களை
யும் மற்ற இதிஹாச சாஸ்திரங்களையும் உங்கள சுயப பிரயோசனத்தி
ற்கு சௌக்கியததிற்கும் கற்பித்த கட்டுக்கதைகளை நாங்க ளனுசரிப்
பது நீதிதர்மமா யெங்களாதிவேதமே உண்மையாகையால் அந்தவே
தவிதிப்படி வழுவாது நடப்பது விஸ்வப்பிரம்ம வம்மிசஸ்தருக்குரிய க
டமையென்று திஷ்டாந்த தார்ஷ்டாந்தமாய் வேதவிதி யிருப்பதால
புராணோக்த பிரகாரம் ஒருக்காலும் நடக்கவொண்ணாது,

(௨௬) ப - கு - ஒ மார்க்கசஹாய ஆச்சாரி நீங்கள் விஸ்வப்பிரம்
மவம்மிசமா பஞ்சமசாதியல்லவா,

மா - ஆ - ஓ பஞ்சாங்கம் குண்டையனே வேதஸ்ருதிப் பிரமா
ணமாய் பஞ்சமுக விஸ்வப்பிரம்மாவால் பஞ்சகிர்த்தியத்திற்கும் தலைவ
ராய் விளங்காநின்ற விஸ்வப்பிரம்ம வம்மிசத்தாரை விஸ்வப்பிராமணரெ

ன்று வேதாகமம் முதலியவைகளின் நிச்சய கிராமபாச்சகளாகிய உங்களுக்கு வேதோக்தமேது கர்மாதிகாரமில்லை விஸ்வப்ராம்மணருக்கே அதர்வண வேதத்திலிருக்கிற பீஜாக்ஷரம் ஓம்-அம்-ஐம் ஊம்- இயம் ஹிம-மௌம் சாம்-இந்த பீஜாக்ஷரமும் காயத்திரி யென்னப்பட்டதில் உசு-வது அக்ஷரத்தில் தகாரமென்றும் சொல்லப்பட்ட அக்ஷரந்தான் விஸ்வப்ராம்ம வம்மிசத்தாருக்கு கர்த்தவ்யம் இதன்றியில்தேவதைகளுக்கு துவஷ்டப்ராம்ம பஞ்சாங்கம் புரோகிதம் செய்ததினால் தேவபிராமமணரென்றும் தேவர்களுக்கு ஆதிஉற்பவம் சைவம் வைஷ்ணவம் உண்டாகச்செய்தது எசுர்வேதம் இரண்டாவது அஷ்டகம் ஐந்தாவது பநசையில் சொல்லப்பட்டிருக்கின்றது இதற்குச் சுருதிப்பிரமாணதேவர்களுக்கு துவஷ்டப்ராம்மா புரோகிதஞ்செய்ததினால் தேப்ராம்மணரென்றும் கர்மாதி காரத்திற்குச் சிருஷ்டிகர்த்தா வாகையால் விஸ்வப்ராமணரென்றும் நாமமாச்சுது வேதோக்தமாய் கர்மாதிகாரம் விஸ்வபிராமணருக்கிருக்க அசேதனமாய்ப்பிறந்த கிரும பாச்சகாளாகிய நீங்கள் புராணோக்தமென்று கர்மங்கள் ஏற்படுத்திய வியாசன்முதலான ரிஷிவம்மிசததில உற்பத்தியான உங்களுடைய வம்மிச பாரம்பரையைக்கேள் அஃதாவது.

சிஷியஸ்ருங்கோமருகோஜாத
கௌசிகோகாதிநந்தந
ஜமபுகோஜம்புகோத்பத்தி
கௌதமோகௌதசம்பவ
வால்மீகோபரோத்பத்தி
அகஸ்தியகும்பசம்பவ
வியாசோலுப்தசம்பூதோ
வசிஷ்டாவூர்வசிசுத
நாரதோப்சகிபுத்ரோ
கௌண்டன்யோ முண்டகிசுத
மதங்கஸயமதங்கஸ்யாத
மாண்டவ்யோமண்டுகிசுத
சாங்க்யாசம்சசம்பூதோ
கார்க்கேயோ கார்த்தவசுத
சுநகிகர்ப்பசம்பூதோ
சௌநகாதிமஹாரிஷி

என்னும் மனுஸ்மிருதிப்படிக்கு கலைக்கோட்டார் மான் வயிற்றிலும் கௌசிகர் காசிமகாராஜாவுக்கும், ஜம்புகர் நரியின் வயிற்றிலும், கௌதமர் பசுவின்வயிற்றிலும், வால்மீகர் வேடச்சிக்கும் அகஸ்தியர் கும்பத்திலும், வியாசர் செம்படச்சிவயிற்றிலும், வசிஷ்டர் தாசிவயிற்றிலும, நாரதர் வண்ணாத்திவயிற்றிலும் கௌண்டந்யர் முண்டச்சிவயிற்றிலும். மதங்கர் சக்கிலிவயிற்றிலும் மாண்டவ்யர் தவக்களை வயிற்றிலும், சாங்கயர் பறைச்சிவயிற்றிலும், கார்க்கேயர் கழுதைவயிற்றிலும், சௌனகர் நாயின்வயிற்றிலும இப்படிப்பிறந்து அசேதனமாயும் நிர்மூடத்தனமாயும் யாதொருபுத்தியும மதியும் ஜீவனமுமில்லாமல காய்-கனி-கிழங்கு-வேர்களைப்பிடுங்கித் தின்னுகிறதுமல்லாமல் பலவித மிருகங்களையும் பட்சிகளையும பிடித்து சுட்டுத்தின்கிற உங்களுக்கு ஐந்துவேதமுதலானதில் ஒருமொழிகூட பாத்தியமில்லாததை அறியீர்களோ,

(௪௪). ப - கு - ஓ - மார்க்கசஹாயஆசாரி விபாசரிஷிவேதத்தைச்சிக்கறுத்தாரென்றும் புராணமுதலான இதிஹாசங்களைச்செய்துவேண்டிய அற்புதங்களைக் காண்பித்தாரென்றும் சாஸ்திரங்களில் ஏற்றையிட்டிருந்த அவரையும் மற்றரிஷிகளையும நீங்கள் இழிவாய்ச்சொல்வது தர்மமல்லவே.

மா - ஆ - ஓ பஞ்சாங்கக் குண்டையனே அந்த ரிஷிகள் செய்த அற்புதங்களைக் கிஞ்சித்துச்சொல்லும் உண்மையானதாயிருந்தால நாங்களதற்கிணங்கவேண்டியதே.

(௪௫) ப-கு - ஓ மார்க்கசஹாயஆசாரி அகஸ்தியர் விந்தமலையைப் பாதாளத்திற்புக அழுத்தினாரென்றும் பரமசிவன் பார்வதியை இமயமலையிலே கலியாணமுடித்தபோது ஜனத்திரளின் பாரத்தினால் உத்தரபூமிதாழ்ந்து தட்சிணபூமி உயர்ந்ததைக்கண்டு அவரைச்சிவன் அனுப்ப பொதியமலையிலே போயிருந்து பூமியைச் சமமாக அகஸ்தியர்செய்தாரென்றும் சமுத்திரநீர் கையிலேந்தி ஆசமனம் பண்ணினாரென்றும் துர்வாசமுனிவர் விஷ்ணுவை வைரவர்சூலாயுதத்தால் நெற்றித்துளைபுண்ணாவும் இலக்குமியைப்பிரிந்து வருந்தவும் சபித்தாரென்றும் கௌதமர் தேவேந்திரனுக்கு ஆயிரம்யோனிபுண்டாகச் சபித்தாரென்றும் பிருகுரிஷி விஷ்ணுவை பூலோகத்திலே பலபிறவி பிறந்துவருந்தச் சபித்தாரென்றும் இன்னும் பலரிஷிகள் பற்பலஅற்புதங்களைச் செய்தவென்று அநேக நூல்களில் முறையிடுவதை நீங்கள் வாசித்துணர்ந்ததில்லையா.

மா - ஆ - ஓ பஞ்சாங்கங்குண்டையனே இக்கதைகளை எவர்கள்
தான் நம்புவார்கள் சொல்லுவார் சொன்னாலும் கேழ்ப்பவர்க்கு மதி
யில்லையா அகாவஸ்துவான கல்மலை செருக்குக்கொண்டதும் விஸ்வ
ரூபம்பெற்றதும் சூரியனைமறைத்ததும் எவ்வாறு இதுநியாய விரோ
தமான கட்டுக்கதையென்பதற்குச் சந்தேகமா விந்தமென்னுஞ்சிறும
லை ஒன்பதுகோடி ஐம்பதுலக்ஷம் யோசனைதூர மளவுக்கு மேலான
தா யுயர்ந்ததென்பதை யார்நம்புவர் மேலும் சூரியன் ஓர் பிரமாண்ட
ஜோதியாகி வானவீதியின் மத்தியிலே நிலைபெற்றிருக்க அதனைச்சுற்
றியோடுகின்ற கிரிகங்களுள் ஒன்றாகிய பூமியின ஒரு சிற்றிடத்தமை
ந்துகிடந்த விந்தமென்னுஞ் சிறுமலை உன்னதங்கொண்டெழும்பி சூரி
யனை மறைத்துநிற்பது எவ்வாறு பூமியுருளவே மலையும் அப்பூமியுள்
ளதே யாதலால் அதனுடன் தானும் கீழ்மேலாயுருளுமே அப்படிக்கி
ருக்க இந்தப் பொய்யை மெய்யென்று அங்கீகரிக்கும் விவேகிகளுக்
கென்னபெயரை வகிக்கலாம்.

கன்னியாகுமரிதொடங்கி மிலேச்சதேசத்தினிறுதிவரைக்கும்கி
டக்கிறபூமியின் செம்பாதி பகிர்ந்துபார்க்கில் இமயகிரி தக்ஷணபாகத்
தில் நிற்பதேயன்றி உத்தரபாகத்தில் நிற்பதல்லவே இமயகிரி தட்சி
ணமேதாழ்வதன்றி ஒருபோதும் உத்தரந்தாழாதே அப்படிக் கிருக்க
உத்தரந் தாழ்ந்ததென்பது ஒருபோதும் ஒவ்வாத பொய்யெனபதற்
குச் சந்தேகமில்லை.

ஆதலால் குருமுனியாகிய அகஸ்தியர் விந்தமலையைப் பாதாளத்
திற்புக அழுத்தினரென்பதும் பாறங்குறைவினால்மிதந்ததக்ஷணபூமி
யைத்தாழ்த்தி சமனாக்க பொதிய மலையிறபோனரென்பதும் பொய்
க்கதைகளேயன்றி உண்மையல்ல

இவர்செய்த மற்றைய அற்புதங்களும் மற்றயரிஷிகள்செய்தஅற்
புதங்களும் யாதுநியாயத்தாலும் நமபத்தகாத கட்டுக்கதைகளாயிருப்
பது வெளியரங்கமாகையால் அவைகளிலொவ்வொன்றிற்கும் விசே
ஷதிஷ்டாந்தம் வேண்டுமென்பது அவசியமல்ல.

மேற்கூறிய அகஸ்தியமுனிவர் எவ்வுயிர்க்கும் செந்தண்மை பூ
ண்டொழுகுவாரென்றிருந்தும் தனது சொற்கமைந்த சிஷனாயிருந்து
தானிட்ட ஏவல் பழுதறச்செய்து நிறைவேற்றிய தொல்காப்பியருக்
குச்சாபங்கூறி நெடுங்காலமாக அவர்மேல் சலம்சாதித்தும் இன்னும்

# சித்தூர் ஜில்லா;

அநேகர்மேல் கோபசாபங்களைச்செலுத்தியும் வந்தாரென்று உங்கள்
நூல்களே சாட்சியிடுகின்றது.

துருவாசமுனிவர் இந்திரன்முதலிய தேவர்களும் பற்பலமனித
ர்களுக்கும் அநியாயமாக சாபமிட்டுக் கொடுங்கோபமுடையவராய்த்
திரிந்தவரென்று சொல்லப்படுகின்றது.

இவ்விதமாகவே ரிஷிகளென்று நீங்கள்வியந்துபேசுகிற உங்கள்
ரிஷிகளில் அநேகர் பிறர்மேற் கோபஞ்சாதிக்கிறவர்களாகவும் சிலர்
கொலைசெய்கிறவர்களாகவும் நடந்து மனிதர்களிலும் அதிகதுஷ்ட ந
டையினராகவே இருந்தார்களென்று அவரவர் சரித்திரங்களிற் கண்
டிருப்பதினால் இவர்கள் பகல்வேஷக்காரரைப்போல மனிதரைவஞ்சி
க்கும்படி ரிஷிகளென்கிற வேஷம்பூண்டவர்களேயல்லாமல் இவர்கள்
ரிஷிகளுமல்ல அவ்வற்புதங்களைச் செய்தார்களென்பதும் அதுகளைப்
பலவிதமாய் இகழுகிறபடியால் உங்கள் முன்னோர்செய்தது வீண்கற்
பிதங்களே.

(சகூ) ப - கு - ஒ மார்க்கசகாய ஆசாரி எங்கள்முன்னோர்களை
ப் பலவிதமாயிகழுகிறபடியால் உங்கள்முன்னோர்களின்பெருமையை
ப்பற்றிக் கிஞ்சித்துத் தெரியப்படுத்தவேண்டும்,

மா - ஆ - ஓ பஞ்சாங்கங்குண்டையனே பஞ்சாநநோத்பவராகி
ய எங்களுக்கு ஸநத்ஸாதந அபுவநஸபிரத்நவஸுபர்ந நஸ்வென்னு
ம் நாமதேயங்கள் ஆபஸலாயந ஆபஸ்தம்பம் திராமியாநம் கார்த்தி
யாயனம் ரௌபாயனம் போதாயனம் இருக்கு எசுர்சாமம் அதர்வ
ணம் பிரணவமென்னும் ஐந்துவேதமும் சத்தியோஜாதம் வாமதேவ
ம் அகோரம் தத்புருஷம் ஈசானியமென்னும் பஞ்சமுகத்தி லுற்பவி
த்த பஞ்சப்பிரம்ம வம்மிசமான விஸ்வப்பிராமணருக்கு வேதோத்த
மாய் ஐந்து கோத்திரம் ஐந்து சூத்திரம் ஐந்துசாகை பிரவரை முத
லானது முண்டென்று சொல்லப்படும்.

சாமவேதத்தில் துவஷ்டப்பிரம்மா அவதாரம் சங்காசாரியாரெ
ன்று சொல்லப்படும் அவர் சாஸ்வதிபீடம் அந்தபீடத்திற்குசாமவே
தசுருதிப்ரமாணம் காண்டாவசனம் பிரகஸ்பதிவனத்தில் அர்த்த ராத்
திரியில் இரண்டேநாழிகையானபிறகு யாருநாசத்தியமென்று சொ
ல்லப்பட்ட இரண்டாஞ்சாமத்தில் பிரகஸ்பதிவிராட்டென்றுசொல்ல
ப்பட்ட சாமத்தில் ஓம்-கிலீம்-கிறீம்-ஸ்ரீம்-அம்-கரும்-மரும் - சரும்-

மௌனம்-டம்சம்-டஹூம்-வம்-ஆம்-ஹம்-யம் இந்தப் பதினேழு பீஜாட்சரமும் அதில் எட்டு பீஜாக்ஷரத்திற்கு ஏகமாத்திரை த்துவிதமாத்திரை திரிதியமாத்திரை சதுர்மாத்திரையென்னும் இந்த வருணமும் உதாத்ர அநுதாத்தா தீர்க்காசுரமென்னும் அசருக்கில் ௱௨.௮ - ஓங்காரத்தில் அகார உகார மகாரம்யென்று சொல்லப்பட்ட வுதாரத்தில் தகார-உகார ஓகாரமென்னும் இந்தமூன்றுக்கு அதர்வணவேதத்தில் சிலருக்குள்-கம். நம்-கம்-கம்-கம்-டம்-டம் டம்-டம்-டம்-டம்-பம்-டம்-பம்-பம்-பம்-இந்த பீஜாக்ஷரத்தினுடைய ஸப்த-ஸ்பரிஸ-ரூப -ரஸகந்த மஹாபாக்ஷா பிரமாணத்தினுடைய வித்தியாரண்ய பாஷியத்திற்பார்த்தால் விராட்டு பஞ்சமபாகம் மேற்கு விஸ்வபீ பிரம்மாவுக்கு உபநிஷதவாக்கியம் சொல்லப்படும்.

(௬௭) பஞ்சமுகமான அகோரமுகத்தில் துவஷ்டப்ரம்மா அவதாரமெடுத்து சங்காசாரி சரஸ்வதிபீடஸ்தாபனம் செய்ததற்கு ௱௨௮ ஓங்காரத்தில் இந்த பீஜாக்ஷரத்தால் எந்திரஸ்தாபனம் பீடஸ்தாபனம் ஜலஸ்தம்பம் முதலானதுஞ் செய்தார்.

கிருஷ்ணமூர்த்தி அர்ச்சுனனுக்கு பகவதகீதையில் ஞானோபதேசஞ்செய்தார் அதை ஏழாவது அத்தியாயத்தில் அறியலாம்.

பிராணவ்ஹாசர்வவேதஸயா சப்தபுருஷனுவுரி ஓங்காரமென்று சொல்லப்பட்டது ஐந்துவேதத்திற்கு தாயாய் பாவிக்கப்பட்ட ஓங்காரம் பிரணவம் மூலஸ்தம்பம் பிரமாணமாய்ச்சொன்னதுவிஸ்வப் பிரம்மாவர்மேல ஓம் ரீம் என்றுசொல்லப்பட்ட பீஜாட்சரத்தைப் பார்வதிசமேதராகிய சிவசாம்பவமூர்த்தி பிரமாநந்தம் பெற்றபோது ஓம் ரீம் என்று மூலமந்திரமான பஞ்சாக்ஷரம் விஸ்வப்ரம்மாக்களுடைய நாம் பீஜமாயிருக்கிற இதை நாஞகோத்திரத்தால் உற்பவித்த உங்கள் முன்னோர்களான வியாசன்முதலான விப்பிரள் விஸ்வப்ரும்மணளையடுத்து இந்தமந்திர உபதேசத்தைப் பெற்றபடியால் விப்பிரரென்று சொல்லவேயல்லாமல் பிரும்மணளென்றும் பிர்ம்ம ரிஷியென்றும் விவேகிகள் ஒருக்காலுஞ் சொல்லார்கள்.

அதேதெனனில் பஞ்சசிருஷ்டியில் இஞ்சித்தாவது உங்களுக்கில்லாமல் ஜோகி ஜங்கமனைப்போல் யாசகஞ்செய்கிறீர்கள் நாங்கள் பஞ்சசிருஷ்டிகர்த்தவர்களாய்க் காரணகர்த்தவ்யம் நித்தியாநித்தியயம் யங்

கியகர்த்தா யக்கியபக்தா சகலசராசரப்பிரபஞ்ச லயபோஷணை விராட் விஸ்வரூபோனாராயணனாகிய விஸ்வப்பிரமணனாகிய எங்களுக்கு வேத விதியில்லையென்று நீங்கள்சொல்வது நியாயமல்லஎங்களாலே இவ்வுலக சம்ரட்சணை நடந்து வருகின்றது எங்களை விஸ்வப்பிரம்மவம்மிசமென்று வேதம்முறையிடுகின்றது நீங்கள் அந்த ஐந்துவேதத்தை வியாசன் நான்குவேதமாய் சிக்கிருத்தானென்று விஸ்வப்பிரம்ம வம்மிசத்தாருடையஉற்பத்திமுதலானவைகளை வெகுவாய்மறைத்து உலகத்திற்கு விபரீதபோதனையைசெய்துவருகிறீர்கள்மேலும் சுருதிப்பிராணமாம்,

திநிரூபம்மநுரோகநம்வாராசியமயசம்பவா
நக்ஷத்ரம்துவஷ்டகிரூபஞ்சசில்பியோகந்தைநச
விஸவஜஞ்காரணஞ்சைவபஞ்சாங்கமதிதேவத

என்னும் திதிமனுப்பிரம்மாவினாலும்வாரம்மயப்பிரம்மாவினாலும்நக்ஷசத்திரம் துவஷிதப்பிரம்மாவினாலும் யோகம்சிற்பிப்பிரம்மாவினாலும் கரணம் விஸவஜஞபிரம்மாவினாலும் உற்பத்தியாகையால் இந்தஐந்துபேரும் பஞ்சாங்கத்திற்கு அதிதேவதாளானதுமன்றி பிருதிவிமநுரூபம் அப்பு மயரூபம் தேயு துவஷ்டரூபம் வாய்வுசில்பிரூபம் ஆகாயம் விஸ்வஜ்ஞரூபம் இவர்கள் ஐந்துபேரும் நிர்ணயம்நிர்மாணம் வேதோக்தபிறகாரம் உதகும்பம வேதிகை பாத்திரம் முதலானமாங்கல்யமென்னும் விநிக்கிரமங்களும் பூசாவிக்ரக ஆலயக்கிரகம் சாஸ்த்திரம் சேட்சகர்மமும் சகலவர்ணத்தாருக்கும் சீவநதொழில் காமுத்திரையும்சர்வாதார உற்பத்தியும் இப்பரமடையும்படி வேதவிம்களும் ஜயம் அபஜயம் ஜநநமரண உற்பத்தி ஏறபாடுகளும் ஆம்யிலனித்தவர்கள் பஞ்சப்பிரம்மவம்மிசத்தாராகிய நாங்களேயல்லாமல் நீங்களல்ல அப்படியிருக்க எங்களுக்கு வேதவிதியில்லையென்று எப்படிச்சொல்லலாம் உங்களால் உலகத்தாருக்கு யாதொருபிரயோசனமில்லை எங்களாலேயே சகலரும் சவுக்கியத்தை அனுபவிக்கிறார்கள் நீங்கள்தாசந்தான்முதலாகிய பஞ்சகுலத்தில் உறபவித்தவர்களென்று சொல்லுகிறது.

தேவேமுநித்விஜோ ராஜோவைச்யசூத்திரபிடாலக
பசுமலேச்சசண்டாளோ தசவிப்ரக்ர்த்திதா

(௪௮). மாலகுலமுநபுட்டிமாலனிதுஷிஞ்சு
தவிகுலகேலயிட்டிதொங்கதனமு
ஆகிபுட்டினதாவுஆரஸிதாசூடரோய்
விஸ்வதாபிராம வினரவேமா

என்னும்வேமசூதகத்தின்படி பிறந்தார்களென்றும்

பௌரோஹித்தியம் ரஜநிசரிதம் கிராமணித்வம்
நியோகம்மடாபத்தமம் ஹயந்ருதவசனம்ஸாக்ஷிவாதம் பராப்நம்
பரம்ஹதத்வேஷம் கலஜநஹிதம் பராணிநாம் நிர்த்தய்த்துவம்
மநூஷ்யேவோமம் பசுபதேஜந்மாந்தரேபி ॥

என்னும் தருமசாஸ்திரப்படி ஆமசிரார்த்தங்கொடுப்பவனுக்கும்
வாங்குபவனுக்கும் மஹாபாவமென்றுசொல்லியிருக்க தங்கள்சீவனவி
ர்த்தியைக்குறித்துஎந்தருணத்திலிறந்துபோனாலும்அவர்களுடைய
பிதுர்க்களுக்குப் பிதுர்ப்பாவனையாகவும் ஸ்திரீகளுக்கு ஸ்திரீபாவனை
யாகவும் காலாழி பீலாழி கருவளையல் பொட்டுரவிக்கைசேலைமுதலா
னதற்கு இசைத்துப்பெறறுக்கொள்வதும் க்ஷத்திரியர் வைசியர் சூத்
திரர் என்னுமூவரும் புருஷசூத்த வேதோக்தப்படிக்கு பிர்ம்மவம்மி
சமாயிருந்தும இவர்கள் நமஸ்காரம்பண்ணினால பிராமணன்கூட சரி
நமஸ்காரம்பண்ணும்படி வேதவிதியாயிருக்க அப்படிசெய்யாமல் நீங்
கள் இடதுகரத்தைத் தூக்கிக்காட்டுகிறது வலதுகரமற்றுப்போனவி
யாசன்கறபித்த உங்கள் ஆசாரகண்டத்திலிருக்கின்றதோ அல்லதுதி
ரிமூர்த்திகளைத தூஷித்தவியாசன் விரமுஷ்டியால் வலதுகரமற்றுப்
போனான் உங்களுக்கு இரண்டுகரங்களுமிருக்க இடதுகரத்தைமாத்தி
ரம் காட்டுகிறகாரணமென்ன நீஙகள எப்பேர்ப்பட்டவர்களென்றால்
யானையானது தன்மத்தகத்தைகொத்துகிற நிமித்தியம் அங்குசத்
தைத்தானே யெடுத்துப் பாகன்கையிற் கொடுக்கிறுப்போலாயிற்று
சொன்னபொருளை பக்ஷிமிருகங்களறிந்துகொள்ளும்சொல்லாமலறிகி
றவனேபண்டிதன் அப்படியறியாவிட்டால்புத்தியாற்பிரயோசனமெ
ன்ன ஆகையால் நாங்கள் வேதவிதிப்படி செய்யும்விவாகத்தை நீங்க
ள்புராணவிதிப்படிசெய்ய ஆக்ஷேபனைசெய்தால் துன்பத்துக்காளாகு
வீர்கள் அது எப்படியென்றால் தனக்குஇநம்பண்ணுகிறமித்திரன்பே
ச்சைக்கேளாதவன் மருந்துதின்னாத்நோயாளியைப்போல் துன்பத்
துக்காளாவான் மேலும் வேட்டல ஓதல் கொடுத்தல்தவசம் சத்தியம்
உருதி பொறுமை ஆசையின்மையென்னும் இவ்வெட்டுத்தருமங்களை
அறிந்திருந்தும் பிறயோசனமில்லை அதெப்படியெனில் துஷ்டர்கள்வேதா
த்தியாயனம் பண்ணியிருந்தாலும தர்மசாஸ்திரம் படித்திருந்தாலும்
அவர்கள்வார்த்தையில் நம்பிக்கைவைக்கலாகாது ஏனென்றால் எவன்
சுபாபகுணம் எப்படியோ அப்படியே நடக்குமேயல்லாமல் அதற்கு
விரோதமாய்நடவாது,

சித்தார்ஜில்

அந்தியஜாதிதுவிஜாதிச்சு ஏகாதர
ஏகையோநிப்ரஸரூத்சுசா தேகசாகேநஜாயதே.

என்னும் சுலோகப்படி அசேதனமாய் பலபீஜத்திற்குப் பிறந்த வம்மிசமாயிருக்கிற நீங்கள் விஸ்வப்ராம்ம வம்மிசத்தாராகிய எங்களுக்கு வேதவிதியில்லையென்றும் அவ்விதி உங்களுக்கே உரியதென்று சொல்லுகிறீர்கள் அது உண்மையானால் இது சங்கதிகளைப்பற்றி வேதத்தில் ஓர்மொழியாவது உங்களைக்குறித்துக் கூறநிருக்கக் காரணமென்ன ஒருபதியுங்கதியும் மதியுமில்லாத ஜோகி சங்கமரைப்போல் கிராமபாச்சகாளுகிய உங்களை யறியாதவாள் உங்கள் பகல்வேஷங்களைக்கண்டு பிரம்மித்து நீங்களே பிரம்மவம்மிசமென்று சொன்னாலுஞ்சொல்லுவார்கள் இதற்குப்பிரமாணம்.

(சுகூ) பிரம்ஹஞேபகவான்ருத்ரேசுக்ஷத்திரியோ
பாமோஹரிஷி வைசியபிதாமகச்சைவா
இந்த்ர இந்த்ர சூத்ர அஜாயதா

என்னும் சுலோகப்படிக்கு பிர்ம்ம க்ஷத்திரிய வைசிய சூத்திரெளன்னும் நால்வரும் ஒரு பிரமத்தினிடமாகப் பிறந்திருக்க ஒருவருக்கொருவர் சமமரியாதையிருக்க நீங்கள் இந்தநான்கு வர்ணத்திலும் இல்லாத இழிகுலமாதருக்கு உற்பத்தியானவாள்.

ஜெந்மநாஜாயதேசூத்திரு கர்மணாஜாயதேத்விஜ
பாடேநவிப்ராணும் பிரம்மக்கியானந்தா பிருமஹணு

என்னும் சுலோகப்படி உங்களுக்கு ஜன்மமே சூத்திரனென்றும் பிர்ம்மக்கியானத்தினாலே பிரும்மணனென்றும் வழங்கி வருவதால் ஜென்மமே க்ஷத்திரியனுகிய விஸ்வாமித்திர மஹாரிஷி சபானுக்கிரக சாமர்த்திய முடையவனுயிருந்தும் பிருமணனெனப் பேருமில்லாமல் பிரம்மரிஷியென்கிற நாமமில்லாமற்போனதற்குக் காரணமென்ன,

க்ஷத்திரியனுன தசரதமகாராஜாவுக்குப் பிள்ளையாய்ப்பிறந்த ராமன் அரசுசெலுத்துங்காளில் ஒரு சூத்திரன் தபஞ்செய்ததினுல் விப்பிருள்வீட்டுப்பிள்ளை பிறந்ததென்று ருமணிடத்திற்முறையிடுமன்

அந்த சூத்திரனை சம்ஹாரம்பண்ணினதாயும் பின்புவிப்பிருள் வீட்டு ப்பிள்ளை உயிர்வாழ்ந்ததாய் நீங்கள் செய்திருக்கிற புராணங்களை பாமருள் நம்புவார்களேயொழிய பண்டிதாள் நம்பமாட்டார்கள்.

ஸ்ரீராமர் வசிஷ்டன் வியாசன்முதலான ரிஷிகள் இருந்தார்களாக கலியுகம் பிறந்த வெகுகாலத்திற்குப்பின்பு முடிமன்னரில்லாதகாலத்தில் இவாள் உற்பத்தி உண்டாயிருக்க இவாள்நாளையிற்றான ராமர்முதலான சக்கிரவர்த்திகள் இவ்வுலகத்தை யாண்டது.

அக்காலத்திலே இந்த வசிஷ்டன்தானிருந்து ராமர்முதலான அரசர்களுக்கு ஆசீர்வாதஞ்செய்து முடிசூட்டினது அந்த ஆசீர்வாதத்தினாற்றானே சுய ரு-ளய ,,-லட்சம் கோடி வருடமிருந்து அவா ளரசாண்டது இபபேர்க்கொத்த வல்லவர்களாகிய நீங்கள் இப்பொழுதுமிருக்கண்ணிருக்க இக்காலத்திலிருக்கும் அரசர்களுக்கு வயது நூறுக்குள் இருக்கவேண்டியகாரணமென்ன.

(ரு௰) இராமாயணம் விஷ்ணுபுராணம் பாரதமுதலிய நூல்களை ஒன்றுக்கொன்று ஒத்திட்டுப்பார்க்குமிடத்தில் அவைகளில்சொல்லிய சரித்திரங்களும் காலப்பிரமாணங்களும் ஒன்றுக்கொன்றுயுயர்வாயும் தாழ்வாயும் மாறுபட்டேயிருக்கின்றது அதுஎப்படியென்றால் இலங்கையில் வானரப் படையுடனே யுத்தத்திற்குப்போய் இராட்சத சங்காரஞ்செய்து ஜெயமடைந்தானென்று சொல்லப்படும் இராமச்சந்திரனானவன் சூரியகுமாரனுகியவைவசுதமனுவின்மகன் இக்ஷ்வாகுவின் மரபிலே (ருரு) ம் தலைமுறையிற்பிறநது அயோத்திமாநகரத்தை அரசாண்டானென்று சொல்லப்படுகின்றது.

பாரதயுத்தஞ்செய்த துரியோதனன்முதலிய சுற்றத்தவர்களைக்கொன்று குருக்ஷேத்திரமுழுவதையும் ஒருகுடைக்கீழ் அரசுபுரிந்த வதிஷ்டிரனென்னும் அரசன் அரசுபுரிந்தானெனக் குறிக்கப்பட்டகாலத்திற்கும் இடையே எட்டுலட்சத்து அறுபத்தினாலாயிரம் வருடகாலத்துக்கு இருபத்தொன்பது அரசர்கள் அரசாண்டார்களெனப்படுகின்றது இக்கணக்கின்படி பார்த்தால் ஏகசகட்டுக்குஒவ்வொருவனவதுக்குறைய ௩௰-ஆயிரம் வருடமனவாக இந்தராஜரீகம் பண்ணினார்களென்று எண்ணவேண்டும்.

# இத்தார்ஜில்லர்

இதுநிற்க மனுசக்கிறவர்த்தி அரசாண்டகாலத்தில் இராமச்சந்திரன் அரசாண்டகாலபரியந்தம இடையேயுள்ள தலைமுறை அறுக்குறைய கூடி சென்றதென்றும் அந்தமனுச்சக்கிரவர்த்தியின்காலந்தொடங்கி யுதிஷ்டிரன் அருச்சுனன்முதலியோர் இருந்தகாலபரியந்தம் (௯௰) தலைமுறைசென்றதென்றும்சொல்லப்படுகின்றது இக்கணக்கின்படிஇராமச்சந்திரன் இருநதகாலத்திறகுப் பத்து தலைமுறைக்கு முன்னிருந்தாரென்று சொல்லவேண்டியதா யிருக்கின்றது.

பாரதயுத்தம்நடந்தது துவாபரயுகத்திலேயென்று பாரதமுதலியநூல்களால் விளங்குகின்றது இராமசசந்திரன் மரணகாலத்திலே துவாபரயுகமாரம்பித்து உதிஷ்டிரமகாராஜனது தம்பியால அர்சசுனனுடைய பேரப்பிள்ளையாகிய பரீட்சித்துமகாராசன மகுடாபிஷேகமபெறற காலத்தில முற்றுப்பெற்றதென்று இதிஹாசசாஸ்திரங்கள்கூறுகின்றன அந்ததுவாபரயுகத்திறகு எட்டுலடசத்துஅறுபத்துநாலாயிரவருடமென்றுசோதிடங்களிலும கணிதநூலகளிலும் வரையறையாகக்கூறியிருக்கின்றது ஆகவே அக்காலநதுடஙகி இக்காலமவரைக்கும, ஐயாயிரம் வருடகாலம் சென்றதாகவேணும,

கௌசிகராஜனுக்கும் வசிஷ்டமுநிக்கும் நடந்தயுத்தம் இராமச்சந்திரன் இருந்தகாலத்திறகு அனேகதலைமுறைகளுக்கு முன்னே திரேதாயுக மததியில் அயோத்திமாநகரத்தை அரசாண்ட திருசசங்குமகாராசனின் நாள்களிற்சம்பவித்ததென்று இராமாயணத்திற சொலலுகின்றது பாரதத்திற் சொல்லியபடிக்கு துவாபரயுகத்திலே வதிஷ்டமகாராசனிருந்து அரசாண்ட சிலகாலத்திறகுமுன் குருக்ஷேத்திரத்தை அரசாண்டகுருவென்னும் அரசனின் காலத்திறகும சகுந்தலையின் கணவனாகிய துஷ்டியந்தமகாராசனின் காலத்திற்கும இடையே நிகழ்நததாகசசொலலப்படுகின்றது ஆகையால் இவ்விருகணககுகளுக்கும அநேகம் இலக்கம்வருடங்கள்விகறகப்படுகின்றன இவ்வாறாகஉஙகள் முன்னோர்களாகிய விப்பிரர்கள் செய்திருக்கும் புராணங்களும் இதிஹாசங்களும் மற்ற நூல்களும்ஒன்றுக்கொன்றொவ்வாமல் பேதப்பட்டிருக்கும் பிரட்டுருட்டுகளை விஸ்வப்பிரம்ம வம்சஸ்தர்களாகிய நாங்கள்உள்ளங்கைநெல்லிக்கனிபோல் தெரிந்திருகக எங்களில் நடக்கும்சபாசுபஙகளில் உஙகளையும் உஙகள்புராணவிதிகளையும் எவ்வாறு அங்கீகாரஞ்செய்யத்துணிவோம் எங்களுக்காதியாகிய வேதமிருக்க அதின்படி நடப்பதே சரியென்று இந்தசபையிலுள்ள பஞ்சாயததாரே தங்களுக்கு விசிதமாய்த்தெரியப்படுத்துவார்கள்.

# அதாலத்துகோர்ட்டுதீர்ப்பு.

## மதுமாமிச பட்சணம்.

(ருக) ப-கு- ஒருவன்சுபாவமான விவேகத்தை தன்னியல்பி
லிருக்கவொட்டாமல் கெடுப்பதற்கேதுவாகிய லாகிரி சாப்பிடப்பட்
டவனுக்கு புத்தியெவ்வளவு தெளிவுள்ளதாகவிருந்தாலும் அவனை
சான்றோர்கள் அறிவிலா மிருகங்களுக்குச்சரியாய்மதிப்பார்களேயல்
லது குணவானாகமதிக்கமாட்டார்கள அப்படிப்பட்டலாகிரிசெய்பவ
ருக்குத் துணைபடுகிறவனையும குடியனென்றே இவ்வுலக மிகழு
மல்லவா,

மா-ஆ-ஒ பஞ்சாங்கங்குண்டையனே உங்கள் வமமிசக்குடியருக்
கெல்லாம குருபீடமல்லவோ அவளாலென்னில சத்திபூசையெனறுசா
ராயத்தை மூனறுபாத்திரங்களில் வார்த்து சத்தியின்முனவைத்துப
ஷிதமாமிசஙகளுடனே ஆராதனை செய்து மங்கிலியஸ்திரீகளுடைய
பாதஙகளைபபூசைசெயது மதுமாமிசங்களை நைவேத்தியஞசெய்து அ
நதஸ்திரீகளுககுச சாராயத்தைக்கொடுத்து அதில மீந்தஎசசிறசாராய
த்தை குருக்களகுடித்து மறறவர்களுககுப பானையிலிருக்கிற சாராய
ஙகளைப்பாத்திரத்தில்வார்த்து மூன்றுவிசை குடிக்கக்கொடுக்கிறாகள்
அநதசசமையத்தில் எல்லாருமஐயுமகிலீம் சௌவும் என்றமாத்திரம
உச்சரித்துக்கொண்டே தஙகள்யிடதுகையினாலே பாத்திரத்தைப்பிடித்
துக குடித்துக்கொண்டுவலதுகையினாலமாமிசஙகளை பொசிக்கிறாகள்

அப்பொழுது உங்களகுருக்களுக்கு அடிக்கடி சாராயங்களைக்கு
டிக்கும்போதெல்லாம் அவருககு சிஷர்கள் மாமிசத்தை ஊட்டுகிறார்
களா லாகிரியினாலே ஸ்மரணைதப்பி ஆணும்பெண்ணுமவசமாய் விழுந்
துகிடப்பார்களா அச்சமையத்திலேவிப்பிரராகிய குருக்கள் எந்தஸ்
திரீயை அனுபவித்தாலும் தோஷமில்லையென்று வியாசபகவான் தர்
மசாஸ்திரத்திற் சொல்லியிருக்கிறானென்று தனக்குஇஷ்டமானஸ்திரீ
களை அனுபவிப்பார்கள் துறந்தவனைப்போல வாச ஞானம்பேசி சி
லஸ்திரீகள் தங்களுக்கு சிஷராக்கிக்கொண்டு பாலைபூசை புவனைபூசை
திரிபுரைபூசை சத்திபூசை காலவைரவபூசைசொர்ன்னவைரவபூசையெ
ன்றுசொல்கிறவர்களாம் ஆதிவாரம் பௌர்ணமிபஞசபர்வம் பாதப்பிரவேச
முதலிய விசேஷநாட்களில தங்களோடொத்த ஸ்திரீகளும் சிஷர்க
ளும் அப்பூசையில் மாறுபாடாக [illegible]

புடிக்கு கடமென்றும் அதைக்குடிப்பதற்கு வஸ்துதரிசனையென றும் தென்னங்கள்ளுக்குஆகாசபாலென்றும்பனங்கள்ளுக்குகெஞ்சா வுக்குக் கற்பமென்றும் அதைக்குடிப்பதற்குதூபசாந்தியென்றும்மா மிசத்திற்குச் சுத்தியென்றும மச்சத்திற்கு ஜலபுஷ்பமென்றும் கரு வாட்டிற்குக் காந்தமென்றும் கோழிக்கு குப்பைகிளையெனறும் இதுமுதலிய கள்ளப்பெயர்களை ஸ்தாபித்து அதில்முதற்கொடுக்கிற தற்கு ஸ்தூலபாத்திரமென்றும் இரண்டாவதுகொடுக்கிறதற்கு சூக்ஷ பாத்திரமெனறும்மூன்றாவதுகொடுக்கிறதற்கு காரணபாத்திரமென்றும் பெயராம் இப்படி அதைக்குடித்தபின் யாவரும்போஜனஞ்செய்து எழுந்திருக்கும்போது முன்குடித்த பாத்திரத்தி லுள்ள சேஷத்தை ஒருபாத்திரத்தில்வார்த்து முன்குருக்கள் குடித்தபின் யாவருக்குங் குடிக்கக்கொடுக்கிறான் இதற்கே வைரவபாத்திரமென்றுபேர் இதன்றியில் இவாளைப்போல சில கள்ளமதஸ்தாள்.

அஸமத்குருப்யோநம:

என்பதை யுச்சரித்து எல்லாரும் லாகிரிகொண்டு தன்வீட்டஸ்திரீ பரஸ்திரீ சுயஜாதி புறஜாதி விபசாரி சமுசாரியென்று பார்க்கிறதற்கிடமில்லாமல் தங்களிஷ்டப்படி நடக்கிறகுடியருகளெல்லாம் நீங்கள்குருபீடமாயிருக்க அவன் கெட்டான் குடியன் எனக்கு இரண்டு திராம வாவென்று சொலவதுபோல என்னை நிதானியாமல் சொல்லுகிறாய் அப்படிச்சொல்வது நீதியலல மேலும் லீலாசுகர்சொன்ன மூன்றாவதுச்லோகம்.

காமக்குரோதசியாலோபசி தேஹேறதிட்டதிதம்கரஹ
ஞானரத்திஹவஹாரோஹ தஸ்மாஜாக்கிரதஜாக்கிரத்தஹா

என்னும் பிறமன்மனையாளை விரும்புவது பாவமென் றெண்ணாமல் சீதேவியை யிச்சித்தாாவணன் தானிறந்தும் அபகீர்த்திக ளானானல்லவா பாண்டவர்களுடைய பத்தினி துரோபதையையிச்சித்தகீசகன்மடிந்தும் அபகீர்த்திகளானானலலவா பிரகஸ்பதி பகவானுடைய பத்தினி தாரையென்பவள் சந்திரனை யிச்சித்தபோதிலும் குருபத்தினியெனறெண்ணாமல் அனுபவித்த பாவம் அவனைவிட்டு நீங்கவில்லையல்லவா ரிஷிபத்தினியாகிய அகலிகையை இச்சித்த இந்திரன்பட்ட இழிவு இன்னம்அவனைவிட்டு நீங்கவில்லையல்லவா வியாசன்தன்சகோதரர்களாகிய சித்திராங்கத விசித்திரவீரியன் இறந்தபின்பு அவர்ளபா

ரியாளாகிய அம்பிகை அம்பாலிகையென்னும் முண்டச்சிகளைப்புணர்ந்து உற்பத்தியான பாண்டுவம்மிசமெனனும் இழிவு இந்த வியாசனை விட்டு இன்னம் நீங்கவில்லையல்லவா அந்த வியாசன் வம்மிசத்திலுற்பவித்த நீங்களாகையால் பிறர்கூறிய ஸ்திரீகளின் தோஷங்களைச் சேருவதும் கஷ்டப்படாமல் சோம்பேரிப்போல இறந்துண்பதும் உங்கள் சுபாவகுணமே.

எற்பதிகழ்ச்சி யென்றெண்ணு திருப்பதென்ன உங்களுக்குக் கடவுளளித்த அவயவங்களும் புத்தியுக்திகளும் செவ்வையா யிருக்கையில் அவைகளைக்கொண்டு கஷ்டப்பட்டு சீவனஞ்செய்யாமல் மானத்தைவிட்டிருப்பது மதியீனமல்லவோ உங்களைப்போ லிராகின்ற பஞ்சகவுடாள் பஞ்சதிராவிடாள் கஷ்டப்பட்டு கல்வியைக்கற்று மேன்மையான உத்தியோகஞ் செய்யவில்லையா நீங்கள் பிச்சையெடுப்பதே பெருமையென்று எந்நேரமும் விஸ்வப்ரம்ம வம்மிசததாரோடே வம்புசெய்து வழக்காடுவது இழிவல்லவோ இபபேர்ப்பட்ட ஜகமெடுப்பதைவிட இறப்பது நலமல்லவோ.

(ருஉ) ப கு-நான்கு வர்ணாச்சிரமத்தாருக்கும் குருபீடமா யிருந்து தர்மார்த்தகாமிய மோக்ஷமடையும்படி உபதேசஞ்செய்கிற சற்குருவென்றெண்ணாமல் பக்தி விசுவாசமில்லாமல் எங்களை இகழ்வதுஉங்கள புத்தியீனமல்லவோ.

மா-ஆ-ஓ-பஞ்சாங்கம் குண்டையனே நீங்கள் குருபீடமாயிருந்து நான்கு வர்ணாச்சிரமத்தாருக்கும் இகபரசாதக மடையும்படி உபதேசஞ் செய்கிறீர்களல்லவா அந்த குருவினுடையசெய்கை நான்குவிதமாகையால் அந்த நான்குவிதத்தில் ஒருவிதமாவது உங்களிடத்திலில்லை அஃதெப்படியெனில் முதலாவது மீனைபபோலவும் 2-வது, ஆமையைப்போலவும் 3-வது, பறவையைபபோலவும், 4-வது, குளவியைப்போலவுந்தானே ஆனால் இவைகளுக் கேதுகையாகிய விப்பிராளான் குருக்களுடைய செய்கையும் 4-விதமுண்டு முதலாவது வித்துவான்களைப்போலவும், 2-வது, வேசிகளைப்போலவும், 3- வது, வியாபாரிகளைப்போலவும் 4-வது, ஈசாக்களைப் போலவுந்தானே அஃதெப்படியெனில் முதலாவதுவித்துவான்களோ தங்களுக்குப்பணங்கொ

டுக்கிறவர்களைத் தேவனென்றும் ராஜனென்றும் பாடிப்புகழ்ந்துகொண்டாடுவீர்கள் பணங் கொடாதவர்களையோ நாயென்றும் பேயென்றும் லோபியென்றும் மிகவும் நிஷ்டூரமாகப்பாடி இகழுவார்கள் அதுபோலவே உங்கள் குருக்கள்மார் செய்கிறார்களல்லவோ ௩-வது வியாபாரிகள் நாலுகாசு லாபம்வருகிற சரக்காயிருந்தால் காதவழி நடந்துபோய் வாங்கிவருவார்கள் அப்படியே உங்கள் குருக்கள்மாருஞ் செய்கிறார்களல்லவோ ௪ வது. ராஜாக்களைக்காண விரும்புகின்றவர்கள் காணிக்கைவைத்துக் காணவேண்டுமாம் ஆகையால் இச்செய்கையுடைய குருக்கள்மாரைக்குறித்து வேமனர்சொன்ன தெலுங்குசுலோகம்.

தன்னு நாமெனருகுண்டு தானேஉண்டிகருண்டு
பால்மாறிஇருகுடு பணசகொடுகு
காசுவீசமுகொறகு கைகட்டுகுனேதுபோருநம்பு
விஸ்வதாபிராமா விநரவேமா.

இதன் கருத்தாவது தன்னையும் தன்னையுண்டாக்கின கடவுளையும் அறியாத குருக்கள் மற்றொருவனுக்கு குருவாயிருந்து அவனையுண்டாக்கினகர்த்தனை அவனுக்கு எப்படி காண்பிக்கக்கூடும் ஆகையால் இவர்கள் பணிச்சவனுடைய மகளைப்போல் இந்தவிப்பிராளகாசுக்கு குருவேஷம்போட்டுக்கொண்டு பர்வதத்தைக் கட்டிக்கொள்ளத்திரிகிறார்களென்று இவர்சொல்லுகிறார் ஏனென்றால் சன்மார்க்கமில்லாத துன்மார்க்காளான குருக்கள் ராஜாக்களுக்கும் பிரதிஷ்டை காணிபூமிகொடுக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறார்கள் கள்ளருக்குதீட்சை கொடுக்கிறபொழுதே புலை கொலை களவுகள் காமஞ்செய்யவேண்டாமென்று போதியாமல் நீங்கள்களவுசெய்யுமிடங்களில் உயர்ந்தவஸ்துக்களகப்பட்டால் நமக்கு கொண்டுவந்துகொடுங்களென்றும் அப்படிக்கொடாவிட்டால் உங்களுக்கு களவுசித்திக்காதென்றும் போதித்து, தீட்சையைக்கொடுத்தனுப்புகிறீர்கள் அவாளுக்கு துர்க்குணமற்று நற்குணம்வரும்படி நீங்கள்போதிப்பதில்லை அவாள்கொலைசெய்து கொள்ளையடிப்பதில் உயர்ந்தவஸ்துகளகப்பட்டால் கொண்டுவந்துகொடுக்கிறார்கள் அதைமிகவுஞ் சந்தோஷமாய் வாங்கிக்கொள்ளுகிறீர்கள் வேசிகளுக்கு தீட்சைகொடுத்தால் இதுவரையில் நீங்கள்செய்த பாவந் தீரவேண்டுமென்றும் இனியாவது ஒருவனை வஞ்சித்து

மோசஞ்செய்யாமல் இல்வாழ்க்கையி லொருவனை அடுத்திருக்க வொ ண்ணும் போதிக்காமல அவர்கள் விபசாரத்தால் சம்பாதித்த பொருளை பலவித மோசடியால் சூதுடிசெய்து அபகரித்துக் கொள்வதுமன்றி ல் உங்களிஷ்டப்படி அவள நடக்கும்படி செய்துகொள்கிறீர்கள்

ஒருவனுக்கு நீங்கள் உபதேசஞ்செய்தால் அஷ்டாக்ஷரம்பஞ்சா க்ஷரம் சடாக்ஷரம் அநுஷ்டானம் மூலமந்திரம் அசனமந்திரம் திக்கு மந்திரம் பிரவணம் முதலானவைகளில எதையாகிலும் ஒன்றை மணி யடிக்கிற சத்தத்திலே கேட்டுங் கேளாமலும் அவன்காதிலே குசுகுசு வென்று சொல்லிவிட்டு இந்த உபதேசங்களை வெளியிட்டால் சிரசு வெடிக்குமென்று பயமுறுத்திக் காணிக்கைகளைக் கிரகித்துக் கொள் வதுமன்றியில ஒருவன் மனைவி உபதேசம்பெற்றுக்கொள்ள வந்தால் அவளை நயங்கள வைவசப்படுத்திக்கொளவதும ஒருவன் என குருக்க ளே இனைத்துபபோனீரென்று கேட்டால் ஞானசீஷன் சாகவுமில்லை அநுஷ்டைடபடிககு கருமஞ்செய்வாருமிலலை யென்றுசொல்வது உ ங்கள் துர்க்குணம் ஒருவிதமலல பலவிதமாகையால் அது என்னால் சொலலி முடியாது.

(௫௩) ப கு இராசராஜாக்கள் முதலானவாளுங் காணிக்கை கப் பங்கட்டி எங்கள்பாதத்தில் தீர்க்கதெண்டஞ் செய்கிறார்கள் உங்கள் பாதததில ஒருவருஞ் செய்யவிலலையல்லவா,

மா-ஆ-மாதாசில்பி பிதாசாஸ்திரம் அரூபம் ரூபமான சம்பயா த் பிண்டோத்பவஞ் சைவதயாபுத்ரி விதங்கர்மாதா,

என்கிற சுலோகப்படி தேவாலயம் பிரம்மாலயங்களில் சிருஷ்டி த்துவைததிருக்கும் விக்கிரகங்களுக்கு சிற்பி தாயென்றும பிதா சாஸ் திரமென்றும சிலபநூல்முறையிட எங்களால் சிருஷ்டிக்கப்பட்ட வி க்கிரகங்களை திரிகாலமும நீங்கள பூசித்து வணங்கிவருவது எங்களை வணங்கினதல்லவா இது உமக்குத் தெரியாதகாரணமென்ன.

(௫௪) ப கு-எங்கள்வீட்டில் யாவருஞ் சாப்பிடுகிறார்கள் உங்கள் வீட்டில் ஒருவருஞ் சாப்பிடுகிறதில்லை.

மா-ஆ-ஓ பஞ்சாங்கக்குண்டையனே வியாசன் முதலான விப்பி ராளாகிய நீங்கள் பஞ்சமசாதியாகையால் பூர்வத்தில் யாவரும் உங்க

ளவீட்டில் பெரியோரிருப்பதைக்கண்டு வேதவிசாரணையில்லாத துரா தனத்தினாயடுத்து அவர்களைப் பலவிதமான சூதடியினாலே மோசடிசெய்து உங்கள்வசப்படுத்தி நீங்கள் மேலான சாதியென்று எந்திர தந்திர மந்திர ஜாலவித்தையினால் யாவரும் பிரமிக்கும்படி பிர்மரிஷிகளென்று பகல்வேஷம்போட்டுக்கொண்டுவந்து அங்காலத்திலிருந்தார் அவிவேகதுரைத்தனத்தாருக்கும் விஸ்வப்ரம்ம வம்மிசத்தாருக்கும் அஷ்டகர்மங்களினால் மித்திரபேதஞ்செய்து அரசனைச சார்ந்தவரெல்லாம் வலங்கையென்றும் கம்மாளரை இடங்கையென்றும் ஒருவரிடத்தில் ஒருவர் சாப்பிடககூடாதென்றும் தங்கள் வீட்டில்மாத்திரம் சகலருஞ் சாபபிடலாமென்று ஏற்பாடுசெய்தீர்கள் அககாலத்தில்உங்களை இன்னதென்றறியாத சிலர் சாப்பிட்டபோதிலும உங்கள் வம்மிச பரம்பரையறிந்த ராஜபுத்திரா பொந்திலியர் லாலாக்கள் குஜிலாததார் மிராட்டியர் கன்னடியர் வீரசைவாள ஜைனவேலாளர் பட்நூறகாரர் சாத்தாணியர் வள்ளுவர் துலுக்கர் மலுக்கர் முதலானவாள் உங்கள வீட்டில் இன்னமுஞ் சாப்பிடுகிற வழக்க மில்லையல்லவா ஆனால் இக் காலத்தில உங்களை யறியாதவாள் சிலர் சாப்பிடுகிறார்கள் பஞ்சதிராவிடாள் உங்கள் வீட்டில் சாப்பிடாததற்குக் காரணமென்ன நீங்கள் விப்பிரரென்கிற காரணமேயல்லாமல வேறொன்றல்லவே சிலசாதிகள் உங்களுடைய துர்பபோதனைகளுக் ககப்பட்டு சாப்பிட்டபோதிலும் நீங்கள் பிரம்மகுலமென்றுசொலவது உண்மைபபட மாட்டாது அப்படி நீங்கள்பிரம்மகுலமானால் பஞ்ச கிர்த்தியத்தில் ஏதாவது ஒரு கிர்த்தியமாவது நீங்கள் செய்யவேண்டுமே ஒன்றுந தெரியாமல் சோகிசங்கமரைப்போலே யாசகஞ்செய்கிறகிராமபாச்சகாளாகிய உங்களை பிர்ம்மவம்மிசமென்று யார்தான்சொல்லுவார்களல்லவா,

(௫௩) ப - கு - நீங்கள்செய்யும் பஞசகிர்த்தியத்தால் உலகசம்ரக்ஷணையாகுமென்று வெகுபூஜிதமாய் சொல்லுகிறீர்கள் உங்களைப்போல சகலமான சாதிகளும் செய்யவில்லையா அவாளேஉலகாக்ஷணை யாகவில்லையா,

மா - ஆ - ஆதியிலே விஸ்வப்ரம்மவம்மிசத்தாரை அடுத்து வேதாகமபுராணங்களைகற்ற, வியாசன்முதலான வம்மிசத்தாரைப்போல குருத்துரோகிகள் ஒருவருமில்லை மற்றசாதிகளெல்லாம் உங்களைப்

போஜனஞ்செய்யாமல் எங்களையடுத்து பஞ்சகிர்த்தியமுங்கற்று க்கொண்டு விசுவாசமாய்நடக்கிறார்கள் தாங்களும ஜீவனஞ்செய்துக கொண்டு உங்களுக்கும்பிச்சைபோடுகிறார்கள் அல்லது ஒருவேளை அவர்களும் உங்களைப்போல் குருவிசுவாசமில்லாமற்போனால் அவர்களையும குருத்துரோகியென்றே சொல்லப்படும்,

(௫௧) ப-கு-ஓ-மார்க்கசகாய ஆசாரி நீங்கள்மதுமாமிசபட்சணை செய்கிறீர்கள் உங்களைவிஸ்வப்பிரம்மவம்சமென்று சொல்லலாமா.

மா-ஆ-ஓய் பஞ்சாங்கநகுண்டையனே நீங்கள்செசமெலகிழங்குமுதலியவைகளால் சிரார்த்தஞ்செய்தால் ஒருமாதம்வரையில் பிதுர்க்கள் திருப்தியடைகிறார்களென்றும மச்சமாமிசத்தார்செய்தால இரண்டுமாதம் வரையிலும் மான்மாமிசத்தார்செய்தால் மூன்றுமாதம வரையிலும் செம்மறியாட்டுமாமிசத்தாற்செய்தால் நான்குமாதம்வரையிலும் பக்ஷிகளின்மாமிசத்தாற்செய்தால்ஐந்துமாதம்வரையிலும வெள்ளாட்டின்மாமிசத்தாற்செய்தால ஆறுமாதம்வரையிலும்புள்ளிமான மாமிசத்தாறசெய்தால ஏழுமாதம்வரையிலும் கருமான் மாமிசத்தாற செய்தாலெட்டாமாதமவரையிலும கொழுத்தமுள்ளம்பன்றிமாமிசத்தாற்செய்தால் ஒன்பதுமாதமவரையிலும்காட்டெருமைக்கெடாமாமிசத்தாறசெய்தால் பத்துமாதம்வரையிலும் முயல் ஆமை மாமிசத்தாற்செய்தால பதினொருமாதம்வரையிலும் பசுவின்பால்தயிர்நெய்களாற்செய்தால் ஒருவருடமவரையிலும் கிழவெள்ளாட்டுக்கிடாவின் மாமிசத்தாறசெய்தாற பனிரண்டு வருடம்வரையிலும் முள்ளுள்ளவாளைமீன் கட்கமிருகம சிவந்தஆடு இவைகளின்மாமிசத்தாற்செய்தால அளவற்ற நாள்வரையிலும்பிதுர்க்கள்திர்ப்தி அடைகிறார்களென்றுமநுஸ்மிருதியிற் சொல்லியிருக்கின்றபடி நீங்கள்செய்யவில்லையா.

(௫௨) ப-கு-யாகாதிகிரந்தியங்கள்செய்துமதுமாமிசபட்சணை செய்தால தோஷமில்லையென்று எங்கள்வியாசபகவான் சொல்லியிருக்கிறார்நீங்கள சிருஷ்டித்த விக்கிரகங்களுக்கு நாங்கள் மூர்த்திகரத்தைகொடுக்கிறோமஅதனாலயாவரும இகபரமடைகிறார்கள்.

சுலோகம்,

தெயவதீனம்செகத்சர்வம மந்திராதீனம்துதைவதா
தன்மந்திரம்பிராம்மணாதீனம் பிராம்மணோமமதேவதா.

னஞ்ஞுரு சுலோகப்படி தெய்வத்தின்வசமாயிருப்பது உலகம் அந்தத்தெய்வுமந்திரத்தின் வசபட்டது அம்மந்திரம பிராம்மணருக்கு ஐக்கியமாயிருப்பது அந்தப்பிராம்மணன் உலகத்தாருக்கெல்லாம் தெய்வமென்று யாவரும் வணங்குகிறார்கள்.

மா-ஆ. நீங்கள் உலகத்தாருக்கும் தெய்வமா யிருந்தால் உங்கள் மந்திரபலத்தால் இந்தவிக்கிரகங்களை நீங்களே சிருஷ்டிக்கக் கூடாதா அல்லது நாங்கள் சிருஷ்டித்த விக்கிரகங்களை நீங்கள்பேசவும் சிரிக்கவும் நடக்கவும் செய்யக்கூடாதா அலலது நீங்களாவது யாகஞ்செய்யாமல் ஜீவனஞ்செய்யக்கூடாதா,

(௫௮) ப-கு, நம்முடையவியாசபகவான் விதித்திருக்கின்ற விதிப்படி யாககிர்த்தியங்களை நடப்பிப்பவர்களே பிரம்மவம்மிசமென்று சொல்லப்படும்.

மா-ஆ. ஓய் பஞ்சாயகங்குண்டையனே யெல்லாவுயிரையுந் தன்னுயிர்போலநினைப்பவர் ஜீவகாருண்யமுடையவாளேயல்லாமல் பசுவைக்கொண்டுவந்து கைகால்முதலானகொம்பையுங்கட்டி யாகஞ்செய்கிறோமென்று யாகக்குழியிலே தள்ளி யெரிகரும்பு முதலான்தால் பிராணவதைசெய்து அந்தமாமிசத்தை மண்ணும் மயிரும் தோலும் நரம்பும் யெலும்புமாய் அசுசியாயிராநின்ற மாமிசத்தை சோமபாணத்துடன்பொசிப்பது தேவர்களுக்குப்பிரீதியென்று நீங்கள்செய்வது உயிர்வேதனையல்லவோ நாளை நரகவேதனைக்காளாவதில்லையோ நீங்கள்தானா சீவகாருண்யமுடையவாள்,

(௫௯) ப-கு, தேவர்களுக்குப் பிரீதியாகையால் யெந்தயாகமுஞ் செய்யலாம்,

மா-ஆ. ஓய் பஞ்சாங்கங்குண்டையனே நீங்கள பௌண்டரீயகமென்று ஒருபர்ணசாலையமைத்து அந்த பர்ணசாலையின்மீது வாலிபமான ஓர்கைம்பெண்ணையும் ஓர்வாலிபனையும் வஸ்திரபூஷண வலங்கிர்தமாகசசெய்து இருவரையும் அந்தப்பாணியின்மீது புணாசசெய்து

அந்தப்பாணியின்கீழ் விப்பிரளாகிய நீங்கள் ஏககூட்டமாய்க் கூடிக்கொண்டு வேதகோஷ்டத்துடன் இந்தயாகத்தை நிறைவேற்றும்போது பாணியின்மீது புணர்ச்சிசெய்கிற கைம்பெண்ணுக்கும் பாவியனுக்கும் சுக்கிலசுரோணிதம் வெளிப்பட்டு அந்த ஓமஅக்கினியில் விழுந்தால் தேவர்கள்முதலான யாவர்களுக்கும் இகபரசாதனமுண்டென்று நீங்கள்செய்கிற அக்கிரமங்கள் ஒருவிதமல்ல பலவிதமாகையால் அந்தயாகங்களையெல்லாம் என்னாற்சொல்லிமுடியாது.

(கூ௰) ப-கு, நாங்கள்செய்கிற யாகம் தேவர்களுக்குப் பிரீதியாகையால் எங்களைத்தான் பிரம்மவம்மிசமென்பார்கள் உங்களையொருவருஞ்சொல்லார்கள்.

மா-ஆ, ஓய்-பஞ்சாங்கக்குண்டையனே நீ பிரம்மவம்மிசமானால் நீ உற்பவித்தபோது உனக்கும் உன்தாய்க்கும் சம்பந்தப்பட்டிருந்த உந்திக்கொடியைக்கண்டிக்க உன்கையில் ஆயுதத்தோடேபிறந்து உந்திக்கொடியைக் கண்டித்தாயோ அல்லது உன்தாய்ப் பல்லாற்கடித்தாளோ எங்களாயுதமல்லவோ அந்த உந்திக்கொடியைக்கண்டித்தது அன்றியில் கர்ப்பாதானம் பும்ஸவனம் சீமந்தம் ஜாதகர்மம் நாமகரணம் அன்னப்பிராஸனம் சௌளம் உபநயனம் ஸ்ராமயம் ஆக்நேயம் வைச்சுவதேவப் பிராஜாபத்யம் கோதானம் ஸநாதகம் விவாஹயபைத்ருமேதகம் என்னுஞ் சோடசகர்மங்களால் உங்களை யிருபிறப்பாளென்று சொல்லாமல் பரிசுத்தமாகச்செய்து பாலியதிசை வந்தபோது ஒருகன்னியை கலியாணஞ்செய்ய எங்கள்முத்திரையாகிய மாங்கில்யத்தை அந்தகன்னியின்கழுத்தில் கட்டினபின்பு அந்தக் கன்னியின் கரத்தை நீபாரியாளென்று பற்றும்படி பாத்தியமுண்டாச்சுது எங்களுடையகுருமுத்திரையான மாங்கில்யம் அந்தக்கன்னியின்கழுத்தில் நீகட்டுவதற்குமுன் அம்மான்பெண் அல்லது அந்தப்பெண்ணானாலும் அந்தக்கன்னியின்கரத்தைப்பற்ற உங்களுக்குப் பாத்தியமில்லையல்லவா ஒருவேளை துன்மார்க்கமாய் அவள்கரத்தைப் பாத்தியமென்றுபத்தினால் உங்கள்கரத்தை மநுநீதிப்பிரகாரம் மணிக்கட்டுவரையிற் கண்டிக்கஎங்களுடைய ஆயுதமிருக்குதென்றல்லவோ நீங்களுருசியிருக்கிறீர்கள் உங்கள்மரணகாலத்திலும் நாய்-நரி-கழுகு-செந்நாய்-காகம் முதலான

தும்பிடுங்கித் தின்னவொட்டாமல் உங்களைப்புதைக்க எங்களாயுதமாகிய மண்வெட்டியல்லவோ நீங்கள் உயிருடனிருக்கும்போதும் இறக்கும்போதும் உங்களைக்காப்பாற்றுவது நாங்களசெய்யும் பஞ்சகிர்த்தியமென்றெண்ணாமல் எங்களையிகழுவது ஞாயமா உங்களுடைய வம்மிசத்தில் எங்களையிகழாதவாள் அனந்தங் கல்விமான்கள் மேலான உத்தியோகத்தில் சவுக்கியமடையவில்லையா இதுஉமக்குத்தெரியாதா நீஇட்டுவந்த பஞ்சாயத்தாரோ உமக்கும் உம்மைசசார்ந்தவாளுக்கு நல்ல தீர்ப்புசொல்லுவார்கள்.

## இரண்டாவது.

### பஞ்சாயத்தார் தீர்ப்பு.

பஞ்சாயத்தாரில் விஸ்வநாதசாஸ்திரியார் நாகோஜிராவ் சண்முகபண்டிதர் சுப்பராயமுதலியார் வெங்கடராமநாயுடுகாரு முதலானவாளும் பஞ்சாங்கங்குண்டையனைநோக்கி நாங்கள் சொல்வதை கிஞ்சித்துங் கியாபகமாய்க்கேளும் முதலாவது,

விராட் விஸ்வப்பிரம்மா பஞ்சகிர்த்தியங்களையும் செய்வதற்குப் பஞ்சகர்த்தாக்களையும் பஞ்சசத்திகளையும் வேதாகமங்கள் அனுஷ்டிக்கும்படி கூறுகின்றன அந்தவேதாகமங்கள் சரியாபாதம் கிரியாபாதம் யோகபாதம் ஞானபாதம் என நான்குபாதங்களையுடையனவாயிருக்கும் இந்தநான்குபாதங்களிலவிதிநெறிவழுவாமல்அனுஷ்டிப்பவர்கள் இகபரமடைவார்களென்று கூறப்பட்டிருக்கின்றது அப்படிக்கிருக்க உலகாயிதமதஸ்தர் இம்மையிற்சுகமேசுவர்க்கமென்றும் துக்கமேநரகமென்றும் சரீரமழிந்தபின்மோக்ஷநரகமில்லையென்றுங்கூறுவார்கள்.

பௌத்தமதஸ்தர் பஞ்சபூதத்தினாலாகிய சரீரத்தில் புத்திதத்துவமேயுள்ளதென்றும் புத்திதத்துவமுதலிய எல்லாப்பொருள்களும் க்ஷணத்திலழியுமென்றும ஆத்துமாவும் ஈஸ்வரனு மில்லையென்றுஞ் சொல்லுவார்கள்.

## மூன்றுவது,

### ௩௩. பண்டிதர் சோமசுந்தரப்பிள்ளை சம்பாஷணை.

பண்டிதர் சோமசுந்தரப்பிள்ளை அச்சபையில் இராநின்ற நான்கு வர்ணுச்சிரமத்தாரையும் நோக்கி இந்தப் பஞ்சாங்கங் குண்டையன் தன்குற்றத்தை யோசிக்காமற் பிறரை தூஷிப்பதனுற் பயனடைய மாட்டான் அஃதாவது.

வேமனசதகம்.

தல்லியூர்வசிலஞ்ச தனயாலுமாதிக
தானுபிராஹமுடனந்தகுணஜக்தி
சக்தியசிஷ்டிமொடலந்ததசுமாதியருநசா
விஸ்வதாபிராமா வினசவேமா.

என்று இவாளைப்பலரும் பலஇழிவாய் தூஷிததிருப்பதை இந்தபஞ்சாங்கங் குண்டையன் முதலானவாளுக்கு மகாசாஸ்திரிகளாகியபஞ்சாயத்தார் விஸ்வப்பிரம்மவம்மிசத்தாருக்கு வேதவிதியுண்டென்று தீர்ப்புக்கொடுத்திருக்க அந்தத்தீர்ப்பை இந்தப்பஞ்சாங்கங்குண்டையன் யோசிக்காமற்பாமரளைப்போலே வெகுலேசாய்க் கம்மாளரை பார்ப்பாராகபஞ்சாயந்தார் தீர்ப்புகொடுத்தார்களென்று முறையிடுகிறுனல்லவா அந்தகம்மாளரைப் பார்ப்பாரென்பதற்கு இருபிறப்பாளரல்ல கம்மாளரென்றுல் விஸ்வப்பிரம்மவம்மிசமென்று வேதாகமங்கள் முறையிடுகின்றது அப்படியிருக்க இவனெப்படி அவாளுக்கு வேதவிதியில்லையென்று சொலலுகிறுன் இதுன்றியில்இந்தக்குண்டையன் முதலான விப்பிராளிடத்தில் இந்த இராமாஞ்சுலுநாயுடுகாரும் சாம்பசிவபிள்ளையும் இன்னுஞ்சிலரும் வேதம்வாசிக்கவேண்டுமென்று பத்துவருடத்துக்குமுன் கேட்டபோது இந்தக்குண்டையன்முதலானவிப்பிரான் சதுர்முகப்பிரம்மாவின் முகத்தில் பிராமணர்

களுக்கு புயத்தில் க்ஷத்திரியர்களும் தொடையில் வைசியர்களும் பாதத்தில் சூத்திரர்களும் பிறந்தார்களாகையால் சூத்திரன் வேதம்வாசிப்பதைக்கேட்டால் ரௌரவாதிநரகத்துக் காளாவானென்றும் அல்லது ஒருவனிடத்தில் வேதாகமங்களை வாசித்தால் போதிக்கப்பட்டவனும் வாசிக்கப்பட்டவனும் வம்மிசமற்று நரகத்துக்காளாவனென்றும் வியாசபகவான்கட்டளையென்ற சொன்னதற்கு அவாள்நாங்கள்வேதம் வாசிக்கவெண்டுமென்று தெரியாமறகேட்டதற்கு பிராயச்சித்தமுண்டோவென்றார்கள் அதற்கு இந்தப்பஞ்சாங்கமுடையன முதலானவிப்பிராள் பஞ்சகவ்யத்தால் பிராயசித்தஞ் செய்யவேண்டுமென்று தீர்ப்புக்கொடுத்தார்கள்.

(௫௪) அந்ததீர்ப்பைப்பெற்றுக்கொண்டு விஸ்வப்பிரம்மவம்மிசத்தாரிடத்தில் இவாள் நாங்கள்வேதம்வாசிக்கவேண்டுமென்பதற்கு அவாள் அண்டபுவனசராசரங்களையெல்லாம் விராட்டுவிஸ்வப்பிரம்மத்தால் சிருஷ்டித்ததேயில்லாமல் வேறல்ல ஆனால் விப்பிராளெய வியாசன் கலியுகம்பிறந்த வெகுகாலத்திற்குப்பின்பு உற்பவித்தவன்ஜாதிபேதங்களை யேற்படுத்தி சூத்திரன்வேதம் வாசிக்கக்கூடாதென்று சிலதப்புசுலோகங்கள் சொல்லியிருக்கிறான் அந்தசுலோகத்தைஇந்த விப்பிராள்சொல்லுவார்கள் ஆனால் ஒருவன் வேதம்வாசிக்கவேண்டுமென்று கேட்டால் அவனுக்குப் போதிக்காதவன் நரகமடைவானென்று தங்களை வந்தடுத்தவாளுக்கு வேதாத்தியானஞ்செய்து வைத்தார்கள் அந்தவேதத்துக் குடையவாள் விஸ்வப்பிரம்ம வம்மிசத்தாரென்று முறையிடுவதால் அவாள் வேத விதிப்படி விவாகஞ்செய்வதெனறு பஞ்சகவுடாள் பஞ்சதிராவிடாள் முதலானவாளும் விஸ்வப்பிரம்மவம்மிசத்தார் செய்யும் பஞ்சகிருத்தியத்தால் உலகம்பாக்ஷனையாகி சகலஉயிரும் சவுக்கியத்தை அநுபவிக்கிறார்களென்றும் அவர்களில்லாவிட்டால உலகமில்லையென்றும வேதாகமங்கள் முறையிடுகின்றதென்றும் அவாள் வேதவிதிப்படி செய்வதேநன்று பஞ்சாயத்தீர்ப்புக்கொடுத்தார்கள் அந்ததீர்ப்பைசாத்துசெய்ய ஆசிரமேமுடியும்படணியில நின்ற ஜனியைப்புரிக்கப்படுமோமெய்க்குமுன்பெயர்பெறகுமா வியாசன் முதலானவர்கள்செய்த பதினெண்புராண முதலான

நூல்களிலடங்கியகட்டுகளைநகளெல்லாம்பண்டிதர் மார்க்கசஹாய ஆசிரியர்ரால் யாவருக்கும் நன்மைதெரிந்தபடியால் இனியவாள் வேதவிதிப்படிசெய்வதை யொருவரும் ஆட்சேபணைசெய்யக்கூடாது ஆனால் இச்சபையிலிராநின்ற நான்குவர்ணாச்சிரமத்தாரும் கர்ம்மமாகிறவிளைகளை நுழையவொட்டாமல் தர்ம்மமாகிரவேலிகட்டி இந்தப்பஞ்சாங்கங்குண்டையன் முதலான துர்மார்க்காளெல்கிற களைகளை வேரோடேகளைந்து பஞ்சகவுடாள் வேதவிதியாகிறபயிரை விளையச்செய்தால் லோகத்திற்கே யாவரும் இகபரமடையலாம் ஆகையால் இனி நான்குவர்ணாச்சிரமத்தாரும் வேதாத்தியாயனம் சிறுவர் முதலானவாளுக்கும் போதிக்கும்படிகோருகின்றேன்.

(௬௫) ப-௯, கம்மாளர் பார்ப்பாரானபடியால் இனி சூத்திராள் கூட பார்ப்பாராவதற்கு வேதாத்தியாயனஞ் செய்யவேண்டியது தானேயென்று விஸ்வப்பிரம்ம வம்மிசத்தாருடன் அடி தடி சண்டை செய்தார்கள்,

## நான்காவது.

கனம்பொருந்திய மேற்படிஜில்லா போலீசுதுரையவர்கள்

விஸ்வப்பிரம்மவம்மிசத்தார்

மேஜஸ்திரேட்டில் பிரியாது செய்தார்கள்,

(௬௬) மேஜஸ்திரேட்டுதுரைகள் வாதி மார்க்கசகாயஆசாரி முதலானவாள் தங்கள்வீட்டில்செய்யும் விவாகத்தைக்குறித்து ஸ்தம்பப்பிரதிஷ்டைசெய்யும்போது பிரதிவாதி பஞ்சாங்கங்குண்டையன் முதலானவாள்வந்து ஆட்சேபித்து அடி தடி சண்டைசெய்து (௧௫) சாட்சிகளால் ருசுவானதின்பேரில் பஞ்சாங்கங்குண்டையன் முதலானவாளுக்கு அபராதம்போட்டு விவாக நஷ்டத்தைக்குறித்து சிவில் கோர்ட்டில் பிராதுசெய்யும்படி மார்க்கசகாய ஆசாரிக்கு மேஜஸ்திரேட்டுதுரைகள் டையிரிகொடுத்தார்கள்,

# ஐந்தாவது

(௬௭) சென்னப்பட்டணத்தைச்சார்ந்த சித்தூர்ஜில்லா அதாலத்துகோர்ட்டு மஹாகனம்பொருந்திய கவர்ன்மெண்ட்டு ஜட்ஜீ டேகர் துரையவர்கள் சமுகத்துக்கு

மேற்படி ஜில்லாவைச்சார்ந்த சதுர்ப்பேரியிலிருக்கும் விஸ்வப்பிரம்மவம்மிசத்தாரில் மார்க்கசகாயஆசாரிமுதலான வாதிகள் (௧௧) பேர் எழுதிக்கொண்ட விண்ணப்பமாவதென்னவெனில்,

மேற்படி சதுர்ப்பேரியிலிருக்கும் பஞ்சாங்கங்குண்டையன்முதலான பிரதிவாதிகள் (௰) பேர் ஏகமாய்க்கும்பல் கூட்டிக்கொண்டுவந்து நாங்கள் விவாகஸ்தம்பப் பிரதிஷ்டாபனஞ் செய்வதை ஆக்ஷேபனைசெய்தார்கள்,

மேற்சொல்லிய பிரதிவாதிகளழைத்துவந்த பஞ்சாயத்தார் இந்தப்பஞ்சாங்கங்குண்டையனை நீக்கி உங்கள்வம்மிசத்தில் வாத்தியாரை வைத்து விவாகஞ்செய்ய எத்தனித்தபடியால் எங்களை பஞ்சாயத்தாராக்க கோரிக்கொண்ட இந்தப்பஞ்சாங்கங்குண்டையன் கேட்டகேள்விகளுக்கெல்லாம் நீங்கள் வேதச்சுருதிப்பிரமாணமாய் உத்திரவுகொடுத்தால் உங்கள் விஸ்வப்பிரம்ம வம்மிசத்தில் வாத்தியாரை வைத்து வேதவிதிப்படி விவாகஞ்செய்துக்கொள்ளலாமென்றார்கள்.

(௬௮) மேற்சொல்லியபஞ்சாயத்தார் முன்னிலையில் பஞ்சாங்கங்குண்டையன் கேட்டகேள்விகளுக்கெல்லாம் வேதச்சுருதிபிரமாணமாய் உத்திரவுகொடுத்தோம்,

பஞ்சாயத்தார்முதலானவாளும் விஸ்வப்பிரம்மவம்மிசத்தார்வேதவிதிப்படி விவாகஞ்செய்வதற்கு பஞ்சாங்கங்குண்டையன்முதலான விப்பிராள் தடங்கல்செய்யக்கூடாதென்று தீர்ப்புக்கொடுத்தார்கள்,

அந்தத்தீர்ப்புப்பிரகாரம் இந்தப்பஞ்சாங்கங்குண்டையன் முதலானவாள் ஒத்துக்கொள்ளாமல் கம்மாளஜாதிதவிர மற்றஜாதிகளை

# அதாலத்துகோர்ட்டுதீர்ப்பு.

குழந்தைஆசாரியார். | எக்கியதீக்ஷிதர்
சின்னகண்ணுசாரியார் | வியாசபட்டர்
அருணாசலஆசாரியார் | சூரியநாராயணசாஸ்திரி
மஹாதேவஸ்தபதியார் | ஜோஸிசாஸ்திரி
தக்ஷணாமூர்த்திஸ்தபதியா | வந்தவாசி சிரஸ்தாரையர்
வரதாசாரியார். | ,,

வக்கீல் அப்துல்சாய்பு

வாதிகள் பக்ஷத்தில் தஸ்தாவேசுகளான வேதசாஸ்திரங்கள் விபரம்.

உள்நம்பர். க ல்-எசுர்வேதம்,

,, உ-புருஷசூக்தம்

,, ங-மூலஸ்தம்பம்

,, ச வச்சிரசி

,, ரு-வேமநபத்தியம்

,, சு-கபிலரகவல்

,, எ-ஷெ ஜில்லாமேஜஸ்ட்ரேட்டையரி நக்கல்,

வக்கில் அருணாசலமுதலி

பிரதிவாதிபக்ஷத்தில் தஸ்தாவேசுகளாக தாக்கல் இல்லை,

விசாரணையானசாக்ஷிகள்,

ஆண்டியப்பமுதலி

சங்கரநாராயணசெட்டி

கோபிகுசெட்டி

அப்பாசாமிபிள்ளை

வெங்கிடசுப்பநாய்க்கன்

# வாதிகள்கொடுத்தபிரியாது.

பிராமணோசியமுகமாசீதுபாகூராசென்னியகுற்தாகா:
ஊருததஸியாஎத்வைசியாபப்பியாகுஞ்சூத்திரோ அஜாயதா:

எசுர்வேதவசனப்படிக்கு.

ப்ராசீதிசாம்வசந்தருதூநாம்
அக்நிர்தேவதாப்ரஹ்மக்கிரவிரணம்
த்ரிவ்ருத்ஸ்தோம: சௌபஞ்சதசவற்தநி
ஸ்த்ரீயவிர்வயக்ருதமநாம்
புரோவாதோவரதாசாநகரிஷி

தக்ஷிணதிசாம்க்ரீஷ்மருதூநாம்
இந்திரோதேவதாக்ஷத்ரந்த்ரவிணம்
பஞ்சதசஸ்தோம: ஸௌஸப்த தலவற்தநிர்
த்தித்யவாட்வயதிரோதாயாநாம்
தக்ஷிணத்வாதோவாத : ஸநாதநருஷி :
ப்ரதிசிதிசாம்பவர்ஷருதூநாம்
விச்வேதாதேவதாவிட்த்ரவிணகும்
ஸப்ததசஸ்தோமஸ்ஸஉஏகவிகும்சவர்த்தநி :
த்ரிவத்ஸவயோத்வாபரோயாநாம்
பச்சாத்வாதோவாதோஹபூநரிஷி :
உதீசிதிசாம்சரக்ருதூநாம்
மித்ராவருணௌதேவதாபுஷ்டந்த்ரவிணம்
ஏகவிகும்சஸ்தோமஸ்ஸஉத்ரிணவவ்த்தநி
ஸ்துயர்யவாட்வயஆஸ்கந்தோயாநம்
உத்தராத்வாதோவாத : ப்ரத்நருஷி :
ஊர்த்வாதிசாகும்ஹேமந்தசிசிரந்தூநாம்
ப்ரஹஸ்பதிர்தேவதாவர்ச்சோத்விணம்
த்ரிணவஸ்தோமஸ்ஸஉத்ரயஸ்திரிகும்ஸ
வர்த்தநிபஷ்டவாட்வயோவிபூர்யநாம்
விஷ்வக்காதோவாதஸ்ஸுபர்நஸருஷி :
பிதாபிதாமஹாபரேவபரேதேந்ந
பாந்துதேஜ்ஞவத்வஸமின்பிரம்மந்ஸமின்
க்ஷத்ரோஸ்யாமசிஷீமஸ்யாம்புரோதாயாமசமின்
கர்ம்மந்நஸ்யாம்தேவஹூத்தியாகும்
ஸவாஹாவிஸ்வகிராமணீயிதம்மம்மா.

என்கிறவேதவாக்கியப்பிரகாரம்.

பஞ்சமுகப் பிரம்மாவினுடைய சத்தியோஜாதமுகத்தில் ஸாநக ருஷியும் வாமதேவமுகத்தில் ஸநாதருஷியும் அகோரமுகத்தில் அபுருஷியும் தற்புருஷ முகத்தில் வநஸபிரத்ஸருஷியும் ஈசாந்ய முகத்தில் ஸுபிரஷருஷியும்,

இந்தஐந்துபேரும் பஞ்சமுகத்தில் உற்பவித்த பிரம்மரிஷிகளின் வம்மிசஸ்தர்களாகிய தாங்களே பிராம்மணரென்று பாத்மபஞ்சரு திவாக்கியப்படிக்கும் வழக்கப்படிக்கும் தங்களில் க-உ-ங-வாதிகளு

டையவீட்டில் விவாகமுகூர்த்தங்கள் நடக்கும்பொருட்டாய் தாங்கள் ளைவரும் எத்தனப்பட்டுக்கொண்டிருக்கையில் சங்கர்ஜாதிகளான பிரதிவாதிகள் துராக்கிரதமாய் வீட்டுக்குள்பிரவேசித்துத் தாங்களேவேதோக்தபிரகாரம் நடப்பிவிக்கக்கூடாதென்றும் புராணுக்தமாய்த்தாங்களே நடத்திவைக்கிறதாயுஞ்சொல்லி தாங்கள் கும்பல்கூடி அடித்து விவாகமுகூர்த்தம் நிறைவேறாமல் தடங்கல்செய்து போட்டதாயும் அதுசங்கதிகளைக்குறித்து மேற்படி ஜில்லா மாஜிஸ்ட்ரேட்துரையவர்களிடத்தில் தாங்கள் பிரியாது கொடுத்ததற்கு அவர்களை விசாரணை செய்து பிரதிவாதிகளுக்குத் தகுமானதெண்டனையும் விதித்து நஷ்டத்தைக்குறித்து ஜில்லாவில் பிரியாதுசெய்துகொள்ளும்படியாய் டைரிகல்கொடுத்திருப்பதாகவும் ஆனதால் பிரதிவாதிகளால் கலியாணச்சாமக்கிரயம் ரூபா-ருரு0-ம் வாங்கிக்கொடுக்கும்படியாயும் வாதிகளாகிய தாங்கள் இனிமேல் நடப்பிக்கப்பட்ட சுபாசுபகிரிகைகளில்பிரதிவாதிகளெங்கும் எத்தேசகிராமங்களிலும் பிரதிவாதி வம்மிசத்தாரை பிரவேசிக்காமல் இருக்கும்படியாயும் தீர்மானிக்கவேண்டுமென்று கண்டிருக்கிறார்கள்.

## பிரதிவாதிகள்கொடுத்த ஆன்ஸர்.

பிரியாதில்கண்ட பிரம்மரிஷிகளுக்கும் வாதிகளுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லையென்றும் பிரம்மரிஷி வம்மிசத்தாருடைய வம்மிசம் வாதிகளுடையவம்மிசம் அல்லவென்றும் வாதிகள் பஞ்சமசாதிக்குச் சமமதையானவர்களென்றும் ஆனதால் வாதிகள் பஞ்சாங்கஞ்சொல்லிக்கொண்டு வேதோக்தமாய் உபாத்தியாயஞ்செய்யக்கூடாதென்றும்வாதிகள்செய்கிறதொழில்வெகுநிக்கிருஷ்டமானதென்றும் தாங்கள் சுருதிப்பிராமணமாயும் பிராம்மணு ளென்பதற்குத் திருஷ்டாந்தமாய் உலகத்திலிருக்கும் சமஸ்தவர்ணாசிரமத்தாருக்கும் பதங்களைக்கொண்டே சகலகிரிகைகளையும் நடப்பித்துக்கொண்டு வரப்பட்டவர்கள்தாங்கள் இருக்கையில் வாதிகள் மாமூலுக்கு விரோதமாய்தாங்களேயென்றுகலியாணகாரியங்கள் நடப்பிக்கயத்தனப்பட்டதேயன்றிதங்களால் நஷ்டஞ்சம்பவித்ததில்லையென்று கண்டிருக்கிறார்கள்.

வாதிகள்கொடுத்த ரிப்ளை.

சத்தியோஜாதமுகமாசீது மனுவிஸ்வகர்மண ப்ரம்மாஉற்பவதி
வாமதேவமுகமாசீது மயவிஸ்வகர்மணப்ரம்மாஉற்பவதி
அகோரமுகமாசீது த்வஷ்டவிஸ்வகர்மண ப்ரம்மாஉற்பவதி
தற்புருஷமுகமாசீது சில்பிவிஸ்வகர்மண ப்ரம்மாஉற்பவதி
ஈசான்யமுகமாசீது விஸ்வக்ஞயவிஸ்வகர்மண ப்ரம்மாஉற்பவதி.

என்கிறவேதவாக்கியப் பிரகாரம்.

ஸநாகருஷி மனுப்பிரம்மரூபமும் ஸநாதநஸ்ருஷி மயப்பிரம்ம ரூபமும் அபுவநஸருஷி துவஷ்டப்பிரம்மரூபமும் பிரத்நஸருஷி சில்பிப்பிரம்மரூபமும் சுபர்நஸருஷி விஸ்வைஞய பிரம்மரூபமும்இந்தப் பிரம்மரிஷிகளில் வகுத்துக்கொண்டவர்களின் வம்மிசத்தார்களாகிய தங்களுக்கு வேதோக்தமாய் மேற்கண்டருஷிகளின் கோத்திரசூத்திர சாகைபிறவரைகளும் உண்டாயிருப்பதாகவும்.

மேலும்வேதப்பிரமாணம்சிருஷ்டி,

அயாமனுருக்சாதம் வாமயாதாருயசுர்ஸ்தத்தா
தாம்பிர துவஷ்ட ராசாசாமௌ சிலாசில்பி
அதர்வண: சௌளப்பியஸ்வநார்க்கபிரணவம்
விஸ்வக்ஞயபஞ்சபிர்ம்மவிநியதே,

என்கிற பிரமாணபூர்வீகமாய் மனுப்பிரம்மாவுக்கு இரும்புவேலையும் ருக்வேதபாராயணமும் மயப்பிரம்மாவுக்கு மரவேலையும்யசுர் வேதபாராயணமும துவஷ்டப்பிரம்மாவுக்குதாம்பரவேலையும் சாம வேதபாராயணமும் சில்பிப்பிரம்மாவுக்கு சிலாவேலையும் அதர்வண வேதபாராயணமும் விஸ்வஞ்ஞப் பிரம்மாவுக்கு சுவர்நவேலையும் பிரணவவேதபாராயணமும் ஆகிய இந்தப்பஞ்சவித கன்மங்களை அநுஷ்டித்து விதிப்படி வருகிறதினாலே உலக சமாட்சணையாகி வருகிறதாகவும

ஆறாந்திதிப்பிரமாணம்.

ஸபாசனமஹோராத்திரி மனுலோஹதிமஹோஹதே
ஸவஹாசிதிறஞேவிற்த்ஸிதசியபிதிற்ணேற்பிபூபிற்சா

பலதோதிற்த்வீசுசசுராஹபிமானுஷம்துற்ஷட
க்ஷந்துலஹஸதிராணுதிர்விதவிஸ்வபிராம்மணு.

என்கிற சுலோகப்படி தங்களுடைய அவுபர்சந ஓமகுண்டத்திற்கு தங்கம் வெள்ளி தாம்பிரம் இரும்பு முதலான பஞ்சலோகங்களையும் இரத்திநமுதலான நவமணிகளையும்ஆஹுதிகொடுத்து அதினாலே சிருஷ்டி திதி சம்ஹாரம் துரோபவம் அநுக்கிரக முதலானதற்கும் அஸ்திர ஆயுதம் உண்டாக்கவும் எசன ஆசன அத்தியென அத்தியர்ப்பாதன தானபிரீதிசஷ்டி கர்மமும் சர்வதாபிமானமும் அரசுநிலைஆக்கிஞைச்சாரமும் இஷ்டகாமியார்த்தமும் ஜநநமரணநரகாதியும் ஆதாரமாயிருப்பதுமன்றி சர்வாதாரகடவுளாக்கினைக்கு சமஆதாரமாயிருக்கிறதுமன்றியில்,

மேலும் சில்ப்ரிமூலஸ்தம்ப சுலோகம்.

திதிருபம்மனுபுரோக்தம் வாரச்சம்யசம்பவ
நட்சத்திரம்துவஷ்டரூபஞ்சா சில்பியோகம்தவைசா
விஸ்வஜ்ஞகாணஞ்சய்வா பஞ்சாங்கம்அதிதேவதா

என்கிறசுலோகப்படிக்கு திதி மனுப்பிரம்மா உற்பவம் வாரம்மயப்பிரம்மாஉற்பவம் க்ஷத்திரம் துவஷ்டப்பிரம்மாஉற்பவம் யோகம் சில்பிப்பிரம்மாஉற்பவம் காணம் விஸ்வக்ஞயப்பிரம்மா உற்பவம் ஆகயிருப்பதால் தாங்களே பஞ்சாங்கஞ்சொல்லிக்கொண்டு உபாத்தியாயஞ்செய்யலாமென்றும் மேலும் வேதம்.

விஸ்வப்பிரம்மா மனஸா விஸ்வம்கரோதிததாதிபிராம்மணோசுபர்னசரிஷிஜனுதி பிராம்மணோ கசியபோ பாப்பிரம்ம நவப்பிரம்மணோ மரீசி அத்ரி ஆங்கிரச புலஸ்ய புதஹல் பௌலஸிய கச்யபதட்சக்குருக்ருஹூநவப்பிரம்மணோஹ விஸ்வப்பிரம்மணோ பிராம்மணி,

சில்பசுலோகம்,

விஸ்வப்பிரம்மஹுகுலேசாதாகௌற்பபிராமண நிச்சயம்
சூத்ரத்வம்நாஷிதத்பீசம் பிராதமண்ணோவிஸ்வகற்பண:

# சித்தாந்தபீடிகை.

, என்கிற சுலோகப்படிக்கு விஸ்வகர்மாவில் வம்மிசத்தார்களா கிய தங்களுக்கு கெர்ப்பத்திலிருக்கும்போதே பிராம்மணத்தவம் நிச்சயமாயிருப்பதாகவும்

பிரதிவாதிகள் சுலோகம்,

அந்தியஜாதிதுவசாதபியா யேசயேவேசஹோதாஷ்
ஏகயோனிப்ரசூதத்வாஏகசாகேனசாயதே

, என்கிற சுலோகப்பிரகாரம் பறையன் சக்கிலி முதல தியாரும் பிரதிவாதிகளும் ஒரேயோனியில் ஜன்மித்தகோத்ரமுடை யென்பதற்கு திருஷ்டாந்திரம்.

சுலோகம்.

ரிஷியஸ்ருங்கோம்ருகோஜானகௌசிகோகாதிநந்தனம்
ஜம்புகோஜம்புகோத்பத்திகௌதமோகௌசசம்பவ
வால்மீகோசபசோத்பத்திஅகஸ்தயகும்பசம்பவ
வ்யாசொஜுப்தசம்பூதோவசிட்டார்ஊர்வசிசுத
நாரதோராசகிபுத்ரோகௌண்டிந்யோமுண்டகீசுத
மதங்கஸ்யமதங்கஸ்யாத்மாண்டவ்யோமண்டூகீசுத
சாங்க்யாச்சவபக்சம்பூதோகார்க்கேயோகார்த்தபச்சுத
சுநகிகர்ப்பசம்பூதோசௌநகாதிமஹாமுநி

என்னும் மனுஸ்மிருதிப்படிக்கு கலைக்கோட்டார் மான்வயிற்றிலும் கௌசிகர் காதிமஹாராஜாவுக்கும் ஜம்புகர் நரியின்வயிற்றிலும் கௌதமர் பசுவின்வயிற்றிலும் வால்மீகர் வேடச்சிக்கும் அகஸ்தியர் கும்பத்திலும் வியாசர் செம்படச்சிவயிற்றிலும் வசிஷ்டர் தாசிவயிற்றிலும் நாரதர் வண்ணாத்திவயிற்றிலும் கௌண்டந்யர் முண்டச்சி வயிற்றிலும் மதங்கர் சக்கிலிச்சிவயிற்றிலும் மாண்டவ்யர் தவக்களை வயிற்றிலும் சாங்க்யர் பறச்சிவயிற்றிலும் கார்க்கேயர் கழுதைவயிற்றிலும் சௌநகர் நாயின் வயிற்றிலும் இவ்வித உற்பவமன்றியில் பின்னும்,

வேமநபத்தியம்.

மாலகுலமுநபுட்டி மால்லதூஷிஞ்சி
துவிஜாலகேலயிட்டி தொங்கதனமு
ஆதிபுட்டினதாவு அரசிதாகூடரோய்
விஸ்வநாயிராமா விநரவேமா.

என்கிற வேமநபத்தியபிரகாரம் பறையர்குலத்திற்பிறந்து பறையனை தூஷித்துவருகிறதுமன்றியில் ஆதியிலபிறந்தவனை அறியாரோ இருபிறப்பர் சேத்தினிற்பிறந்த செங்கழுநீர்போல் சூத்திவயிற்றில் பிறந்தார வசிஷ்டர் வசிஷ்டருக்குச் சண்டாளிவயிற்றிற்பிறந்தார்க்ஷத்திரியர் புங்கனூர்புலச்சிவயிற்றில்பிறந்தார் பராசர் பராசர் பராசருக்கு மீலவாணிச்சிவயிற்றிற்பிறந்தார் வேதவியாசரென்றும்.

சுலோகம்,

ஸ்ரேதோமுனிதுவிசோரா சோவைசியசூத்திரோபிடாலக
பசுயிலேசசசண்டாளோ ஜெசவிபாப்ரகித்துதாஹ

என்கிற சுலோகப்படிக்கு நீச்சஜாதிமுதலான சங்கரஜாதியிலுற்பவித்தரிஷிகளின் வம்மிசத்தார்களென்றும் பிரதிவாதிகளுடையகோத்திரமென்றும் பிறவனையென்றுஞ் சொல்லப்பட்ட உற்பவதானத்தையும் கோர்ட்டாரவர்கள் பரிசோதித்தால பிரதிவாதிகள் மேற்கண்ட ரிஷிகளின் வம்மிசத்தாரென்றும் தெரிய திஷ்டாந்தரப்படுமென்றுங் கண்டிருக்கிறார்கள்.

பிரதிவாதிகள் ரிஜாயிண்டரில் மேற்படிரிஷிகளின் உற்பத்தியானது வாதிகளரிப்பிளையில் கண்டபடிக்கியிருந்தபோதைக்கும் பிரம்மரிஷத்தாரென்றும் வாதிகளைக்குறித்து வேதவாக்கியமுண்டாயிருப்பது யதார்த்தமாயிருந்தால் பாரதமுதலான புராணங்களில் விஸ்வப்பிரம்மாவைக்குறித்து மிகவுந் தாழ்மையாகக்கண்டிருக்க இடமிராதென்றும் தாங்கள் சிரேஷ்டாளென்றும் வெகுகாலமாய் ராசாராசாக்களும்

யுக்கொண்டு சர்வமானியங்கள் முதலான்துமிவிட்டு இருப்பதாகவுங்கண்டு இருக்கிறார்கள்,

கோர்ட்டாரவர்கள் தீர்மானம்.

(௧) இந்த நெம்பர்கட்டு முதலான வேதசுருதிப் பிரமாணங்களெல்லாம் கோர்ட்டாரவர்கள் நன்றாய்ப்பரிசோதித்து ஆலோசனை செய்யுமளவில் சுருதிப்பிரமாணமாயும் சாஸ்திரோக்தமாயும் வாதிகளாகிய தாங்களே விஸ்வப்பிராமணரென்றும் பிரதிவாதிகள் சங்கரசாதியென்றும் ஆக்ஷேபித்து வேண்டியசமாதானம்சொல்லுகிறார்கள்.

(௨) பிரதிவாதிகள் தாங்கள் பிராமணாளாயிருப்பது ஆன்லரின் கண்டபடிக்கு வாதிகளை பஞ்சமசாதியென்று சொல்வது யதார்த்தமாயிருந்தால் யாதொருவசனமூலமாவது சமாதானஞ்சொல்லாமலும் அல்லது அவர்கள் சொல்லப்பட்டசாஸ்திரம் நூதனமொன்றாவது வேறேவிதமான தாத்பரியமிருக்குமென்றாவது ஆக்ஷேபிக்காமற்போனபடியால் பரிகாரப்பட்டிருக்கமாட்டாது,

(௩) புராணங்கள் மூலமாய் பிரதிவாதிகள் முன்னோர்களாகிய ரிஷிகளின் ஜநநங்களைப் பரிசோதித்தால் வாதிகள் ரிப்பிள்ளையிற் சொல்லிய வச்சிரசூசிமுதலான சுருதிவாக்கியத்திலும் பிரம்மஞானியான வேமநசதகத்திற்கும் இணங்கியிருப்பதாக அபிப்பிராயப்படுவதுமன்றியில் மேற்படி பிரதிவாதிகளின் ரிஷிகளை மேற்படிவாதிகள் ரிப்பிள்ளையிற்சொல்லிய பதினைந்து ரிஷிகளும் தங்கள் ரிஷிகளல்லவென்றாவது மறுதலிக்காமல் பிரம்மபீஜத்துக்கு உற்பவமான ரிஷிகளென்று சொல்வதைக்கேட்டால் பிரம்மாவானவர் நீதியைத்தப்பி ஒருபோதும் நீச்சசாதிகளிடத்திலும் ஜெந்துக்களிடத்திலும் சம்பந்தஞ்செய்து இருக்கமாட்டார் அப்படியிருப்பது யதார்த்தமாயிருந்தால் ரிஷிமூலங்கள் சொல்லக்கூடாதென்று புராணங்களில் கட்டுப்பாடுசெய்திருக்கும்படியாக நிமித்தியமிராது.

(௪) பாப்பாரின் கோத்திரங்களிலும் பிறவனையென்று சொல்லப்பட்ட உற்பத்தியும் சாஸ்திரபூர்வீகமாய்த் தெரியப்படுத்தும்படிக்கி

மேற்படி ஜில்லா சதுர்மீன்பண்டிதருக்கு சகஸ்திரநாமா எழுதிதெரிவித்ததிலும் மேற்கண்ட பதினைந்து ரிஷிகளுடைய உற்பத்திஸ்தானமாயிருக்கின்றது மேலும் அவர்கள் உலகத்தில் பிரம்மக்ஷத்திரியவைசிய சூத்திரஜாதிமுதலான சகலவர்ணாச்சிரமங்களும் ஏற்பாடானவெகுகாலத்திற்குப் பின்பு ஜனித்த முனிகளாயிருக்கிறார்கள் அப்பேர்ப்பட்ட ரிஷிகளின் வம்மிசத்தாளாகிய பிரதிவாதிகள் சிருஷ்டி ஆதியிலே ஜனித்த பிரம்ம வம்மிசத்தாரென்பதற்கு யாதொரு நியாயமுங் காணப்படவில்லை.

(௫) பிரதிவாதிகள் சகல வர்ணாச்சிரமத்தாருக்கும் உயர்ந்தபிராம்மணளாயிருப்பார்களேயாகில் பிரம்மசிருஷ்டிக்குக் கொஞ்சம்சம்மந்தியாகிய சகலத்துக்கும் ஆதாரமான கர்மம் அவசியமாக இருக்கவேணும் அப்படிக்கொன்றுமில்லாமல் ஜோகி சங்கமரைப்போலவே யாசித்து ஜீவனஞ்செய்யும்படி பரிச்சேதம்விதிவிருக்கமாட்டாது.

(௬) வாதிகள் தஸ்தாவேசுகளாக தாக்கல்செய்திருக்கிறவேதசாஸ்திரங்களைப் பரிசோதனைசெய்ததில் உபயவாதிகள் பாராயணஞ்செய்துக்கொண்டு வரப்பட்டவர்களாக இருந்தபோதைக்கும் அந்தவேதங்களில் ஒருவரியாவது ஒரு அட்சரமாவது பிரதிவாதிகளுக்கும் அவர்கள் முன்னோர்களாகிய முநிகளுக்கும மற்றவர்களுக்கும் பாத்தியமுண்டாயிருப்பதாகக் காணப்படவில்லை முன்னோர்களாகிய ரிஷி முனிகள் லோகப்பிரசித்தமாய் நீச்சஜாதியில் பிறந்தவர்களாகவிருக்கையில் அவர்களுடைய வம்மிசத்தாளாகிய பிரதிவாதிகளை சர்வசிரேஷ்டாளென்று ஒப்புக்கொள்வது சாஸ்திரவிசாரணையில்லாமையாயும் அறிவில்லாமையாயும் இருக்கிறது ஆனால் முன்னாலே சிலதேசங்களுக்குப் பாளையக்காரர்களாயிருந்த அவிவேகதுரைத்தனத்தாரையும் சிலமூடஜனங்களையும் எவ்விதமோ சூதடியினாலே மோசடிசெய்து நாளதுவரைக்கும் குருஆண்மை செலுத்திக்கொண்டு வருகிறார்கள் அப்படிப்பட்ட மோசடிகளைக் கண்டுபிடித்து வர்ணாச்சிரதர்மங்களை யறிந்துபரிபாலனஞ்செய்வது கனம்பொருந்திய கவர்ன்மெண்டு துரைத்தனத்தாரைச்சார்ந்தநீதியாயிருக்கின்றது.

(எ) வாதிகள். பிரியாதிலும் ரிப்பிளையிலுஞ் சொல்லியிருக்கிற -வதானுசாரமால் பஞ்சமுகப்பிரம்மாவின் சிருஷ்டி பாரம்பரையினு டைய வம்மிசத்தார்களாகவும் உலகசம்ரட்சணைக்காக ஈஸ்வரனுடைய ஆக்கினையென்கிற சுருதிவாக்கியப்படிக்கு சமஸ்தருக்கும் ஆதாரமான பிரம்மகர்மமென்கிற பஞ்சவிதகர்மங்களை வாதிகள் செய்துகொண்டு வருவதினாலே உலகசம்ரட்சணையாகி வருகிறதாக எசுர்வேதமுங்லான தும் முறையிட்டுக்கொண்டுவருவதினால் ஈஸ்வரரூபமாகிய ஆகாசபூத மான சகலத்திலும் வியாபித்திருக்கிறாப்போல் வாதிகள் செய்யப்பட் ட பஞ்சகிருத்தியங்கள் ஜகமுழுதுக்கும் பிபிலிகாதி ஜந்துக்களுக்கும் ஆதாரமாய் சர்வசித்திவியாபியாய் வியாபித்துக்கொண்டிருப்பதால் வேதசம்மதியாய் பிரத்தியட்சமான பிரமாணமென்று நம்புகறுக்குப் போதுமான திருப்திகரமுண்டாயிருக்கிறது,

(அ) பாரதமுதலான கற்பனைபுராணங்களில் விஸ்வப்பிரமாவை க்கொஞ்சம் நிக்ருஷ்டமாயெழுதியிருப்பதை ஆலோசித்தால் வாதிக ளுக்கு ஏற்பாடலாயிருக்கிற வேதத்தைப் பார்த்து பிரதிவாதிகள் ம னஞ்சகிக்கமாட்டாமல் தூட்கித்துப் புராணக்கட்டுக்கதைகள் செய் திருக்கிறார்கள் அப்படி யிருந்தபோதைக்கும் சகல சாஸ்திரங்களுக்கு ம்சாட்சியாயிருக்கிற ஆதிவேதங்கள் சிரேஷ்டமாயிருக்கிறதினால் புரா ணங்களின் கட்டுக்கதைகள் உபயோகப்படமாட்டாது

(கூ) பிரியாதில் கண்டபடிக்கு வாதிகளைப் பிரதிவாதிகள் கும்ப ல்கூடியடித்து கலியாணமுகூர்த்தங்களை நடவாமல் தடங்கல் செய்து குந்தப்படுத்தினதாகவும் வாதிகள்சாட்சி நாகோசிராவ் சுப்பராயமுத லி வெங்கட்ராமநாய்க்கன் முதலான பதினைந்துபேர்களாலும் மஜிஸ் ரேட் டைரியினாலும் ருசுவாயிருக்கிறதினால் கலியாண சாமக்கிரியநஷ் டம் ரூபா-௫௫௰ - ம் இதற்கடியில் காண்கிற கோட்டுச் செலவுகளும் வாதிகளுக்குப் பிரதிவாதிகள் கொடுக்கும்படியாயும். வாதிகள் தங்க

ளுக்குண்டாயிருக்கிற பாத்தியப்படிக்கு வேதபாருயணை முதலியது ஞ்செய்துகொண்டு சகல கிரியைகளையும் தாராளமாய் நடத்திக்கொண் டுவரும்படியாயும் அதில் பிரதிவாதிகள் பிரவேசிக்கக் கூடாதென்றும் தீர்மானிக்கலாச்சு.

46018

| வாதிகளுக்கு நேரிட்ட செலவு | ரூபா. | அணா. | பை. |
|---|---|---|---|
| சபாகாகிதக்கிரயம் | ௫௰ | ௪ | ,, |
| வைக்கீல்வர்த்தனை | ௨௭ | ௮ | ,, |
| சம்மன்படி | ௫ | ,, | ,, |
| சாட்சிபடி | ௯ | ,, | ,, |
| ஆ ரூபா. | ௯௰௧. | ௰௨ | ,, |

| பிரதிவாதிகளுக்கு நேரிட்ட செலவு. | ரூபா. | அணா | பை. |
|---|---|---|---|
| சபாகாகிதக்கிரயம் | ௰௫ | ௪ | ,, |
| வைக்கீல்வர்த்தனை | ௨௭ | ௮ | ,, |
| சம்மன்படி | ௪ | ,, | ,, |
| சாட்சிபடி | ௫ | ,, | ,, |
| ஆ ரூபா. | ௫௰௧ | ௧௨ | ,, |

இந்தப்படிக்கு ௲௮௰௮ டிசம்பர்மீ ௰௫உ சித்தூர்ஜில்லா அதாலத்துகோர்ட்டாருடைய தீர்மானம் அசலுக்குச்சரியான நகல்.

கடவுள் துணை.

சென்னப்பட்டணம்

விஸ்வப்பிரம்ம சபையின்

# கையொப்பக்காரர்கள்.

தி. ந-மாசிலாமணி ஆசாரியார்
வே. சுந்தராசாரியார்
வே. தியாகராஜ ஆசாரி
க. லட்சுமணாச்சாரி
வி. கிருஷ்ணபக்தர்
மெ-பரமானந்தாசாரி
வெ. முனிசாமி ஆசாரி
மெ. மன்னாதாசாரி
வி-வெங்கடசாமி ஆசாரி
ப-கந்தப்ப ஆசாரி
ப. ஆநந்த ஆசாரி
சே. குமாரராயவாசாரி
வெ. ஆறுமுகவாசாரி
ந-வேலாயுதாசாரி
பு. ராசுபக்தர்
ம. அருணாசல ஆசாரி
தா-பாவாடை ஆசாரி
மை-கிருஷ்ணப்பாசாரி
மொ-மன்னப்பாசாரி
உ-பச்சைப்பாசாரி
வெ-முத்தியாசாரி
பே-கோவிந்தாசாரி
ப-வீரபத்திர ஆசாரி
தி-ஆதிமூல ஆசாரி

கா-நடேஸ்வர ஆச்சாரி
ம. சிவகுருநாதாச்சாரி
கோ-நமசிவாய ஆசாரி
செ-ஆண்டியப்பாசாரி
பி-கொழுந்தை ஆச்சாரி
தி-முத்தியாசாரி
பு. சுப்பராய ஆசாரி
பெ-அப்பாசாமி ஆசாரி
து-சுப்பராய ஆசாரி
வெ. முருகப்பாசாரி
செ-சிங்காரவேலாசாரி
தா-ராமசாச்சாரி
ஆ-வயித்தியாசாரி
சி-சுப்பிரமணி ஆசாரி
கொ-குமாரசாமி ஆசாரி
மொ-பழனி ஆசாரி
செ-ஏகாம்பர ஆசாரி
கொ-தெய்வசிகாமணி ஆசாரி
கோ-வேலாயுதாசாரி
பு-பொதுவாச்சாரி
வ-குமாரசாமி ஆசாரி
கொ-செங்கல்வராய ஆசாரி
ஓ-சுப்பராய ஆசாரி
கோ-மொட்டை ஆசாரி

# அட்டவணை


க-அண்டபுவனம்
உ-விராட்புருஷன்
ந-பரப்பிரம்மம்
ச-பரமந்திற்கு
ரு-பிரமபுராணம்
சா-சிருஷ்டி
எ-திதி
அ-சங்காரம்
கூ-திரோபவம்
ய-அநுக்கிரகம்
கக-மனுவாச்சாரி
கஉ-மயாச்சாரி
கந-துவஷ்டாச்சாரி
கச-சிற்பியாச்சாரி
கரு-விஸ்வஜனஆச்சாரி
கசா-க்ஷத்திரியர்
கஎ-வைசியர்
கஅ-சூத்திரர்
ககூ-பிரமசாரி
உய-கிரகஸ்தன்
உக-வானப்பிரஸ்தன்
உஉ-சந்நியாசி
உந-சிவசிருஷ்டி
உச-விஸ்வப்பிரம்மம்
உரு-வியாசன்உற்பத்தி
உசா-தேவர்களுற்பத்தி
உஎ-திரிமூர்த்திநடபடிக்கை
உஅ-தேவேந்திரன்நடபடிக்கை
உகூ-பிரம்மாவின்நடபடிக்கை
நய-சுப்பிரமணியர்உற்பத்தி
நக-கிருஷ்ணன்நடபடிக்கை
நஉ-விஷ்ணுஅவதாரம்
நந-காநதக்கற்கோட்டை
நச-தர்ணிமஹாராஜன்
நரு-தேசாதிபத்தண்ணாசு
நசா-காளிங்கராசன்
நஎ-தேசாதிபதிஜய்வீராசு
நஅ-வியாசன்மித்திரபேதம்
நகூ-வியாசன்காமற்றது
சய-கலியுகதர்மம்
சக-திரேதாயுகதர்மம்
சஉ-யுகதர்மம்வித்தியாசம்
சந-பஞ்சமசாதி
சச-ரிஷிகளாயிகழ்ந்தது
சரு-ரிஷிகள்மகத்துவம்
சசா-பஞ்சாநநோற்பவம்
சஎ-பஞ்சமுகம்
சஅ-மாலகுலம்
சகூ-பிராமணறேணு
ருய-இராமாயணம்
ருக-மதுமாமிசபட்சணம்
ருஉ-குருபீடம்
ருந-இராஜாராஜாக்கள்
ருச-சாப்பிடுகிறார்கள்
ருரு-பஞ்சகிருத்தியம்
ருசா-மதுமாமிசபக்ஷணை
ருஎ-பாகாகிகிர்த்தியங்கள்
ருஅ-பிரம்மவம்மிசம்
ருகூ-பிளண்ட[illegible]
சாய-பிரம்மவம்மி[illegible]
சாக-பஞ்சாயத்தார்[illegible]
சாஉ-தூஷித்தது
சாந-சோமசுந்தரபிள்ளை
சாச-வேதாத்தியாயனம்
சாரு-அடிதடிசண்டை
சாசா-மாஜிஸ்ட்ரேட்துரைகள்
சாஎ-விண்ணப்பம்
சாஅ-வேதச்சுருதிப்பிரமாணம்
சாகூ-அபராதம்போட்டது
எய-சித்தூர்ஜில்லாதீர்ப்பு